# வீரபாண்டியக் கட்டபொம்மு

# விவாத மேடை



N09/92

REGISTRAR OF BOOKS
INFORMATION & TOURISM DEPT.
... MADRAS

# வீரபாண்டியக் கட்டபொம்மு

# விவாத மேடை

துணை இயக்குநர்
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை
14 AUG 1992
சென்னை - 600 009.

**வே. மாணிக்கம்**
தமிழ்த்துறை
தூய யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை

**ஜெயா பதிப்பகம்**
4A. பக்தராய்ப்பணிவார் தெரு
பாளையங்கோட்டை - 627 002.

முதற் பதிப்பு - மார்ச்சு 1992

V211:51547
N92

விலை ரூ. 16

ஆவணக்காப்பக
182431
சென்னை-600 008.

அச்சிட்டோர் :

முத்துலட்சுமி பிரஸ்
123C, திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை.

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| தி. நா. சு. | - | தி. நா. சுப்பிரமணியன் |
| க. பொ. வ. | - | கட்டபொம்மன் வரலாறு |
| க. பொ. கூ. | - | கட்டபொம்மன் கூத்து |
| ஜெக. | - | ஜெகவீரபாண்டியன் ஏடு |
| இராம. | - | இராமச்சந்திரன் ஏடு |
| நட. | - | தி. நடராசன் (பதிப்பு) |
| மா. | - | வே. மாணிக்கம் (பதிப்பு) |
| ப. | - | பக்கம் |
| பக் | - | பக்கங்கள் |
| மே. ப. நூ. | - | மேற்படி நூல் |
| ப. ஆ. | - | பதிப்பாசிரியர் |
| R. C. | - | Revenue Consultations |

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆராய்ச்சியா? அரசியலா? | 1 |
| 2. | மருட்டும் நூற்பட்டியல் | 7 |
| 3. | படிக்காமலேயே பழிசொல்லலாமா? | 9 |
| 4. | கதைப்பாடல் கத்தி முனையில் பாடப்பட்டதா? | 14 |
| 5. | கதைப்பாடல்கள் சான்றுகள் ஆகாதா? | 19 |
| 6, | சான்றுகள் அல்ல என்ற பாடலைச் சான்று காட்டலாமா? | 24 |
| 7. | கட்டபொம்மு முன்னோர் யார்? | 30 |
| 8. | பொய்யான கொலைக் குற்றச்சாட்டு | 37 |
| 9. | கட்டபொம்முவும் இராமநாதபுரம் பேட்டியும் | 41 |
| 10. | தானாதிபதிக்கு அடைக்கலம் கொடுத்ததேன்? | 56 |
| 11. | கோட்டையை விட்டுத் தப்பியது தவறா? | 61 |
| 12. | இப்படியும் ஒரு பொய்யா? | 69 |
| 13. | காலில் விழுந்திருப்பாரா கட்டபொம்மு? | 72 |
| 14. | கொடிய தண்டனையை நியாயப்படுத்தலாமா? | 77 |
| 15. | கொள்ளைக்காரன்யார்? | 82 |
| 16. | முடிவுரை. | 99 |
| | பின்னிணைப்பு. | 102 |

## மதிப்புரை

டாக்டர். தே. லூர்து,
தலைவர்,
நாட்டார் வழக்காற்றியல் துறை,
தூய சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை – 627 002

---

இனம், சாதி, மதம், மொழி, முதலாளித்துவம் போன்றவற்றின் பெயரால் ஏகாதிபத்திய வெறிகொண்ட ஆளும் அதிகார வர்க்கங்கள் அடக்குமுறையில் ஈடுபடும். அதற்கு எதிராக வீர சுதந்திரம் வேண்டிநின்றோர் விடுதலைப் புலிகளாக வீர முழக்கமிடுவர். இது காலங்காலமாக நடைபெற்றுவரும் வரலாற்று உண்மை. ஆனால் அடக்கு முறையில் ஈடுபடும் எந்தவொரு ஆளும் அதிகார வர்க்கமும் அவர்களுக்கு எதிராக வாய்கூசாமல் நாத்தழும்பேற இழித்தும் பழித்தும் பொய்ப்பழி தூற்றுவதும் வரலாற்றில் உண்மையே. போராட்டத்தில் ஈடுபடும் போது சாத்தான்களெல்லாம் வேதம் ஓதத் தொடங்கிவிடும். வெறிகொண்ட பாசிச சக்திகள் நீலிக்கண்ணீர் வடிக்கும். இப்பொழுதெல்லாம் வேதத்தை சாத்தான்களே ஓதுகின்றன.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்த கட்டபொம்முவுக்கு எதிராகவும் சாத்தான்களே வேதம் ஓதின. வெள்ளையருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த அவரைப் பற்றித் தமிழ்நாட்டில் சிலர் உண்மைகளை மறைத்துப் பழி தூற்றினர். அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடிய பலரும் இத்தகைய நிலைக்கே ஆளாயினர். தம்மைச் சார்ந்தவர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டனர். 'புல்லுருவி' 'கருங்காலி' 'ஐந்தாம்படை' என்பவை காட்டிக் கொடுப்பவருக்கென்றே தமிழில் வழங்கும் நல்ல தொடர்கள். 'தோளிலிருந்து செவியைக் கடிப்பது', 'உடன்பிறந்தே கொல்லும்

வியாதி'. 'குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்பு' என்பவை அத்தகையோருக்கு வழங்கப்பட்ட நீண்ட மரபுத்தொடர்கள். யூதாஸ், புரூட்டஸ், வீடணன், எட்டப்பன் என்பவை காட்டிக் கொடுப்போருக்கு இன்று அளிக்கப்படும் பட்டங்கள். மைசூர் மாநிலத்தில் விடுதலைப்புலி திப்புவின் கோடைக்கால மாளிகையில் அவரைக் காட்டிக்கொடுத்தவரைப் பற்றிக் குறியீடாக ஒரு படம வரைந்து வைத்துள்ளனர். 'பசு' போல வந்தவன் பன்றியாக மாறிவிட்டான்' என்று காட்டும் படம் அது.

காட்டிக்கொடுக்கப்பட்ட பின்பு பல ஆண்டுகளுக்குப் பின்னரும் சிலர் கட்டபொம்முவைக் கொள்ளைக்காரன் என்று பழி தூற்றினர். உண்மையை மறைத்துத் தங்களுக்கு ஏற்பத் திரித்து எழுதினர். நடுநிலையில் நின்று எழுதுவதாகவும் சொல்லிக் கொண்டனர். புகழ் வாய்ந்தோரைப் பற்றிப் பழிப்புரை கூறினால் அதனை உலகம் வியப்போடு நோக்கும் என்று எண்ணி அதனை முதலாக வைத்து எழுதப்பட்ட வியாபார எழுத்துக்கள் அவை. இந்த நிலையில் அத்தகைய கருத்துகளுக்கு ஆணித்தரமாகப் பதிலிறுப் போர் இல்லாமல் போயினர். ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக் குப் பிறகு வரலாற்றுச் சான்றுகளைத் தேடித் துருவி உண்மை களை உலகுக்கு எடுத்துரைக்கிறார் நண்பர் மாணிக்கம். கட்ட பொம்முவைப் பற்றிய கதைப்பாடல்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டவர் அவர். கட்டபொம்முவைப் பற்றி எழுதிய பொருள் யார் யார் எந்தெந்த நோக்கில் எழுதியுள்ளனர்? ஏன் அவ்வாறு எழுதினர்? எவ்வாறு தமக்கு ஏற்பத் திரித்துக் கொண்டனர்? என்பதையெல்லாம் இந்த நூலில் அவர் மிகத் தெளிவாகப் 'புட்டுப் புட்டு'' வைக்கிறார். இதற்காக அவர் ஆழ்ந்த களஆய்வு செய் துள்ளார். சான்றாதாரங்களைத் தேடித் தொகுத்துள்ளார். பல வரலாற்று நூல்களைப் பயின்றுள்ளார். கதைப்பாடல்கள் பல வற்றைத் தொகுத்துள்ளார். பழிப்புரை கூறியோர்க்கு ஆணித்தர மாகப் பதிலளித்துள்ளார். உண்மையைத் தவிர அவர் வேறு எதை யும் தேடவில்லை. தொண்டைக்குழியில் ஜீவனுள்ள வரையில் போரிட்ட வீரபாண்டியக் கட்டபொம்முவைப் பற்றிய உண்மைகள் எல்லாவற்றையும் வெளிக்கொண்டு வந்துள்ளார். அவர் இந்த நூலில் மட்டுமல்லாது வாழ்க்கையிலும் உண்மைகளைக் கண்ணின்று கண்ணறச் சொல்பவர். அதனை இந்நூலைப் படிப் பார் உணர முடியும். இந்நூலைப் படிப்பார் மாணிக்கம் ஒரு மாணிக்கம் என்று உணர்வர். இந்த நூல் வரலாற்றுக்கு ஒரு நன்கொடை, எத்தனை ஆண்டுகளானாலும் உண்மையே நிலைத்து நிற்கும். காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ!

அன்புள்ள

25—2—1992 தே. ஞார்து

# உங்களோடு சில மணித்துளிகள்

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் இந்திய வரலாறு பெரும்பாலும் இந்தியாவில் வாழ்ந்த வெளிநாட்டவராலும், ஆங்கிலக் கல்வி கற்று, ஆங்கில அரசுக்கு விசுவாசமாக விளங்கிய இந்தியராலும் எழுதப்பட்டது. இவர்கள் தாங்கள் எழுதிய வரலாற்றிற்கு வெள்ளையர் அரசால் எழுதிவைக்கப்பட்ட ஆவணச் சான்றுகளையே ஆதாரமாகக் கொண்டனர். உள்நாட்டுச் சான்றாதாரங்களை நம்பத் தகுந்தவை அல்ல என ஒதுக்கினர். ஆங்கில அதிகாரிகளின் நலத்திற்காக, இந்த நாட்டு மொழிகள் தகுதியற்றவை என்று முத்திரையிடப்பட்டன. இந்த மண்ணில் எஞ்சி நின்ற கட்டிடச் சிற்ப, ஓவியக் கலைகளின் பெருமைகள் மறைக்கப்பட்டன. இந்த நாட்டில் மருத்துவம், வரலாறு, தொழில்நுட்பம், இலக்கியம் அனைத்தும் ஒதுக்கப்பட்டன. இவர்களது நூல்கள் இந்தியருக்கு எந்தத் திறமையும் தகுதியும் இல்லை என்ற கண்ணோட்டத்தை உருவாக்கின. இதன் மூலம் இந்தியர் உள்ளத்தளவில் ஆங்கிலேய அடிமைகளாக்கப்பட்டனர். இவற்றை வரலாற்று நூல்கள் என்பதை விட ஆளும்கட்சி அறிக்கைகள் என்றே சொல்ல வேண்டும்.

இந்த வகை நூல்கள் வெள்ளையரை நீதிநெறி தவறாத அவதார புருடர்கள் என்றும். அவர்களது ஆதிக்கத்தை எதிர்த்தவர்களைக் கொடுமைக்காரர்கள், பொய்மை நிரம்பியவர்கள், கோழைகள், வன்முறையாளர்கள், கொள்ளைக்காரர்கள் என்றும் கொச்சைப்படுத்தின. இவை வெள்ளையர் அரசிற்கு விசுவாசிகளை உருவாக்கவும், அவர்களது நாடு பிடிக்கும் ஆதிக்கக் கொடுஞ் செயல்களை மூடி மறைக்கவும், உள்நாட்டுப் புரட்சியாளர்களை இழிவு படுத்தி ஒதுக்கவும் ஆங்கில அரசிற்கு உறுதுணையாக நின்றன. இந்நூலாசிரியர்கள் ஆட்சியாளர்

விரும்பியதை எல்லாம் உண்மையாக்கி எழுத்தில் உலா வரச் செய்தனர். (1991 ஜனவரி மாத 'நிறப்பிரிகை' இதழில் வெளி வந்த ''மொழியும் காலனி ஆதிக்கமும்'' என்ற கட்டுரை கடந்த காலத்து நிகழ்ந்த எழுத்துலகச் சதிகளை ஆராய்ந்து வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.)

மேற்கூறிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் தான் கால்டுவெல் ''திருநெல்வேலி வரலாறு'' என்ற நூலை எழுதி யுள்ளார். அவரது நூலில் கட்டபொம்முவைப் பற்றிக் குறிப்பிடும் போது, நம் நாட்டில், ''ஆங்கில அரசின் மத்திய காலத்தில் புலித்தேவர் எப்படி விளங்கினாரோ, அவரைப்போலவே கட்ட பொம்மனும் ராஜவிசுவாசமின்மைக்கும், முறையற்ற ஆட்சிக்கும் முதன்மையானவராக விளங்கினார்'' என்கிறார் (ப. 173). கட்ட பொம்முவின் உண்மையான எதிரி வெள்ளையர். இருவரும் ஆறுமுறை போர்க்களத்தில் மோதியுள்ளனர். ஆனால் கால்டுவெல், ''எட்டையபுரத்தாருக்கும் பாஞ்சாலங்குறிச்சியாருக்கும் தீராப்பகை இருந்தது'' என்று கூறுகிறார் (ப. 173). இதன் மூலம் அவர் பகையின் காரணகர்த்தாவாக விளங்கிய வெள்ளையரை வரலாற்றுக் காட்சியில் மறைத்து, மக்கள் சிந்தனையைத் திசை திருப்புவதை நாம் கவனிக்க வேண்டும். கட்டபொம்மு வரலாற் றைக்கூறும் கதைப்பாடல்களைக், ''கற்பனை நிறைந்தவை'' என்று கால்டுவெல் எளிதாக ஒதுக்கித் தள்ளுகிறார். (பக். 207, 208) கால்டுவெல் அமைத்த இந்தப் பாதையில்தான், பிற்காலத்தில் திருநெல்வேலி வரலாற்றை எழுதிய குருகுகதாசப் பிள்ளை, கணபதியா பிள்ளை போன்றோர் வழி நடந்தனர்.

இத்தகைய வரலாற்று நூல்களைப் படித்த சிலர் இந்த நூல் களின் வஞ்சகக் கண்ணோட்டத்தைப் புரிந்துகொள்ளாமல், இவை கூறும் செய்திகளை உண்மையெனக் கொண்டு வரலாற்றுப் புரட்சி வீரர்களில் ஒருவராகிய கட்டபொம்முவை மாசுபடுத்தி எழுதினர். இவர்களில் முக்கியமானவர்கள் சிரஞ்சீவி, துர்க்கா தாஸ்சுவாமி, தமிழ்வாணன், போன்றோராவர். வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து வீரமரணமடைந்த கட்டபொம்முவைக் கோழை என்றும், கொள்ளைக்காரன் என்றும் கொச்சைப்படுத் தினர். இவர்களது பிதற்றலின் உச்சகட்டமே தமிழ்வாணனின் ''கட்டபொம்மன் கொள்ளைக்காரன்'' என்ற நூலாகும்.

கட்டபொம்மன் ஆய்வு சம்பந்தமாக நான் சென்ற இடங்களில் எல்லாம் தமிழ்வாணன் நூல்பற்றிக் கேள்விகள் என்னிடம் கேட் கப்பட்டன. அவர்களிடம் தமிழ்வாணனின் சதியை ஆதாரங்க ளோடு அம்பலப்படுத்தினேன். என்னுடைய விவாதங்களை ஆர்வத்தோடு கேட்ட நண்பர்கள் அனைவரும், இதை ஒருநூலாக

வெளியிட வேண்டும் என்று வற்புறுத்தினர். அதன் விளைவாக வே ''வீரபாண்டியக் கட்டபொம்மு விவாதமேடை'' என்ற இந் நூல் உருவாகியது. தமிழ்வாணனின் ''கட்டபொம்மன் கொள் ளைக்காரன்'' என்ற விவாதத்திற்குரிய நூல் இப்பொழுது நூல கங்களில் மட்டுமே உள்ளது விற்பனைக்கு வெளியில் கிடைப்ப தில்லை. எனவே வாசகர்களுக்கு எழும் பிரச்சினையை மனத்திற் கொண்டு, தமிழ்வாணன் கூறும் குற்றச்சாட்டுப் பகுதிகள் முழு வதையும் அப்படியே மேற்கோளாகக் கொடுத்துள்ளேன். பக்கங்களை மேற்கோளின் முடிவிலேயே சுட்டியுள்ளேன்.

தமிழ்வாணன் மறைந்த பிறகு அவருடைய நூலை மறுத்து எழுதுவது நாகரிகமாகுமா? என்ற கேள்வி எழலாம். ஒருவர் இறந்துவிட்டார் என்பதாலேயே அவர் செய்த சமூகத் தவறுகளை யும் வரலாற்று அநீதிகளையும் மறந்து அவரைத் தியாகியாக்கி விட முடியாது. அதுவும் எழுத்துலகில் ஒருவர் செய்த தவறுகளை நிச்சயமாக மறக்க முடியாது; மன்னிக்க இயலாது. தமிழ்வாணன் மறைந்து விட்டாலும் அவர் எழுதிய ''கட்டபொம்மன் கொள் ளைக்காரன்'' என்ற வரலாற்று உண்மைக்குப் புறம்பான நூல், இன்றும் உயிரோடு உள்ளது. தமிழ்வாணன் கல்கண்டில் எழுதிய காலத்திலேயே அறிஞர்கள் பலர் கண்டித்துள்ளனர். ம. பொ. சி. தம்முடைய 'சுதந்திர வீரன் கட்டபொம்மு' என்ற நூலில் தமிழ்வாணனின் சுயநலப் போக்கைச் சுட்டிக்காட்டி உள்ளார். ஆனால், தமிழ்வாணன் கூறும் கட்டபொம்மு பற்றிய பொய்க் குற்றச்சாட்டுகளை முழுமையாகச் சான்றாதாரங்களோடு யாரும் மறுத்து எழுதவில்லை. எனவே தமிழ்வாணன் நூலைப் படிக்கும் வாய்ப்பைப் பெறும் ஒவ்வொரு தலைமுறையினரும், இதன் நச்சுத் தன்மையை அறியாமல் உண்மை என்று நம்ப வாய்ப்பு உள்ளது. தமிழ்வாணன் நூலுக்கு இந்த மறுப்பு காலம் கடந்து எழுதப் பட்டாலும் அவசியமான ஒன்றாகும். தமிழ்வாணன் உள்நோக்கத் தோடு கூறும் முழுப்பொய்யை மறுக்கும் போது, சில இடங்களில் உணர்ச்சிகரமான சொற்கள் இடம் பெறுவதை என்னால் தவிர்க்க இயலவில்லை.

இந்த நூல் சிறப்புற அமையப் பல வகையிலும் எனக்கு உதவி புரிந்து ஊக்கம் அளித்த, சொற்செல்வர், திரு. சி. சு. மணி, டாக்டர். தே. லூர்து. டாக்டர். நெல்லை க. சுப்பிரமணியன், டாக்டர். தொ. பரமசிவன், டாக்டர். மு. இராமசாமி, பேரா. திரு. லெஸ்லி ஜேக்கப், திரு. திவான், கல்வெட்டுத்துறைப் பேராசிரியர் செ. இராசு, மதுரைப்பல்கலைக் கழகத்தில் பணி புரியும் திரு. ராஜு ஆகியோருக்கு நன்றி. ஆர்வத்தோடு இந் நூலை அச்சிட்டுக் கொடுத்த முத்துலட்சுமி அச்சகத்தாருக்கும் நன்றி.

அன்புள்ள
வே. மாணிக்கம்.

25—2—1992

# ஒரு தேவை நிறை வேறுகிறது

வரலாற்றுப் பார்வைகள் மாறி வருகின்றன. வரலாற்று ஆசிரியர்கள் தன் விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்துவிட்டே வரலாற்றை அணுகுதல் வேண்டும் என்ற நெறிமுறை வளர்ந்து வருகிறது. ஆங்கில வரலாற்று ஆசிரியர்களால் சிப்பாய்க்கலகம் என்று வருணிக்கப்பட்ட நிகழ்ச்சி விடுதலைப் போர் என்று நம் காலத்திலேயே மறு பெயர் சூட்டப்படுவதைக் காண்கிறோம். அதிகாரத்தில் இருப்பவர்களை மகிழ்விப்பதற்காகப் பொய்மையும் புனைந்துரையும் வரலாறு என்ற பெயரில் அரங்கேற்றப் படுகின்றன. சிலர் மீது அவர்களுக்கு இல்லாத பெருமை ஏற்றி உரைக்கப்படுகிறது. வேறு சிலரோ வரலாற்றின் பார்வையில் இருந்தே மறைக்கப்படுகின்றனர். கால வெள்ளத்தில் பொய்கள் கரைந்து போகின்றன.

பழி சுமத்தப்பட்ட பிரெஞ்சு நாட்டுப் படைத்தலைவன் டிரேஃப்பஸ் பலமுறை நீதிமன்றங்களில் ஏறியும் நீதி கிடைக்க வில்லை. எழுத்தாளர் எமிலிசோலா தன் கூரிய பேனா முனை யால் நீதியைச் சுற்றி இடப்பட்டிருந்த திரையைக் கிழித்து உண்மையை உலகிற்கு உணர்த்தினார். சோலாவின் முயற்சியால் டிரேஃப்பஸ் மீது சுமத்தப்பட்டிருந்த பழி துடைக்கப்பட்டது. அவன் வாழும் காலத்திலேயே அவன் குற்றமற்றவன் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

வீரபாண்டியக் கட்டபொம்மு ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கண்களிலே கொள்ளைக்காரன், அரசதுரோகி. அவர்கள் அப்படித் தான் எழுதுவார்கள். விடுதலைக்கான விலையைக் கட்டபொம்மு கொடுத்தான பிறகு, அவன் நாட்டுமக்கள் அடிமையாக்கப்பட்டு அதன் பின்னர் விடுதலை பெற்ற பிறகு, தமிழ்வாணன், சிரஞ்சீவி, துர்க்காதாஸ் ஸ்வாமி போன்றவர்கள் ஏனோ அவன் மீது, மீண்டும் சேற்றை வாரி இறைந்தார்கள். அதை வரலாற்றுச் சான்றாதாரங்களோடு துடைப்பதற்கு இதுவரை யாரும் முன் வரவில்லை. நண்பர் திரு. வே. மாணிக்கம் அவர்கள் வரலாற்றுச் சான்றுகளைப் பல்லாண்டுகளாகத் தேடித்தேடிச் சேர்த்து, தீவிர மான கள ஆய்வினை மேற்கொண்டு, கட்டபொம்மு மீது இறைக்கப்பட்ட அவதூறுகளை இந்த நூலின் மூலம் துடைத் தெறிகிறார். இந்த நூலின் ஒவ்வொரு வரியிலும் அவருடைய ஓயாத உழைப்பும் நுணுகிய ஆய்வுத் திறனும் ஒருபால் கோடாத வரலாற்றுப் பார்வையும் புலப்படுகிறது. இது போன்ற தெளிந்த நோக்கும் செவ்விய ஆய்வும் கொண்ட பல நூல்கள், பலதுறை களில் தமிழ் நாட்டுக்குத் தேவை.

பாளையங்கோட்டை
26—3—1992

சி. சு. மணி

1.

---

## ஆராய்ச்சியா? அரசியலா?

ஓர் ஆராய்ச்சியாளர் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதில் சில நெறிமுறைகள் உள்ளன. இதைத் தமிழ்வாணனும் தம்முடைய நூலில், ''காய்தல் உவத்தலின்றி நடுநிலை மனப் பான்மையோடு ஒரு பொருளை ஆராய்ந்து முடிவுகாண வேண்டியதே ஆராய்ச்சியாளரின் கடமை'' என்று குறிப்பிட்டுள்ளார். (பக் 188–189). ஆனால் தமிழ்வாணன் அந்தக் கடமையிலிருந்து சறுக்கி விழுகிறார். வரைமுறையின்றி வார்த்தைகளை வாரிவீசுகிறார். அவர் கூறிய ஆய்வு நெறிமுறைகளை அவரது நூலின் தொடக்கத்திலேயே தகர்த்து எறிந்து சாக்கடை மணம் கமழச் செய்துள்ளார். தமிழ்வாணனின் ''கட்டபொம்மன் கொள்ளைக்காரன்'' என்ற நூலின் முதல் தலைப்பு ''நூல் தோன்றிய வரலாறு'' என்பதாகும். இதில் தமிழ்வாணன் கட்டபொம்முவுடன் கனவில் சந்தித்துப் பேசுவதாக ஓர் உரையாடல் உள்ளது. இதோ அந்தப் பகுதி.

''உன் பெயர்''?
''நா பேரு கட்டபொம்மு''
''உன் அப்பா பெயர்''?
''நா நயினா பேரு ம. பொ. சி.
''ம. பொ. சி. யா?
''நா நயினா பேரு கூடக் கட்டபொம்முவே''
''உன் ஊர்''?
''மன ஊரு பாஞ்சாலங்குறிச்சி''

''உண்மையைச் சொல், பாஞ்சாலங் குறிச்சியா உன் சொந்த ஊர்?''

''லேது; மன சொந்த தேசமு ஆந்திர தேசமு''.

''சரி; என்னைத் தேடி ஏன் வந்தாய்? நான் உனக்கு இப்போது என்ன செய்யவேண்டும்?''

''நன்னு, நா நயினா ம. பொ. சி. னு தொந்தரவு சேய கொண்டா வதிலி தேசாரு''

''அது எப்படி முடியும். உன்னையும் ம. பொ. சியையும் விட்டுவிட்டால் என்னைத் தமிழர்கள் விடமாட்டார் களே?''

''கொஞ்சம் தயவு சேயண்டி''. (பக் 17–18)

மனித நாகரிகம் கொண்ட எவரேனும் இந்த உரையாடலைச் சகித்துக் கொள்வார்களா? இதுதான் நடுநிலை மனப்பான்மை யுடன் கூடிய ஆராய்ச்சியா? இது தமிழ்வாணன் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் குரோதம், தன்னலம், தற்சார்பு, வெறுப்பு ஆகிய அனைத்தையும் அடையாளம் காட்டுகிறது.

தமிழ்வாணன் விடுதலைப் போராட்டத்தின் போது மாணவர் காங்கிரஸ் தலைவராக இருந்தாராம். திலகர், காந்தி, நேரு, படேல். போன்ற போராட்ட வீரர்களை எல்லாம் தமிழ்வாணன் தன் தலைவர்களாக ஏற்றுக்கொள்கிறார். இவர்களைப் பம்பாய்க்காரன், காஷ்மீர்க்காரன், வங்கதேசத்துக்காரன், இந்தி பேசுபவன் என்றெல்லாம் நிறம் பார்த்தும், இனம்பிரித்தும் பார்க்கவில்லை.

தமிழிலிருந்து தனி வடிவம் பெற்ற மொழி பேசுபவரைத் தெலுங்கன் என்கிறார். தமிழ் இனமாகிய திராவிட இனத்தைச் சேர்ந்தவரை ஆந்திராக்காரன் என்கிறார். நேருவிற்கு ஒரு நீதி, கட்டபொம்முவிற்கு ஒரு நீதியா? நேரு இந்தியன், கட்டபொம்மு இந்தியனில்லையா? சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு விடுதலைக்குப் பின் பெரும் பொறுப்புகளில் அமர்ந்து மன்னர் களைப் போலச் செல்வாக்குடன் வாழ்ந்தவர்களையெல்லாம் பாரதத்தாயின் புதல்வர்கள் என்கிறார். தலைமுறை தலை முறையாக ஆங்கிலேயரை எதிர்த்து, அந்த வேள்வியில் வெந்து சாம்பலான கட்டபொம்மு பாரதத்தாயின் புதல்வராக மாட்டாரா?

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்கள் தமிழ்மொழியின் மீதும், தமிழ் மண்ணின் மீதும் கொண்டிருந்த பற்றிற்கு வர

லாற்றுச் சான்றாதாரம் ஒன்றைக் குறிப்பிடலாம். வீரபாண்டியக் கட்டபொம்முவின் தந்தை ஜெகவீரபாண்டியக் கட்டபொம்மு, செந்திற்பதியில் எழுந்தருளியுள்ள செந்தமிழ்க் கடவுள் முருகப் பெருமானுக்குத் தானம் அளித்த செப்புப்பட்டயம் இன்றும் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. இந்தச் செப்புப் பட்டயச் செய்தியைத் தமிழ்ப் பல்கலைக் கழக கல்வெட்டுத்துறை பேரா சிரியர் செ. இராசு படியெடுத்து வெளிப்படுத்தியுள்ளார். (பார்க்க-பின்னிணைப்பு– 5)

மன்னர்கள் தங்களது தானப் பட்டயங்களில், தங்களுடைய பெருமைக்குரிய விருதுப்பெயர்களைப் பொறிப்பது இயல்பு. அம்மரபுப்படி பாஞ்சாலங்குறிச்சியாரும் தம்முடைய விருதுப் பெயர்களை அந்தப் பட்டயத்தில் பொறித்துள்ளார். அதில் வியப்பிற்குரிய விருதுப்பெயர் ஒன்று உள்ளது. முச்சங்கங்கள் வைத்து, முத்தமிழை வளர்த்த மூவேந்தர்கள் கூட நினைத்தறி யாத ஒரு பெயரைக் கட்டபொம்முவின் முன்னோர் தங்களுக்கு உரியதாக்கி மகிழ்ந்திருக்கிறார்கள். கி. பி. 1779–இல் தரப்பட்ட இந்தச் செப்பேட்டில், பாஞ்சாலங்குறிச்சியார் விருதுப் பெயர் களில் ஒன்றாக ''இயல் இசை நாடக முத்தமிழாதிபன்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. பாஞ்சாலங்குறிச்சியார் தம்மைச் செந்தமிழ் வடிவாய்க்கண்டு சிந்தை மகிழ்ந்துள்ளனர்,

வீரபாண்டியக்கட்டபொம்முவின் அவைப்புலவராகச் சங்கர மூர்த்தி என்ற தமிழ்ப்புலவரே வீற்றிருந்துள்ளார். இவர், புளிய மரத்தின் கிளை ஒடியுமாறும், அசையாமணியின் நா அறுந்து விழுமாறும் பாடும் தெய்வஅருள் நிரம்பியவர் என்று இவர் பாடிய, ''பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழின்'' முன்னுரையில் பதிப்பாசிரியர் குறிப்பிடுகிறார். (பக் XV- XXXXVII), இப்படிப் பட்ட சொல்திறன் மிக்க இப்புலவர். வீரபாண்டியக்கட்டபொம் முவின் பெயரைத் தமக்கு விருப்புடன் சூட்டிக்கொண்டார். மக்கள் இவரை ''வீரபாண்டியப்புலவர்'' என்றே அழைத்தனர். பொது வாகப் புலவர்கள் தமிழைத் தம்பெயரோடு இணைத்துக் கொள் வது இயல்பு. ஆனால் இங்கு அற்புதம் நிகழ்த்தும் அருள் பெற்ற தமிழ்ப்புலவர், ஒரு மன்னன் பெயரைத் தம்பெயரோடு இணைத்துக் கொண்டுள்ளார் இதிலிருந்து கட்டபொம்மு எத்துணை உயர்ந்த பண்பு கொண்டவராக வாழ்ந்திருக்கிறார் என்பதை நாம் அறியமுடிகிறது.

இவ்வாறு தமிழின்மீது தணியா ஆர்வமும் தமிழ்ப்புலவர் களிடம் உயர்ந்த மதிப்பும், தமிழ்த் தெய்வமாகிய முருகன் மீது

பெரும் பக்தியும் கொண்ட பாஞ்சாலங்குறிச்சியாரை இனம் பிரித்துப் பேசுவது நியாயமில்லாத செயலாகும்.

தூக்குக் கயிற்றைக் கண்டுகூட அஞ்சாத கட்டபொம்மு, தமிழ்வாணன் கனவில் வந்து ''தயவுசெய்து'' என்று கெஞ்சிய தாகக் கற்பனை செய்துள்ளார். கற்பனை செய்வதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் அதை எழுதி வெளியிடும் போது தான் நாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

தமிழ்வாணனுக்கு ம. பொ. சி. மீது கோபமிருந்தால், கருத்து வேறுபாடு இருந்தால் அவரோடு நேரடி விவாதத்தில் ஈடுபட்டிருக்கவேண்டும். அது நாகரிகமான செயல். அவரைச், ''சின்னது, சந்தர்ப்பவாதி, கைக்கூலி'' என்று ம. பொ. சி. விமர்சித்தார் என்பதற்காக, வீரபாண்டியக் கட்டபொம்முவை இழிவுபடுத்தி எழுதுவது நியாயமா? இது கணவன் மீதுள்ள சினத்தால் குழந்தையைப் புடைத்தெடுக்கும் மூடப் பெண்ணின் செயல் போல உள்ளது.

''கட்டபொம்மன் தந்தை பெயர் ம. பொ. சி.'' என்று கிண்டல் செய்திருப்பது மட்டரகமான செயலாகும். இந்த உரையாடல் தமிழ்வாணனின் தரக்குறைவை வெளிப்படுத்துகிறது. மூன்றாம் தர மஞ்சள் பத்திரிகையில் எழுதுவது போல எழுதி இருப்பது ஆராய்ச்சி அல்ல—அபத்தம். இதன்மூலம் தம்மைச் ''சின்னது'' என்று ம. பொ. சி. விமர்சித்ததை உண்மையென்று தமிழ்வாணன் நிரூபிக்கிறார்.

தமிழ்வாணன் எழுத்தை ம. பொ. சி. மட்டும் கண்டிக்க வில்லை, அண்ணா, ராஜாஜி, பி. ராமமூர்த்தி, சின்ன அண்ணாமலை போன்ற தலைவர்கள் அனைவரும் கண்டனம் செய்துள்ளனர். அவர்களது கண்டனங்களை எல்லாம் கல்கண்டு இதழில் தமிழ்வாணனே ''வரலாறு சொல்லவில்லை, வைகிறார் கள்'' என்ற தலைப்பில் வாரம் தோறும் வெளியிட்டுள்ளார். இதோ அவற்றில் சில;

> ''கட்டபொம்மனுக்குச் சிறப்பு நடத்துவதை யாரோ ஆட்சேபிப்பதில் ஏதேனும் பிரயோஜனம் உண்டா? பழைய உவமானம் ஒன்று நினைவுக்கு வருகிறது. சொன்னால் கோபப்படுவார்கள். சந்திரனுக்கு ஏதாவது குறை உண்டா, நாய் அதைப் பார்த்துச் சத்தம் போடுவதில்?''

— கல்கண்டு 15-1-59 ராஜாஜி

''கட்டபொம்மனைப் பற்றி ஒரு சர்ச்சை தமிழ்நாட்டில் கிளம்புகிற தென்றால், அந்தச் சர்ச்சையைக் கிளப்பியவர்களைப் பற்றி என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவர்களை எந்த ஆஸ்பத்திரிக்கு அனுப்புவது? கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் இருப்பதற்குக் கூட லாயக் கற்றவர்கள்''.

— மே. ப. 15-1-59 — பி. ராமமூர்த்தி

யாரோ சிலர் வேறு எதுவும் கிடைக்காத காரணத்தால் கட்டபொம்மனா. புலித்தேவனா என்பதை எடுத்து வைத்துக் கொண்டு அல்லாடுகிறார்களே தவிர, அந்த ஆராய்ச்சி நல்ல காரியத்திற்குப் பயன்படாது. இப்போது அது நமக்குத் தேவையற்றது

— மே. ப. — 29-1-59 — அண்ணா

ஒரு வீரனைப் புகழும்போது இன்னொரு வீரனை இகழ்வது மூடர்களின் செயல் என்பதை உணருங்கள்.

— மே. ப. 20-2-59 — ம. பொ. சி.

சின்ன அண்ணாமலை கேள்வி பதிலில், '

'கேள்வி:— தமிழரசுக் கழகத்தார் கட்டபொம்மனை வீரன் என்கிறார்கள். கல்கண்டு ஆசிரியர் அந்த மாவீரனைக் கொள்ளைக்காரன் என்கிறார். ஏன்?

பதில்:- பாலைக் குடித்தவர்களுக்குப் பால் ஏப்பம் வரும். கள்ளைக் குடித்தவர்களுக்குக் கள் ஏப்பம் வருவது சகஜம் தானே.''

— மே. ப. — 15-1-59

இவ்வாறு கற்றறிந்த சான்றோர் அனைவரும் தமிழ்வாணனின் ஆய்வு அணுகு முறையைக் கண்டித்த போதிலும், தம் பிடிவாதத்திலிருந்து மாறாமல் தொடர்ந்து கல்கண்டு இதழில் எழுதிப் பின் அதை நூலாக வெளியிட்டார். நூலில் தொடக்கம் முதல் இறுதி வரை கண்மூடித்தனமாக விஷச் சொற்களைக் கட்டபொம்மன் மீது அள்ளி வீசுகிறார். ஒரு வரலாற்றுத் தலைவன் மீது தற்சார்போடு வெறுப்பைக் கொட்டித் தீர்த்துவிட்டு, ''இந்தக் கட்டபொம்மன் ஆராய்ச்சியை அரசியலோடு தொடர்பு படுத்தாமல் அதற்கு அப்பாற்பட்ட விருப்பு வெறுப்பற்ற ஒரு வரலாற்று ஆய்வெனவே கருத வேண்டும்'' (ப. 30) என்று எந்த உரிமையில் கேட்கிறார்?

தமிழ்வாணன் தம்முடைய விருப்பம் போல வெறுப்பை உமிழ்ந்து எழுதுவாராம், ஆய்வு நெறிமுறையைக் குழி தோண்டிப் புதைப்பாராம். ஆனால் படிப்பவர்கள் மட்டும் காதில் பூவைச் சுற்றிக் கொண்டு வெறுக்காமல் படிக்க வேண்டுமாம். இது என்ன எதிர்பார்ப்பு? தமிழக வாசகர்களைச் சுயசிந்தனை இல்லாத - அறிவியல் அணுகுமுறை அற்றவர்கள் என்று தமிழ் வாணன் எண்ணிவிட்டாரா? கனவில் உரையாடுவது எல்லாம் ஆராய்ச்சி ஆகாது. அது நாம்புத்தளர்ச்சி நோயின் அறிகுறி. அதை மனோதத்துவ மருத்துவரிடம் சொல்லி மருந்து சாப்பிட வேண்டுமே தவிர நூலாக வெளியிடக் கூடாது. தமிழ்வாணன் எழுதி இருக்கும் இந்தத் தரக்குறைவான உரையாடல், அவருடைய சுயநலத்தை நமக்குத் தெளிவு படுத்துகிறது. ஆராய்ச்சி என்ற சொல்லைப் பயன்படுத்தியதால் மட்டுமே இவர் நூல் ஆராய்ச்சி ஆகாது. இது தனிநபர் மீதுள்ள ஆத்திரத்தின் வெளிப்பாடு. குறுக்கு வழியில் விளம்பரம் தேடும் குள்ளநரித் தனம். சமூகத்தை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லும் மாயை. தமிழ்ப்பண்பாட்டிற்கு ஏற்பட்ட தலைகுனிவு. மொத்தத்தில் இஃது ஆராய்ச்சி அல்ல, கீழ்த்தரமான அரசியல்.

2.

# மருட்டும் நூற்பட்டியல்

தமிழ்வாணன் தம் நூலின் தொடக்கத்தில், ''இந்த ஆராய்ச்சிக்கு உதவிய சில ஆங்கில நூல்கள்'' என்ற தலைப்பில் 239 நூல்களின் பெயர்ப்பட்டியலைக் கொடுத்துள்ளார். அதில் 191ஆம் நூல் ''History of Tirunelveli R. Caldwell'' என்றும் 193ஆம் நூல் ''A Political and General History of Tirunelveli in the Presidency of Madras-Caldwell'' என்றும் பட்டியலிட்டுள்ளார்.

191, 193 எனத் தனித்தனியாக இவர் குறிப்பிடும் இரண்டு நூல்களும் ஒன்றே. 1881இல் இந்நூல் வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியர் கால்டுவெல். தமிழ்வாணன் கால்டுவெல் பெயரை 191–இல் 'ஆர்' என்ற முதலெழுத்தோடும், 193-இல் முதலெழுத்து இல்லாமலும் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலை மேற்கோள் காட்டுபவர்கள் நீண்ட முழுத் தலைப்பையும் எழுதாமல் சுருக்கமாக, ''திருநெல்வேலி வரலாறு'' (History of Tirunelveli) என்றே குறித்தனர். இந்த மேற்கோளைப் பார்த்து இதுவேறு நூல் என்று தமிழ்வாணன் எண்ணினார் போலும். இந்த நூலின் இரண்டாம் பதிப்பினை 1982-இல் ஏசியன் எஜுகேசன் சர்வீஸ் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர். இதில் பழைய நீண்ட தலைப்பைச் சுருக்கித் ''திருநெல்வேலி வரலாறு'' என்றே பெயரிட்டுள்ளனர். தமிழ்வாணனின் 'கட்டபொம்மன் கொள்ளைக்காரன்' என்ற நூல் எழுதப்படும்போது கால்டுவெல் நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவரவில்லை.

எனவே ஒரு நூலின் உள்ளடக்கத்தைப் படிக்காமலேயே, மற்றவர்களின் மேற்கோளைப் படித்துவிட்டுக் கால்டுவெல்லின் ஒரு நூலை இரண்டு நூல்கள் என்று தவறாகப் பட்டியலிட்டுள்ளார். தமிழ்வாணன் பட்டியலிட்டுள்ள 239 நூல்களைத் தம்முடைய ஆய்வில் பயன்படுத்தியதற்கான அடிக்குறிப்புகள் எதுவும் கொடுக்கவில்லை. ஒரே நூலை இரண்டு நூல்களாகப் பட்டியலிட்டதிலிருந்தும், அடிக்குறிப்புகள் சுட்டாததிலிருந்தும், இந்த ஆங்கில நூல்பட்டியலில் உள்ள நூல்களை எல்லாம் தமிழ்வாணன் படித்தாரா? பார்வையிட்டாரா? என்ற ஐயம் நமக்குத் தோன்றுகிறது. தமிழ்வாணன் தம் நூலில், ''சார் ... ... சார் என்ற குரல் கேட்டுக் கண்விழித்தேன். என் எதிரே நூல்நிலைய ஊழியர் நின்று கொண்டிருந்தார். என்ன சார் தூங்கிக்கிட்டிருக்கீங்க? கதவைச் சாத்தணுமே'' (ப. 18) என்று நூலகத்தில் நடந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். இதன்மூலம் நூலகங்களுக்குச் சென்று, அங்கு தமிழ்வாணன் என்ன செய்தார் என்பதற்கு அவரே ஒப்புதல் வாக்குமூலம் தந்துவிடுகிறார். மூலநூல்களைப் புரட்டிக் கூடப் பார்க்காமல் படிப்போரை மருட்டும் நோக்கில் பட்டியலை மட்டும் கொடுத்துள்ளார் என்ற குற்றத்திற்குத் தமிழ்வாணன் ஆளாகிறார்.

இந்த ஆங்கில நூல் பட்டியலில் பாஞ்சாலங்குறிச்சி பற்றிய செய்திகள் இடம்பெறும் ஆங்கில நூல்கள் இடம்பெறவில்லை. பாஞ்சாலங்குறிச்சிப் போரில் நேராகப் பங்குபெற்றுத் தன் அனுபவங்களை எழுதிய, கர்னல் வெல்சின் 'ராணுவ நினைவுக்குறிப்புகள்' (Military Reminiscences-1830) பாஞ்சாலங்குறிச்சிப் போரை விரிவாகப் பேசும் கணபதியாபிள்ளையின் ''எட்டையபுரம் அன்றும் இன்றும்'' (Ettaiyapuram Past and Present) கட்டபொம்மு பிடிபட்டதைத் குறிப்பிடும் இராதாகிருஷ்ண'ஐயரின் ''புதுக்கோட்டையின் பொது வரலாறு'' (A General History of Pudukottai-1916) கர்னல் கீரானின் ''பாஞ்சாலங்குறிச்சி யுத்தம்'' போன்ற முக்கியமான நூல்கள் பட்டியலில் இடம்பெறவில்லை. இதிலிருந்து தமிழ்வாணன் மேற்கூறிய நூல்களைப் பார்க்காமலே 'ஆய்வு' செய்துள்ளார் என்பது தெளிவாகிறது. ஆய்வுக்குப் பயன்பட்ட தமிழ் நூல்களின் பட்டியல் கொடுக்கப்படவில்லை ஆகவே தமிழ்வாணன் கொடுத்துள்ள ஆங்கில நூற்பட்டியல் அவர் படித்த நூல்களின் பட்டியலல்ல, வாசகர்களை மருட்டுவதற்காக நூலக நூல் அட்டவணையிலிருந்து தொகுக்கப்பட்ட பட்டியல் என்று எண்ணத் தோன்றுகிறது.

3.

# படிக்காமலேயே பழி சொல்லலாமா?

நம்மிடம் ஒருவர் மற்றொருவரைப் பற்றிச் சொல்லிய குறையை உடனே நாம் வெளியில் பேசுவது வதந்தியாகும். கேள்விப்பட்ட செய்திகளைச் சான்றாதாரங்களோடு ஆய்வுசெய்து ஒரு முடிவை வெளியிடுவது ஆராய்ச்சியாகும். தமிழ்வாணனுக்குக் கட்ட பொம்முவை இழிவு படுத்தி ஒரு செய்தி கிடைத்தால், ஆதாரங் களைப் பார்ப்பதற்கு முன்பே மகிழ்ச்சியோடு அதை எழுதி விடுகிறார். இதோ ஒரு சான்று;

''1942-இல் இருந்து கட்டபொம்மனைப் பற்றி எனக்குக் கிடைத்த நூல்களையெல்லாம் நான் படித்து வந்தேன்.

''கட்டபொம்மனைப் பற்றிப் பேச்சு வந்தபோது ஒரு திருநெல்வேலி நண்பர் என்னிடம். 'கட்டபொம்மன் ஒரு கொள்ளைக்காரன், தெலுங்கன். தமிழர்களுக்குத் தனிப் பெருந் தீங்கிழைத்தவன்'' என்று சொன்னார்.

''இதற்கு ஆதாரம் என்ன?'' என்று நான் (தமிழ்வாணன்) கேட்டேன்.

''திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம் என்று ஒரு நூல் இருக்கிறது. இந்த நூலை எழுதியவர் வெள்ளைக்காரர் அல்லர், நம்மவர் தாம், குருகுகதாசப் பிள்ளை என்பது அவர் பெயர். இந்தத் திருநெல்வேலிச் சீமைச் சரித்திரத்தை வாங்கிப்

படித்துப்பாருங்கள். கட்டபொம்மனைப்பற்றி மறைக்கப்பட்ட சில உண்மைகள் உங்களுக்குத் தெரியவரும் என்றார் அவர்''

(பக் 24—25)

இந்தச் செய்தியைக் கூறிய தகவலாளியின் முகவரி கொடுக் கப்படவில்லை, இரண்டாவது அவர் சொல்லிய நூலைப் படித்துப் பார்த்து உண்மைதானா என்பதைக் கண்டறியவில்லை. குருகுக தாசப்பிள்ளையின் நூலைப் பல இடங்களில் கேட்டாராம். ''நான் கேட்ட புத்தகத்தை அவர்களால் தேடித்தர இயலாமல் போயிற்று'' (ப. 27) என்று முடிக்கிறார், தம் ஆய்விற்கு உரிய நூலைத் தேட வேண்டியது ஆய்வாளர் கடமை. மற்றவர்கள் தேடித்தருவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஆய்வாளரே முயற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்து அந்த நூல் கிடைக்கவில்லை என்றால், தமிழ்வாணன் தம் நண்பர் சொன்ன கருத்தை நூலில் எழுதியிருக்கக் கூடாது. ஒரு கருத்து அந்த நூலில் உள்ளதா என்பதைப் பார்க் காமலேயே யாரோ சொன்னார் என்பதற்காக அதை எழுதுவது தவறு. இரவுபகல் என்று பாராமல் ஆராய்ந்து, ''அடையாற்று லைபிரரி, கோட்டை லைபிரரி, ஓரியண்ட் மானஸ்க்ரிப்ட் லைபிரரி, கன்னிமேரா லைபிரரி, எழும்பூர் ரிக்கார்டு ஆபீசு, நெல்லை மாவட்ட நூலகம்'' என்று எல்லா நூலகங்களிலும் நேரத்தைச் செலவிட்ட (ப. 29) தமிழ்வாணனுக்குத் திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம் கிடைக்காமல் போனது ஆச்சரியமே. தமிழ்வாணனுக்குத் திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம் கிடைக்கவில்லை என்றாலும், அந்த நூலைப்பற்றிய அறிமுகத்தை நாம் வாசகர்களுக்குத் தர வேண்டியது அவசியமாகும்.

குருகுகதாசப்பிள்ளையின் 'திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்' என்ற நூல் 1931இல் இராயப்பேட்டை சாது அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதன் ஆசிரியராகிய குருகுகதாசப் பிள்ளை எட்டையபுரம் ஜமீனில் வேலை பார்த்தார். இந்த நூலை ''மேன்மைதங்கிய மகாராஜா ஜெகவீரராம குமார வெங்கடேச எட்டப்ப மகாராஜா ஐயன்'' அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்து, மகாராஜா படத்தையும் வெளியிட்டுள்ளார். இந்த நூலின் பெரும் பகுதி கால்டுவெல்லின் ''திருநெல்வேலி வரலாற்றைப்'' பின் பற்றியே எழுதப்பட்டுள்ளது.

ஒரு நூலின் கருத்தை ஆதாரமாக எடுக்கும்போது நூலாசிரி யரின் பின்னணி என்ன? அவர் யாரையாவது சார்ந்துள்ளாரா? நடுநிலையாளரா? என்பனவற்றையும் கணக்கில் கொள்ள வேண்டும். நிச்சயமாக ஒரு நூல் அதன் ஆசிரியரை இனம்

காட்டிவிடும். தமிழ்வாணன் குருகுகதாசப் பிள்ளையைக் குறிப்பிடும் போது ''வெள்ளைக்காரன் அல்லர். நம்மவர்தான்'' என்று கூறு கிறார். வெள்ளைக்காரன் என்றால் கட்டபொம்மு மீது வெறுப்புக் கொண்டு. வேண்டுமென்றே எழுதி உள்ளார் என்று மறுக்கலாம். தமிழர்—இந்திய நாட்டைச் சார்ந்தவர்தாமே எழுதி உள்ளார் எனவே இது உண்மையாக இருக்க வேண்டுமென்பது அவர் வாதம்.

ஒருவன் பேசும் மொழி, பிறந்த பூமி இவற்றைக் கொண்டே அவனை இனம் குறிப்பது பொதுவிதி. ஆனால் பலர் உருவத்தால் ஓர் இனத்தைச் சார்ந்திருந்தாலும் உள்ளத்தால் வேறோர் இனத் திற்கு அடிமைப்பட்டுக் கிடப்பதையும் நாம் மறுக்க முடியாது. குருகுதாசப் பிள்ளை இந்த இரண்டாம் வகையைச் சார்ந்தவர் என்பதைத் தம் நூல் மூலம் தெளிவாக்குகிறார். இதற்கு நாம் பல சான்றுகளைக் கூறலாம்.

சுதந்திரப்போராட்ட வரலாற்றில் முக்கியமான நிகழ்ச்சி ஒன்று நெல்லை மாவட்டத்தில் நடைபெற்றது. வாஞ்சிநாதன் என்ற போராட்ட வீரர், கலெக்டர் ஆஷ் என்பவரை மணியாச்சி யில் சுட்டுக்கொன்றார். இன்று மணியாச்சி புகைவண்டி நிலையம் சுதந்திரப் போராட்ட நினைவுச் சின்னமாகப் போற்றப்படுகிறது. வாஞ்சியின் பெயர் சூட்டப்பட்டு விழாக்கள் நடைபெறுகின்றன. நாம் நெஞ்சை நிமிர்த்தி வீரத்தோடு போற்றும் மணியாச்சி நிகழ்ச்சியை குருகுகதாசப்பிள்ளை தம்முடைய நூலில், ''6—7—1911இல் கொடைக்கானல் செல்லக் கருதிப் புகைவண்டி யிலேறிய கலெக்டர் ஆஷ் துரையைப் பின்பற்றி அதே வண்டியில் ஏறிச் சென்ற, மேலே சொல்லியுள்ள ரெகுபதி அய்யரின் குமாரரான வாஞ்சி என்ற பாதகன் மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் வைத்துக் கலெக்டர் துரையைச் சுட்டுக் கொன்றுவிட்டான்'' (ப. 356) என்று வீரத்தியாகி வாஞ்சிநாதனைப் 'பாதகன்' என்று குறிப்பிடுகிறார்.

வ. உ. சி. வெள்ளையருக்கு எதிராக வெள்ளிக்கடலிலே சுதேசிக் கப்பல் ஓட்டியவர். இருந்த பொருளையெல்லாம் முதலீடு செய்து கூட்டு முயற்சியில் கப்பல் கம்பெனி தொடங்கினார். வெள்ளையர் தங்கள் தொழிலுக்குப் போட்டி ஏற்படுவது கண்டு சினம்கொண்டு, வ. உ, சி. யைக் கைது செய்து சிறையில் கொடுமைப்படுத்தினர். வ. உ. சி. தொடங்கிய சுதேசிக்கப்பல் போக்குவரத்தையும் அது தொடர்பாக எழுந்த எழுச்சியையும் குருகுகதாசப் பிள்ளை ஏளனம் செய்கிறார். வ. உ. சி. கைது செய்யப்பட்ட போது பாளையங்

கோட்டையில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்திப் பேசுகிறார். (ப. 355)

நூலின் முடிவுரையில் நம்மவர் படும் துன்பங்களைப் போக்க இறைவன், ''இஸ்ரவேலர்கள் வனாந்தரப் போக்கில் பசிப்பிணி யாலடைந்த கஷ்டங்களைச் சகியாதவராகி எங்ஙனம் அன்னோர் களின் பசிப்பிணியை மன்னா வென்ற அப்பங்களை வானின்றும் பொழிந்து ஆற்றி வைத்தனரோ, அங்ஙனமே இந்திய நாட்டின் புதல்வராகிய நம்மவரடைந்த கஷ்டங்களைச் சகியாமல் அதனை நிவிர்த்தி செய்து வைப்பதற்கென்றே ஆங்கிலேயரை அருளினார். ......... நீதியே உருவெடுத்து வந்துள்ள ஆங்கில அரசு நம் நாட்டில் ஓங்கித் தளிர்த்து நீடுழிக் காலம் நிற்குமாறு பிரார்த்திக் கிறோம்.'' என்று முடிக்கிறார்.

இந்த நூல் தரும் செய்திகளிலிருந்து குருகுகதாசப் பிள்ளை வெள்ளையரின் ஆதரவாளர் என்பது வெளிப்படையாகவே தெரி கிறது. இவர் மொழியாலும், பிறந்த இடத்தாலும் தமிழர். ஆனால் உள்ளத்தால் ஆங்கிலேயர். எனவே தமிழ்வாணன், இவர் வெள்ளைக்காரர் அல்லர் நம்மவர்' என்று குறிப்பிடும் தொடர் பொருந்தாது. இரண்டாவது இவர் எட்டையபுரம் சமஸ்தானத்தில் பணியாற்றியவர். அதனால்தான் தம் நூலை எட்டையபுரம் மகாராஜாவிற்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். ஆகவே குருகுக தாசப் பிள்ளை கட்டபொம்முவின் எதிர் அணியைச் சேர்ந்தவர் என்பது தெளிவாகிறது. வ. உ. சி. யைப் பழித்தும் வாஞ்சி நாதனைப் பாதகன் என்றும் பட்டியலிடும் இவர் வெள்ளையரை எதிர்த்த கட்டபொம்முவை எப்படி எழுதுவார் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

ஆனாலும் தமிழ்வாணன் குறிப்பிட்டுள்ளது போல், 'கட்ட பொம்மன் ஒரு கொள்ளைக்காரன், தெலுங்கன், தமிழர்களுக்குத் தனிப்பெருந் தீங்கிழைத்தவன்' என்று எந்த இடத்திலும் குருகுக தாசப் பிள்ளை குறிப்பிட வில்லை. தம் நூலில் வீரபாண்டியக் கட்டபொம்முவின் தந்தை ஜெகவீரபாண்டியரைப் பற்றிக் கூறும போது, ''பிடிவாத சுபாவமும் இங்கிலீஷ்காரரிடம் முற்றும் வெறுப்படைந்த குணமும் வாய்க்கப் பெற்றவர்'' (ப. 133) என்கிறார். பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுக்கத் தயாராகிக் கொண்டிருந்த போது கட்டபொம்முவைப் பாளையங் கோட்டையில் தன்னைச் சந்திக்கச் சொல்லி ஆள் அனுப்புகிறான். இதைத் தமிழ்வாணன் தம் நூலில் பானர்மேன் ஆள் அனுப்பியதும் கட்டபொம்மு அஞ்சிநடுங்கினார் என்கிறார். ஆனால் குருகுக

தாசப் பிள்ளை வெள்ளையர் ஆதரவாளராக இருந்தாலும், ''பானர்மேன் அழைத்தபோது தமக்கு எழுத்து மூலமாக ஏதேனுமோர் உத்தரவு வந்தாலன்றி துரையைப் பார்க்கச் சரிப்படாதென்று சொல்லிவிட்டார்'' (பக் 220-221) என்று உண்மையைத் திரிக்காது உள்ளபடியே எழுதுகிறார்.

ஆனால் கட்டபொம்மு மேஜர் பானர்மேனைச் சந்திக்க மறுத்தது குறித்துக் குருகுகதாசப் பிள்ளை தம்முடைய சுய விமர்சனமாகக் கூறும்போது ''கோணல் வழியில் சென்று கொண்டிருக்கும் அவரது (கட்டபொம்மு) புத்தியை நல்வழியில் செலுத்துவித்து அவர்க்கு ஏதாவது நன்மையைச் செய்துவைக்க வேண்டுமென்று பிரயாசை எடுத்தும் அது நடவாது போலிருக்கிறதென்பதைத் தெரிந்தவராகி (பானர்மேன்) மறுபடியும் அரைமணி நேரம் பாளையக்காரர் சாவதானமாக யோசித்து அவரது வழியை நல்லதாக்கிக் கொள்ளட்டுமென்றுஞ் சொல்லி அனுப்பினார். இந்த இரண்டாவது வேண்டுகோளும் வீணாயிற்று. விநாசகாலே விபரீதபுத்தி என்ற பழவுரைக்கொப்பக் கெட்டவழியில் மனநிலையை நாட்டிக் கொண்டிருந்த கட்டபொம்மு நாயக்கர் தமது பிடிவாத சுபாவத்திலிருந்துங் குணமடையவில்லை'' (ப. 221) என்கிறார். கட்டபொம்மு வெள்ளையருக்குக் கீழ்ப்படியவில்லையே என்ற ஆதங்கம் அவருக்கு உள்ளதே தவிர. இழிவுபடுத்தி எழுதவில்லை.

தமிழ்வாணனின் நண்பர் கூறியது போல திருநெல்வேலிச் சீமைச்சரித்திரம் என்னும் நூல் கட்டபொம்மு பற்றி மறைக்கப்பட்ட உண்மைகள் என்று எதையும் கூறவில்லை. ஒருவர் சொன்ன தகவல் உண்மையானதா என்று மூலநூலைப் படிக்காமலேயே அந்தக் கருத்தைத் தம்முடைய நூலில் தமிழ்வாணன் கூறியது முற்றுந் தவறு. இது சரித்திர ஆய்வல்ல, ஆய்வு எனும் பெயரில் செய்யப்பட்ட சதி. ''ஏதோ ஓர் அறைக்குள் இருந்து கொண்டு மனம் போன படியெல்லாம் எழுதிக் கொண்டிருக்கும் பேர்வழி'' என்று (ப, 19) ம. பொ. சி. தமிழ்வாணனைக் குறிப்பிட்டதை முற்றிலும் உண்மை என்று இதன மூலம் நாம் உணரமுடிகிறது.

# 4.

## கதைப்பாடல்
## கத்தி முனையில் பாடப்பட்டதா?

வீரகாவிய வரிசையில் வைத்து எண்ணப்படும் நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் வீரபாண்டியக் கட்டபொம்மன் மீது பாடப்பட்ட அளவு கதைப் பாடல்கள் வேறு எவர் மீதும் பாடப்படவில்லை. இதுவரை பத்துக் கதைப்பாடல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவை :

1, பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்முதுரை கதை
(ப. ஆ) மு. கிருஷ்ணபிள்ளை — 1929
இரண்டாம் பதிப்பு — 1932
மூன்றாம் பதிப்பு (ப. ஆ) நா. வானமாமலை
''கட்டபொம்மன் கூத்து''
மதுரைப் பல்கலைக் கழக வெளியீடு — 1972

2. பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு கதை
ஸ்ரீமகள் கம்பெனி வெளியீடு.

3. கட்டபொம்மன் வரலாறு
தமிழக அரசு கீழ்த்திசை கையெழுத்துப் பிரதி
நூலக வெளியீடு
சென்னை — 1960

4. கட்டபொம்மன் கதைப்பாடல்
(ப. ஆ) நா. வானமாமலை
என். சி. பி. எச். வெளியீடு — 1961

5. வீரபாண்டியக் கட்டபொம்மன் கதைப்பாடல்
(ப. ஆ) நா. வானமாமலை
மதுரைப் பல்கலைக் கழக வெளியீடு, மதுரை — 1971

6. கட்டபொம்மன் கும்மிப்பாடல்
(ப. ஆ) சிரஞ்சீவி. (இவரது வீரபாண்டியக் கட்ட பொம்மன் என்ற நூலில் உள்ளது)
பிரேமா பிரசுரம், சென்னை — 1958

7. பேட்டி விருத்தம்
ஜெகவீரபாண்டியனாரின் கட்டபொம்மன் வரலாறு என்ற நூலில் உள்ளது.

8. 1951இல் ஆனந்தவிகடன் 'கட்டபொம்மு கதை' என்னும் பாடலை முப்பத்து மூன்று வாரம் தொடர்ச்சியாக வெளியிட்டுள்ளது.

9. கட்டபொம்மன் கும்மி
(ப. ஆ) தி. நடராசன்
ஈஸ்வரி வெளியீடு
நாகர்கோயில். — 1978

10. கட்டபொம்மன் கும்மிப்பாடல்
(ப. ஆ) வே. மாணிக்கம்
மாநிலத் தமிழ்ச் சங்க வெளியீடு
பாளையங்கோட்டை — 1983

அச்சு வடிவம் பெற்ற இந்தப் பாடல்கள் நீங்கலாக என்னிடம் நான்கு சுவடிகள் பிரதி செய்யப்பட்டு உள்ளன. தமிழக அரசு ஓலைச் சுவடி நூலகத்தில் ஆறு சுவடிகள் உள்ளன. சாத்தூர்ப் பிச்சைக்குட்டி கட்டபொம்முவின் கதையை வில்லிசையாகப் பாடி வந்துள்ளார். குமாரெட்டயபுரம், வை. பெ. காசிராம் பாடிவரும் வில்லிசைக் கையெழுத்துப் பிரதி ஒன்றும் உள்ளது.

கோனார், நாடார், மருத்துவர், ரெட்டியார் என்று பல இனத்தவரும் இக்கதையைப் பாடி வந்திருக்கின்றனர். வீரபாண்டியக் கட்டபொம்மனின் அஞ்சாநெஞ்சமும், இளவயதில் அவருக்கும் அவர் தம்பி ஊமைத்துரைக்கும் ஏற்பட்ட கொடூரமான அவல முடிவும் மக்களிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. அந்தக் கொடுமையின் குமுறலே இந்த அளவு எண்ணற்ற கதைப் பாடல்களாக உருவெடுத்தது.

ஆனால் இந்தக் கதைப்பாடல்கள் ஏன் பாடப்பட்டன என்பதற்குத் தமிழ்வாணன்,

''கொள்ளைக்காரன் கட்டபொம்முவின் கத்திமுனைக்குப் பயந்து உளறிக்கொட்டி இருக்கிறார்கள் அந்தக் காவியத்தை'' (ப. 190) என்றும், கல்கண்டில் எழுதும் போது,

''கத்தியை உருவிப் புலவரின் நெஞ்சில் நிறுத்தி எங்கள் பரம்பரையைப் பற்றி எழுது என்றார் (கட்டபொம்மு)''

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கத்திமுனைக்குப் பயந்து கட்டபொம்மு பற்றிப் பாடினார்களாம். தமிழ்வாணன் நேரில் பார்த்தது போலக் கூறுகிறார். 'மன்னவனும் நீயோ' என்று மன உறுதியோடு கேட்டார் கம்பர். 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று குரல் கொடுத்தார் நாவுக்கரசர். கண்டு வரவேற்காது கொடுக்கும் இந்தப் பரிசிலைப் பெற நான் ஒன்றும் யாசகன் அல்லன் என்றார் சங்கப்புலவர் பெருஞ்சித்திரனார். கோடிக்குப் பாட மறுத்துக் கூழுக்குப் பாடினார் அவ்வையார். நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்று ஆண்டவன் முன் அஞ்சா நெஞ்சுடன் வாதாடினார் நக்கீரர். இத்தகைய பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ்ப் புலவர், கத்திமுனைக்குப் பயந்து உளறிக் கொட்டினார் என்று தமிழ்வாணன் கூறுவது வேடிக்கையே.

இதற்கு என்ன ஆதாரம் என்று தமிழ்வாணனிடம் கேட்டுப் பயனில்லை. ஏனென்றால் அவர் ஆதாரங்களைக் கொண்டு ஆய்வு செய்யவில்லை, ஆகாசக் கோட்டை கட்டி அதனுள்ளே இருந்து கற்பனைத் தேரோட்டுகிறார். 'பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்' என்பது பழமொழி. இதைக்கூடத் தமிழ்வாணன் கைக்கொள்ளவில்லை. கட்டபொம்மு கதைப்பாடல்கள் கட்டபொம்முவையும், அவர் தம்பி ஊமைத்துரையையும் தூக்கிலிடும் இறுதி நிகழ்ச்சி முடியப் பாடுகின்றன. கத்தியை நெஞ்சில் வைத்துப் பாடச் சொல்லும் போது கட்டபொம்முவிற்குப் பயந்து பாடும் புலவன், கட்டபொம்முவும் அவர் தம்பியும் உயிரோடு இருக்கும் போது, தூக்கிலிட்டதாக ஒரு செய்தியைப் பாட முடியுமா? இந்தச் சிறிய கேள்வி கூடத் தமிழ்வாணன் பகுத்தறிவில் தட்டுப் படவில்லையா? இவர் சொல்லுவதெல்லாம் 'அருள்வாக்கு' என்று ஆமோதிக்கத் தமிழ் வாசகர்கள் என்ன பகுத்தறியும் பண்பில்லாதவர்களா?

கட்டபொம்மு கதைப்பாடல்களைப் பற்றி எதுவுமே தமிழ் வாணனுக்குத் தெரிந்திருக்க வில்லை. கதைப்பாடல்கள் பழ மரபுப் பாடல்களைப் போல மன்னனை நோக்கி அவனுக்காக, அவன் முன் பாடப் பட்டவையல்ல. இவை மறைந்த தலைவனைப் பற்றி மக்கள் முன் பாடப் பட்டவை. அங்கு மன்னன் பரிசு வழங்கினான். இங்கு மக்கள் பரிசு வழங்கினர். அங்கு மன்னன் மனம் மகிழ்ந் தான். இங்கு மக்கள் கேட்டு, மனச்சுமை குறைந்து ஆறுதலடைந்தனர். அங்கு மன்னன் கொடைச் சிறப்பையும் படைச் சிறப்பையும் கூறி அவனுக்கு வீரத்தை ஊட்டினர். இங்கு மக்கள் முன் பாடி ஆயிரக் கணக்கான மக்களுக்கு வீர உணர்வை ஊட்டினர்.

இந்தக் கதைப்பாடல்கள் கோயமுத்தூர், மதுரை, திருநெல் வேலி என்று தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் எல்லாம் பாடப்பட்டு வந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. 1882இல் ராபர்ட் சுவல் என்பவரால் தொகுக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வு அறிக்கையில் இப்பாடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ப. 308). புத்தனேரி ரா. சுப்பிரமணியன் தம்முடைய 'பாட்டும் கூத்தும்' என்ற நூலில், அவர் இளமைக் காலத்தில் கேட்ட கட்டபொம்மு கதைப்பாடல் குறித்து, ''கட்டபொம்மன் கதைப்பாடலுக்குளன்றே தனியான இசைப்பாணி ஒன்று உண்டு. நாட்டுப்பாடல் மெட்டிலே ஒரு சுகமான ஓசை நயமும் தாளக்கட்டும் இருக்கும். தானானே தானானே தானன்னனா, தானானே தானானே தானன்னனா என்ற சந்தத்தில், துரிதம் மடக்கு எல்லாம் இடையிடையே விரவிவரும்'' என்று குறிப்பிடுகிறார். (ப. 2) கு. சா. கிருஷ்ண மூர்த்தி 'நாடக வரலாறு' என்ற நூலில் அவர் கேட்ட கட்ட பொம்மு கதைப்பாடல்களைப் பற்றி ''அவர்கள் பாடிய பாடல்கள் மிக எளிய கிராமியப் பாணியிலேதான் இருந்தன. ஆனால் அந்தப் பாடல்களிலே உள்ள உணர்ச்சியும், உயிர்த் துடிப்பும் மக்கள் இதயத்திலே எழுச்சியூட்டுவனாக இருந்தன'' (ப. 109) என்று கூறிப் பாடல்கள் சிலவற்றையும் மேற்கொளாகச் சுட்டி உள்ளார். வ. உ. சி. தம்முடைய சுயசரிதையில், விடுதலைப் போராட்ட வீரர்கள் சிறையில் கட்டபொம்மு கதையைப் பாடிய தாகக் குறிப்பிட்டுள்ளார். தி. நா. சுப்பிரமணியன், இளமையில் பயணம் செய்த சமயம், வண்டிக்காரன் ஒருவன் கட்டபொம்முவைப் பற்றிப் பாடியதைக் 'கட்டபொம்மு' என்ற தம் நூலில் கூறி யுள்ளார். (ப. 5).

வெள்ளையர் தடையை மீறி நாடெங்கும் கட்டபொம்மு காவியம் மக்கள் நாவில் தவழ்ந்து வந்துள்ளதை நாம் அறிய

முடிகிறது. அவை இன்றும் பாடப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் கட்டபொம்மு கதைப்பாடலைப் போல மக்களிடையே செல்வாக்குப் பெற்ற வேறு வரலாற்றுக் கதைப்பாடல்கள் இல்லை எனலாம். இந்தப் பாடலைக் காலந்தோறும் ஆயிரமாயிரம் மக்கள் அமர்ந் திருந்து கேட்டது எதனால்? கத்திமுனைக்குப் பயந்தா? இல்லை. பாஞ்சாலங்குறிச்சி அநியாயமாக அழிக்கப்பட்டது கண்டு ஆற்றாது, பாடியும் கேட்டும் மனத்தின் பாரத்தைக் குறைத்தனர். இந்தப் பாடல்கள் வெள்ளையர் மீது வெறுப்பை ஏற்படுத்தி, வீர சுதந்திர உணர்வை ஊட்டின. கட்டபொம்மு கதைப் பாடல்கள் கத்திமுனையில் பாடப்பட்டவை அல்ல, உள்ளம் கசிந்துருகிப் பாடப் பட்டவை; ஏடும் எழுத்தும் அறியாத, சூதும் வாதும் இல்லாத, ஆனால் மான உணர்ச்சியும் வீர உணர்ச்சியும் உள்ள பாமரர்களால் பாடப்பட்டவை. அவை அவர்கள் உள்ளச் சுனையிலிருந்து பெருக் கெடுத்து வந்த நீருற்று; கட்டளைக்கும் கட்டுப்பாட்டிற்கும் கத்தி முனைக்கும் அப்பாற்பட்ட கண்ணீர்க் காவியம். இந்தக் காவியத் தின் மீது அபத்தங்களை அள்ளி வீசுவது மன்னிக்கமுடியாத செயலாகும். தமிழ்வாணன் கட்டபொம்முவைக் குறை சொல்வதாக எண்ணித் தமிழ்ப் புலவர்களையும் தமிழையும் அவமதிக்கிறார்.

> மேலும் இந்தப் பாடல்களைப் பற்றிச் சொல்லும்போது, ''அச்சில் வந்தவையெல்லாம் பெருப்பாலும் கட்ட பொம்மனைப் புகழும் பாடல்கள். வராதவையெல்லாம் இகழும் பாடல்கள்'' (ப. 190) என்கிறார்.

அச்சில்வராத இகழும் பாடல்களைச் சேகரித்துத் தமிழ்வாணனே அச்சிட்டு இருக்கலாம். எங்கு யாரிடம் சேகரிக்கப்பட்டது என்ற ஆதாரத்துடன் சில பாடல்களைத் தம்முடைய நூலிலாவது மேற் கோள் காட்டி இருக்கலாம். அவ்வாறு எதுவும் செய்யாமல் வெளிவராதவை எல்லாம் இகழும் பாடல்கள் என்று சொல்வது என்ன ஆராய்ச்சி? அச்சில் வராத சுவடிகள் நான்கினை நான பிரதி செய்துள்ளேன். பழஞ்சுவடி நூலகத்தில் கட்டபொம்மு கதைப்பாடல் சுவடிகள் இன்றும் உள்ளன. நான் களத்தில் சென்று பாடல்களை ஒலிப்பதிவு செய்துள்ளேன். இகழும் கதைப் பாடல்கள் எதுவும் எனக்கு இதுவரை கிடைக்கவில்லை. பிற வரலாற்று ஆசிரியர்களுக்கும் கிடைக்கவில்லை. தமிழ்வாணன் வெளி வராதவையெல்லாம் இகழும் பாடல்கள் என்று பிறக்காத குழந்தைக்குப் பெயர் சூட்டிப் பிரதாபங்களைப் பேசி மகிழ்கிறார்.

# 5.

---

## கதைப் பாடல்கள் சான்றுகள் ஆகாதா?

கட்டபொம்மு பற்றிய கும்மிப் பாடல்களைச் சொல்லிவிட்டுப் பாடல்களைப் பற்றி விமர்சனம் செய்யும்போது தமிழ்வாணன்,

> ''இவையெல்லாம் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன்படும் அளவில் நம்பத்தகுந்த சான்றுகளல்ல, ஏனெனில் பாட்டுடைத் தலைவனைப் பாராட்டுதற்கென்றே எழுந்த பாடல்கள் இவை. அவனுடைய கொடுமைச் செயல்களை யெல்லாம் உயரிய வீரச் செயல்களாக முலாம் பூசியும் மிகைப்படுத்தியும் சித்திரித்து விடுவது அம்மாதிரிப் பாடல் களை இயற்றும் கவிஞர்களின் பரம்பரை மரபு'' (ப. 191).

என்று கூறுகிறார். கால்டுவெல்தான் முதன் முதலில் இந்தப் பாடல்களின் சம்பவங்கள் பொய் என்றார். (ப. 207–208). புலியூர்க் கேசிகன் தமது 'புலித்தேவனா? பூலித்தேவனா? என்ற நூலில், கட்டபொம்மு கதைப் பாடல்களில் எழுபது பங்கு பொய் உள்ளது. என்கிறார். (ப. 10.) இவர்களைப் பின்பற்றிய தமிழ்வாணனும் பாடல்கள் நம்பத்தகுந்த சான்றுகளல்ல என்று கூறுகிறார். இந்தக் கருத்தை நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

தமிழ்நாட்டில் நீண்ட நெடுங்காலமாக நாட்டுப்புற இலக்கியங் கள் பதிக்கவும். படிக்கவும், ஆய்வு செய்யவும் அருகதை அற்றவை என்று 'உயர்கல்வி' கற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஜெகவீரபாண்டியனார் போன்ற மரபுக்கவிஞர்கள் புதுக்கவிதை யையே எதிர்த்தபோது நாட்டுப்புறப் பாடல்களை எவ்வாறு மதித் திருப்பார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. வெளிநாட்டார்

நம் நாட்டிற்கு வந்து கிராமங்களுக்குச் சென்று நாட்டுப்புறப் பாடல், மருத்துவம், தொழில்நுட்பம், வழிபாட்டு முறை இவற்றை எல்லாம் சேகரித்து, ஆய்வுசெய்து தங்கள் நாட்டிற்குக் கொண்டு சென்ற பிறகே நம்மவர்கள் நாட்டுப்புறவியலில் பார்வையைத் திருப்பினர். நாட்டுப்புற வாய்மொழி வரலாறுகள், ஒரு வரலாற்று அறிவியல், அவற்றில் உயர்நிலையான சிறந்த வரலாற்றுச் செய்திகள் இருக்கின்றன என்ற சிந்தனை வளர்ந்தது. பல்கலைக் கழகங்கள் நாட்டுப்புறவியல் ஆய்வுகளை மேற்கொண்டன. இன்று நாட்டுப்புறவியலில் முதுகலைப் பட்டப் படிபபு தொடஙகப்பட்டுள்ளது. திரும்பும் இடங்களில் எல்லாம் நாட்டுப்புறப் பாடலிசையைக் கேட்க முடிகிறது.

வரலாற்று நூலுக்கும் வரலாற்றுக் கதைப்பாடலுக்கும் வேறுபாடு உண்டு எனபதில் கருத்து வேற்றுமை இல்லை. உள்ளதை உள்ளவாறு உரைப்பது வரலாறு உள்ளதைக் கேட்போர் உள்ளம் விரும்புமாறு உணர்வோடு சொல்வது வரலாற்றுக் கதைப்பாடல். ஏனைய வரலாற்றுக் கதைப்பாடல்களை விட, கட்டபொம்மு வரலாற்றுக் கதைப்பாடல்களில் வரலாற்றுக் கூறுகள் மிகுதியாக உள்ளன. கேட்போருக்குச் சுவை பயக்கும் வகையில் சில காவிய அமைப்புகளைப் பாடகர்கள் கையாண்டுள்ளனர், அந்த அடிப்படையில் கனவு, நம்பிக்கை. போர்க்கள வருணனை ஆகியவை இடம்பெற்றுள்ளன. கட்டபொம்மு கதைப்பாடல்களை நம்பத்தகுந்தவை அல்ல என்று குறை கூறும இவர்கள் யாருமே, கட்டபொம்மு கதைப்பாடல்களையும், கட்டபொம்மு வரலாறு இடம் பெறும் நூல்களையும், பதிவேடுகளையும் சரியான அணுகு முறையில் படிக்கவில்லை. இரண்டையும் முழுமையாகப் படித்துப் பாடலையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டுப் பார்த்திருந்தால் கட்டபொம்மு கதைப்பாடல்களை நம்பத்தகுந்தவை அல்ல என்று தமிழ்வாணன் சொல்லியிருக்கமாட்டார்.

கட்டபொம்மு இராமநாதபுரம் பேட்டிக்குப் புறப்பட்டுச் சென்ற நிகழ்ச்சியைத் தொடக்கம் முதல் இறுதி வரை விரிவாகவும், தெளிவாகவும், மிகைப்படுத்தாமலும் கதைப்பாடல்கள் பாடுகின்றன. வரலாற்று ஆசிரியர்கள் ஒதுக்கிய செய்திகளைக் கூட, பாடகன் குறிப்பிடுகிறான். பேட்டி என்று அழைத்து ஜாக்சன் செய்த மோசடி பற்றிக் கட்டபொம்மு எழுதிய கடிதம் ஒன்று ஆவணக் காப்பகத்தில் உள்ளது கடிதத்தில் எழுதிய செய்திகளை அப்படியே கதைப்பாடலில் காணமுடிகிறது. பாடல்கள் குறிப்பிடும் வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றை இங்கே மேற்கோள் காட்ட வேண்டியது அவசியமாகிறது. இதோ சில சான்றுகள் ;

1799ல் மேஜர் பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சி மீது எந்த அறிவிப்பும் இன்றித் திடீரென்று படையெடுத்து வந்தான். கோட்டைக்குள் படை இல்லை. ஊமைத்துரை திருச்செந்தூர் விழாவிற்குச் சென்றிருந்தார். இதைக் கட்டபொம்மு கூற்றாகப் பாடல்,

''ஏகசமுத்திரம் என்சனம் என்படை
இல்லை என்றோ வாரான் கும்பினி'' என்று குறிப்பிடுகிறது.

படைகள் தங்கி இருந்த இடத்தை,
''ஒட்டப் பிடாரத்துப் பாதையிலே அவன்
ஒழுகுக் கூடாரம் தானடித்துப்
பட்டாளத்தை நிறுத்தி விட்டான் அவன்
பாங்குடன் ஒட்டப்பிடாரத்திலே'' (இராம–1108-1109)

பானர்மேன் முதலில் தெற்குக் கோட்டை வாசலை இலக்காக வைத்துத் தாக்கினான். இதைக் கதைப் பாடல்,

''தெற்குக் கோட்டைத் தலைவாசலிலே அவன்
தீர்த்தானே பீரங்கி காலனுந்தான்''
(காலன்–காலின்ஸ் என்ற தளபதி)

''தெற்குக் கோட்டைத் தலைவாசல் கதவு
சீக்கிரம மெல்லவே சாஞ்சுதய்யா''
(இராம–1331)

என்கிறது.

கோட்டைக்குள் படைகள் இல்லாததாலும், மண்கோட்டை என்பதாலும் முதல் நாள் தாக்குதலைப் பானர்மேன் அலட்சியமாகத் தொடங்கினான். ஆனால் கோட்டையை நெருங்கிய வீரர்கள் ஈட்டிகளால் குத்தி எறியப்பட்டனர். இதனால் வெள்ளையர் படைகள் கோட்டையைப் பிடிக்கமுடியாமல் திரும்பின. பானர்மேன் தன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள இந்த நிகழ்ச்சியை எல்லா வரலாற்று ஆசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர். இதைப் பாடல்,

''மட்டிலடங்காத கும்பினிப் பட்டாளம்
பின் வாங்கி விட்டதே அந்நேரம்'' என்கிறது (ஜெக-1094)

தானாதிபதிப் பிள்ளையை நாகலாபுரத்தில் தூக்கிலிட்ட செய்தியை,

''நாகலாபுரத்து வேப்ப மரத்திலே
நாக்கு ஒருமுழம் தள்ளிடவே

உன்னிதமான தோர்வேப்ப மரத்தில்
உயிரை வாங்கியே தூக்கிலிட்டான்'' (ஜெக-1349–1350)
என்று பாடல் குறிப்பிடுகிறது.

கட்டபொம்முவை விசாரிக்கும்போது எட்டையபுரம் உள்ளிட்ட எல்லாப் பாளையக்காரர்களையும் அழைத்திருந்ததை.
''எல்லாப் பாளையக் காரர்களையும் உடன்வைத்து
எட்டையா புரத்தாரையும் வைத்து'' (க. பொ. வ 136)
என்று கூறுகிறது.

கர்னல் வெல்ஸ் என்பவர் பாஞ்சாலங்குறிச்சியில் ஊமைத்துரை நடத்திய இரண்டாவது போரில் நேரடியாகப் பங்கு பெற்றவர். அவர் தம்முடைய போர் நினைவுகளை, ''இராணுவ நினைவுக் குறிப்புகள்'' என்று எழுதியுள்ளார் அவர் குறிப்பிடும் நிகழ்ச்சிகள் முழுவதும் கதைப்பாடலில் இடம் பெறுகின்றன. சான்றாக வெல்ஸ் குறிப்பிடும் ஒரு செய்தியைப் பார்ப்போம்:

'',ஏப்ரல் முதல் நாளன்று கோட்டைப் பிளவு வாயிலில் வீழ்ந்து இன்னும் புதைக்கப்படாமலிருக்கும் நமது வீரர்களைத் தாங்கொணா மனத்துயரத்தொடு கண்டோம். ஒரு சமாதானக் கொடியைக் கோட்டைக்குள் அனுப்பினோம். இறந்த நமது வீரர்களைப் புதைப்பதற்கு அனுமதி வேண்டி இக்கொடியை அனுப்பினோம். எவ்வித நிபந்தனையும் இன்றி அனுமதி அன்போடு அளிக்கப்பட்டது. பல்வேறு துண்டங்களாகக் கிடந்த நமது வீரர்களின் உடல்களை எடுத்துவந்து போர் மரியாதைகளுடன் புதைத்தோம். நமது எதிரி பெரும் மனிதத்தன்மையுடனும் நமக்கெல்லாம் வழிகாட்டும் வகையிலும் நடந்து கொண்டதை எண்ணி வியக்கிறோம். இம்மியளவு கூட நமக்கு எவ்விதத் தொந்தரவும் அளிக்காது வழிகாட்டினர்.'' என்று குறிப்பிட்டுள்ளார் (பின்னிணைப்பு-1) இதை,

''தப்பாமல் சண்டை முனையில் சென்னபேரைத்
தானடக்கம் செய்ய வேணுமென்றார்
கும்பினியார்களும் கம்பளத் தார்களுங்
கூவென்று வெள்ளைகள் வீசிக்கொண்டு
நம்புதலாகவே பேசிக்கொண்டார் ஒரு
நாழிகைக்கு மனராசி யென்றார்
அவரவர் பிணங்களை அவரவர் தானே
அன்புடன் வாரிச் சுமந்தனராம்'' (க. பொ. வ-ப. 81)

என்று பாடல் குறிப்பிடுகிறது. இவை போல எண்ணற்ற சான்று களை நாம் கூறமுடியும். இவ்வாறு ஒப்பிட்டுப் பார்த்து உண்மை யை அறியாமல் ''கதைப்பாடல்கள் நம்பத்தகுந்த சான்றுகள் அல்ல'' என்று கூறி இருப்பதிலிருந்து தமிழ்வாணன் பாடல்களை யும் படிக்கவில்லை, வரலாற்றையும் படிக்கவில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது.

# 6.

# சான்றுகள் அல்ல என்ற பாடலைச் சான்று காட்டலாமா?

கட்டபொம்மு கதைப்பாடல்கள் நம்பத்தகுந்த சான்றுகள் அல்ல, கத்திமுனைக்குப் பயந்து உளறிக் கொட்டப்பட்டவை, எழுபது சதவீதம் பொய் நிரம்பியவை என்றெல்லாம் தமிழ்வாணன் கூட்டத்தார் வரிந்து கட்டிக்கொண்டு எழுதியுள்ளனர். அப்படியானால் பொய் நிரம்பிய கதைப்பாடல்களை மேற்கோள் காட்டக் கூடாது. அல்லவா? ஆனால் 'கொள்ளை' என்ற சொல் பாடலில் வந்து விட்டதால், அந்தப் பகுதியைத் துள்ளிக்குதித்துத் தமிழ்வாணன் மேற்கோள் காட்டுகிறாரே ஏன்? (பக். 290, 291, 325. 269) இங்கு மட்டும் கதைப்பாடல்கள் உண்மை நிரம்பியதாகி விடுமா? எனினும் நாம் அதையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

முதலில் தமிழ்வாணன் கூறும் குற்றச்சாட்டையும், அதற்கு மேற்கோளாகக் கையாண்டுள்ள பாடலையும், பார்த்துவிட்டு, அதன்பின் அந்தப் பகுதியை நாம் விவாதிக்கலாம். இதோ, தமிழ்வாணன் கூறுவது:

> ''அவன் (கட்டபொம்மு) தந்தையால் கைப்பற்றப்பட்ட அருங்குளம், சுப்பலாபுரம் ஆகியவற்றைத் தவிர, எட்டையபுரத்தைச் சேர்ந்த வேறு பல கிராமங்களையும் அவன் ஆக்கிரமிக்கத் தொடங்கினான். கட்டபொம்மன் செய்த இந்தக் கொடுமைகளைப் பற்றி அக் கிராமவாசி

கள் திருநெல்வேலியில் இருந்த கலெக்டர் டோரினிடம் சென்று முறையிட்டனர். அவர்கள் உள்ளம் வெதும்பி அழுத அந்தப் பரிதாபக் குரலை ஒரு கும்மிப்பாட்டாக வடித்துத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார் அக்காலத்திய நாடோடிப் புலவர் ஒருவர். கட்டபொம்மன் பக்தர்கள் அவசியம் படிக்க வேண்டிய பாட்டு இது'' (ப. 268).

''கட்டபொம்மேந்திரன் துட்ட நடத்தையைக்
காட்டி விபரமாய்ச் சொல்லுவராம்!
தருமதுரைகளே கேளுமென்று வெகு
சாதுரியமாகச் சொல்லுவராம்!
அருங்குளத்திலே கம்பஞ்சாமைக் கதிர்
ஆயிரங்கட்டையும் கொள்ளை கொண்டான்
வருமாங்குளகத் தட்டைப் படைப்பிலே
வளர்நெருப்பைக் கொழுத்திவிட்டான்
விருதாய்ப் பொல்லாங்கு செய்குறானெங்கள்
வீடுகளில் வந்து கொள்ளையிட்டான்
எப்போதும் போல் காட்டுநாயக்கன் பட்டியின்
எல்லைச் சதுரியிலே மேய்ந்த மாட்டை
முப்பது நாற்பது பால்பசுவை யோட்டி
முன்னூறெருதையும் கொள்ளை கொண்டான்

பார்த்திபரே எங்கள் சீமையெல்லாம் ஆடிக்
காற்றிலே தீயைப் பரப்புகிறான்
பட்டிக் காடெங்கும் குடிபோச்சே! தட்டைப்
படைப்புக் காடெங்கும் வெந்துபோச்சே
கட்டபொம்மு வலுத் துட்டன்ஐயா! அவன்
கன்னங்களவிலே மிச்சமய்யா!
இப்படிக் கொள்ளை யடித்தக்கால் நாங்கள்
என்னமாக் காலங்கள் தள்ளுவது
இப்போதவனை வரவழைத்துத் துரை
இந்தச் சணம் ஞாயம் கேளாவிட்டால்
படியிலே ஒரு நொடியிலே சென்னப்
பட்டணம் போறோம் பிராதுக் கென்றார்.'' (ப. 269)

(கட்டபொம்மன் கும்மி: ஏட்டுப் பிரதி. ஆர். 2440–2443)

தமிழ்வாணன் இந்தப் பாடல் வரிகளைத் தமிழகஅரசின் கையெழுத்துப் பிரதி நூலகத்திலுள்ள ஓலைச் சுவடிகளைப் பார்வையிட்டு எடுக்கவில்லை. சிரஞ்சீவியின் வீரபாண்டியக் கட்ட பொம்மன் என்ற நூலிலிருந்து எடுத்துள்ளார். (ப. 312.)

சிரஞ்சீவி குறிப்பிட்டுள்ளது போல சுவடியின் எண், ஆர். 2440–2443 என்று தமிழ்வாணனும் குறிப்பிட்டுள்ளார்.

சென்னைக் கையெழுத்துப் பிரதி நூலகத்தில் ஆறு கட்டபொம்மு கதைப்பாடல் சுவடிகள் உள்ளன. அவை: ஆர். 5649. ஆர். 5650, ஆர். 1955, ஆர். 3459, ஆர். 2440, ஆர். 6841 என்பனவாகும். சிரஞ்சீவி குறிப்பிட்டுள்ள ஆர். 2443 என்ற சுவடி, நூலகப் பட்டியலில் இல்லை. தமிழ்வாணன் மற்றவர் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவது தவறில்லை, ஆனால் அதன் மூலத்தைப் பார்க்க வாய்ப்பு இருந்தும், மூலச் சுவடிகளைப் பார்வையிடாமல் எழுதியுள்ளார். ஆர். 2440 என்ற சுவடி கொத்த மங்கலம் சுப்புவால் பிரதி செய்யப்பட்டுள்ளது 1951 இல் ஆனந்தவிகடனில் வாரந்தோறும் இப்பாடல் வெளிவந்துள்ளது. ஆர். 2440 ஆர். 6841 ஆகிய இரு சுவடிகளும் ஒரே வகையைச் சார்ந்தவை. இதில் ஆர். 6841, சுவடிப்புல நூலகத்தாரால் 1961–இல் ''கட்டபொம்மு வரலாறு'' என்ற பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்வாணன் இந்தப் பதிப்பைக் கூடப் பார்க்கவில்லை.

அடுத்து. சிரஞ்சீவி நூலிலிருந்து பாடலை மேற்கோள் காட்டும் போது, முதல் வரியை நீக்கிவிட்டுப் புள்ளி வைத்துள்ளார் இதை ஏன் நீக்கினார்? அதற்கு உள்நோக்கம் உண்டு. ஏனென்றால், அந்த வரியில்தான் குற்றம் சொல்வது யார் என்று பாடகன் கூறுகிறான்.

''எட்டையபுரம் பிரதானி வந்து துரை
இடத்தில் இந்தப் பிராது சொல்லுவார்''

என்பதுதான் தமிழ்வாணன் நீக்கிவிட்ட வரி. இந்த வரியை நீக்கிவிட்டுக் ''கட்டபொம்மன் செய்த இந்தக் கொடுமைபற்றி அக்கிராமவாசிகள் திருநெல்வேலியில் இருந்த கலெக்டர் டோரினிடம் சென்று முறையிட்டனர்'' என்று கிராமவாசிகள் குற்றம் சாட்டியதாக எழுதியுள்ளார். தமிழ்வாணன் இந்தப் பாடலின் மற்றொரு வரியையும் மறைத்துள்ளார்.

''சிந்தை மகிழ்ந்தல்லோ சாகீசன் மேஜரும்
சீமை யதிகாரம் பார்த்தாராம்''

என்பதே அந்த வரி. தமிழ்வாணன் கூறி உள்ளது போல புகார் கலெக்டர் டோரினிடம் சொல்லப்படவில்லை. கலெக்டர் ஜாக்சனிடம் சொல்லப்பட்டது. பாடல்,

''சிந்தை மகிழ்ந்தல்லோ சாகீசன் மேஜரும்
சீமை யதிகாரம் பார்த்தாராம்

எட்டையாபுரம் பிரதானி வந்து துரை
இடத்தில் என்னபிராது சொல்லுவான்
கட்டபொம்மு துரை துஷ்ட நடத்தையை
எட்டையா புரத்தாரும் சொல்லுவாராம்
தருமதுரைகளே ... ... ... ... ... ...''

என்று தொடங்குகிறது. (க. பொ. வ. ப. 4)

சீரஞ்சீவி எடுத்தாண்டுள்ள சுப்புவின் பிரதியில் மூன்றாவது வரியில் ''காட்டி விவரமாய்ச் சொல்லுவாராம்'' என்று பாட பேதம் உள்ளது. மற்றபடி முதல் இரண்டு வரியிலும் எந்த மாற்றமும் இல்லை.

1) ''வர்மங்களாகவே தட்டைப் படப்பிலே வளர் நெருப்பைக் கொளுத்தி விட்டான்'' என்ற வரியில் ''வர்மம்'' (அதாவது வன்மம்) என்பதை ''வருமாங்குளகம்'' என்று சிரஞ்சீவி தவறாக வாசித்து எழுதி உள்ளார். தமிழ்வாணனும் அதன் பொருளைக் கூட யோசிக்காமல் அப்படியே கொடுத்துள்ளார்.

2) ''எப்போதும் வென்றான்'' என்ற சிரஞ்சீவி கொடுத்துள்ள வரியை ''ஏப்போதும் போல் காட்டுநாயகன்பட்டி'' என்று விரித்துள்ளார். எப்போதும் வென்றான் என்பது ஒரு ஊர். ஆனால் தமிழ்வாணன், ''வழக்கம் போல்'' என்று பொருள் தரும் வகையில் பாடல் வரியை ''எப்போதும் வென்றான்'' என்ற பெயரில் ஒரு ஊர் இருப்பது தெரியாமல் திருத்தியுள்ளார்.

3) இனி நாம் தமிழ்வாணன் மேற்கோள் காட்டி உள்ள பாடலை விவாதிப்போம். பாடலில் வரும் குற்றச் சாட்டுகள் யாருடைய கூற்று? அது யாரிடம் சொல்லப்படுகிறது. எந்தச் சூழ்நிலையில் சொல்லப்படுகிறது? குற்றத்தைச் சுமத்துபவனுக்கும், குற்றத்தை விசாரிக்கக் கூடிய அதிகாரிக்கும், குற்றவாளி என்று சொல்லப் படுபவருக்கும் உள்ள உறவு-உணர்வு என்ன? என்பனவற்றை எல்லாம் ஆராய்ந்தால். பாடல் சொல்லும் உணர்வை- உண்மையை உணரமுடியும். படிப்போர் இப்படிச் சிந்தித்து விடக் கூடாது என்பதற்காகத்தான். ''குற்றத்தைக் கேட்பது ஜாக்சன்' என்று வரும் முதல் வரியை சிரஞ்சீவி தம்முடைய நூலில் மறைத்துவிட்டார். இவரைப் பின்பற்றி எழுதிய தமிழ்வாணனோ, இன்னுமொருபடி மேலேபோய், தம் குருநாதர் சிரஞ்சீவி மறந்து செய்த தவற்றையும் மாற்றிக் குற்றம் சுமத்தியது எட்டைய புரத்தார் என்ற பாடல் வரியையும் மறைத்துக் கிராமவாசிகள் என்று திறமையாக உண்மையைப் புதைத்துள்ளார்.

ஆக உண்மை என்ன? கட்டபொம்முவின் பகைவராகிய எட்டையபுரத்தார், கட்டபொம்மு மீது கடுஞ்சினமும் ஆத்திரமும் கொண்டிருக்கும் மற்றொரு பகைவராகிய ஜாக்சனிடம் புகார் கூறுகிறார். அருங்குளம், சுப்பலாபுரம் என்ற இருபகுதிகளைக் கட்ட பொம்முவிடமிருந்து பறித்து எட்டையபுரத்தாருக்குக் கொடுத்த போது, அதை ஏற்றுக்கொள்ளாமல் கட்டபொம்மு தானே வரி வசூல் செய்த சூழ்நிலையில், இந்தப் புகார் சொல்லப்படுகிறது. இதை மறைக்கவே தமிழ்வாணனும் சிரஞ்சீவியும், இரண்டு ஊர்களையும் எட்டையபுரத்தாருக்குக் கொடுப்பதற்கு முன், கலெக்டர் டோரின் காலத்தில் புகார் சொல்லப்பட்டதாகக் காலத்தைப் பின்னால் தள்ளுகிறார்கள்.

எனவே தமிழ்வாணன் மேற்கோள் காட்டியது எட்டையபுரத்தாரின் பிராதாக வரும் பாடல் வரிகளாகும். எட்டையபுரத்தார் இதை, ''வெகுசாதுரியமாகச்'' சொன்னார். என்கிறது பாடல். கட்டபொம்மு மீது குற்றம் சுமத்தும் எட்டையபுரத்தார் யார் என்பதைக் கட்டபொம்மன் கூத்து என்ற பாடல்,

''நம்பின எங்களுக்கும்மாலே நன்மை பிறந்திட
வேண்டுமையா
''அண்டின பேர்களுக்கும்மாலே அச்சந்தவிர்ந்திட
வேண்டுமையா''

என்று கூறுகிறது (கூத்து ப. 39). குற்றம் சுமத்தியவர் வெள்ளையரை ''நம்பியவர்'' அவர்களை ''அண்டியவர்''. எனவே இவர்கள் கூற்றாக வரும் பாடல் வரிகளைக் கட்டபொம்முவின் பண்பிற்குச் சான்றாகக் கொள்ளக் கூடாது.

4. இராமாயணத்தில் சூர்ப்பநகை, கூனி, இராவணன் ஆகியோர் கூற்றாக வரும் செய்யுட்களைக் கொண்டு இராமன், சீதை ஆகியோர் பண்பு நலனை முடிவு செய்வது சரியாகுமா? காவியங்களில் கூட நாம் எதிர்நிலைப் பாத்திரங்களின் கூற்றைக் கொண்டு, காவிய நாயகன் நாயகியின் பண்பு நலனைப் பேசுவதில்லை. இந்த நெறிமுறை வரலாற்றுக் கதைப்பாடலுக்கும் பொருந்துவதே. ஆக ஒரு பாடலின் பொருளை எப்படி அணுக வேண்டும் என்ற நெறிமுறை கூடத் தெரியாமல், பாடலின் தலையையும், காலையும் வெட்டிவிட்டுத் துண்டத்தை வைத்துக் கொண்டு தமிழ்வாணன் ஓலமிடுகிறார்.

கட்டபொம்மு ஆட்கள் அருங்குளத்தில் கம்பங் கதிர்களைக் கொள்ளையிட்டதாக எட்டையபுரத்தார் கூறுகிறார். இந்த

அருங்குளம் என்ற ஊரைப் பற்றித் தமிழ்வாணன் கூறும்போது, அந்த ஊர் 'கட்டபொம்மன் தந்தையால் எட்டையபுரத்தாரிட மிருந்து கைப்பற்றப்பட்டது' என்கிறார் (ப. 268). இஃது ஆதாரமற்றது. அருங்குளம், சுப்பலாபுரம் என்ற இரண்டு கிராமங்களும் பிரான்சாலங்குறிச்சி ஆதனூர் வனிதத்தைச் சேர்ந்தவை. வீரபாண்டியக் கட்டபொம்மு ஆட்சிப் பொறுப்பேற்ற போது 'கர்னல் மாக்ஸ்வெல்' என்பவர் நில அளவை என்ற போர்வையில் பாஞ்சாலங்குறிச்சியாரின் இந்த இரண்டு ஊர்களை யும் எட்டையபுரத்தாருக்குக் கொடுத்தார். இதன் மூலம் ஆங்கிலே யரிடம் வெறுப்புக் கொண்டுள்ள கட்டபொம்முவைப் பழிவாங்கிய தோடல்லாமல், எட்டையபுரத்தாரையும் அவருக்கு எதிராக உசுப்பிவிட்டனர். இதைப் பற்றி ''அந்த இரண்டு கிராமங்களும் எட்டையபுரத்தாருக்கு மாற்றப்பட்டனவென்று அறிவிக்கப்பட்ட திலிருந்து எட்டையபுரம் பாஞ்சாலங்குறிச்சி ஆகிய இரு பாளையக் காரர்களுக்கும் துவேஷம் உண்டாயிற்று. பாஞ்சாலங்குறிச்சியார் எப்பொழுதும் கும்பினியாருக்கு விரோதமானவர். அதனால் அதற்கு முன்பு அவரைப் போலவே விரோதமாக இருந்த எட்டைய புரத்தார் கும்பினியாருடன் சேர்ந்துகொண்டார். அவர் தம்மைப் பற்றி அடிக்கடி கும்பினியாரிடம் புகார் செய்து வருவதாகவும் கட்டபொம்முவுக்குத் தெரியவந்தது.'' என்று தி. நா. சுப்பிர மணியம் கூறுவதே வரலாற்று உண்மை (ப. 94). ஆனால் தமிழ்வாணன் தாம் எடுத்துக்கொண்ட கருத்துக்கு ஏற்ப இரண்டு ஊர்களும் எட்டையபுரத்தாரிடமிருந்து பறிக்கப்பட்டவை என்று வரலாறு தெரியாமல் கூறுகிறார்.

கதைப்பாடல்களைப் 'பொய்' என்று சொன்ன தமிழ்வாணன், கதைப்பாடலில் கட்டபொம்மு மீது குற்றச்சாட்டுகளாக வரும் வரிகளைக் கட்டபொம்முவுக்கு எதிராக ஏவிவிடுவதாக நினைத்துக் கொண்டு துப்பாக்கியை மாற்றிப் பிடித்துத் தம்மை நோக்கியே சுட்டுக் கொள்கிறார்.

7.

# கட்டபொம்மு முன்னோர் யார்?

கட்டபொம்மு முன்னோர் யார் என்பதற்குத் தமிழ்வாணன் ஒரு அருமையான பொய்ப்புராணம் பாடுகிறார் (பக். 180– 84). அந்தக் கற்பனைக் கதையின் சாரம் வருமாறு:

''கட்டபொம்மன் பரம்பரையிலேயே வரலாற்றின் கண்களுக்குப் புலனாகின்ற முதல்வன் காட்ரகட்ட பிரமையா என்பவன்தான். இவன் எட்டையபுரம் அரண்மனையில் அடைப்பைக்காரனாக இருந்தான். காட்ரகட்ட பிரமயாவின் குடும்பத்தினர் விறகு வெட்டிப் பிழைத்து வந்தவர்கள். அரண்மனையில் அடைப்ப வேலை கிடைத்ததும் விறகு வெட்டுவதை விட்டுவிட்டனர். எட்டையபுரம் அருகே செக்காரப்பட்டி என்ற வளமான பகுதியில் வேளாளர் வாழ்ந்து வந்தனர். எட்டையபுரத்தாரை இந்தப் பகுதியைக் கைப்பற்றுமாறு பிரமையா தூண்டினான். இப்பகுதி இளம்பஞ்சபாண்டியர் வசம் இருந்தது. சூழ்ச்சி மூலம் செக்காரப் பட்டியைக் கைப்பற்றும் எண்ணத்துடன் பிரமையா அங்கு வந்து காலியாக இருந்த ஊர்க்காவல் வேலையில் சேர்ந்தான். தான் சொல்லும்போது படை அனுப்புமாறு எட்டையபுரத்தாரிடம் சொல்லி வந்தான். இதற்கிடையில் தானே செக்காரப்பட்டியைக் கைப்பற்றத் திட்டமிட்டு எட்டப்பனையும், பஞ்சபாண்டியரையும் மோதவிடத் திட்டமிட்டான். எட்டப்பனைப் படையெடுத்து வருமாறு

செய்தி அனுப்பிவிட்டு, படைகள் வருவதைப் பஞ்ச பாண்டியரிடமும் சொல்லிவிட்டான். யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களோடு சேர்ந்து கொள்வோ மென்று பிரமையா திட்டமிட்டான். போரில் பாண்டியர் வென்றனர். பிரமையா தளபதியானான். இதிலிருந்தே எட்டப்பனுக்கும் பிரமையாவிற்கும் பகை ஏற்பட்டது. இந்தப் பகையாலேயே வீரபாண்டியக் கட்டபொம்முவைப் பின்னால் எட்டப்ப மன்னர் காட்டிக்கொடுத்தார். காட்ர கட்ட பிரமையாவின் மகன் கட்டபிரமையா. இவன் தந்தையைக் காட்டிலும் சூழ்ச்சிக்காரன். எதிரிகளோடு நேருக்கு நேர் நின்று போரிடாமல், அவர்களை மறைந் திருந்து தாக்குவதில் கெட்டிக்காரன். இந்தக் கெட்டிக் காரன் என்ற பொருளில்தான், அவன் வகுப்பைச் சேர்ந்த கம்பளத்தார் அவனைக் கெட்டி பொம்மு என்று அழைத் தார்கள். இந்தக் கெட்டி பொம்மு என்ற பெயர்தான் தமிழில் கட்டபொம்மன் என்று மருவி வழங்கலாயிற்று'' (பக். 180-184).

தமிழ்வாணன் இந்தக் கதையைச் சிரஞ்சீவியின் 'வீரபாண்டியக் கட்டபொம்மன்' என்ற நூலிலிருந்து (ப. 273) எடுத்துச் சிரஞ்சீவி சொன்ன அரைப் பக்க அளவிலான கதையைத் தமிழ்வாணன் தம்முடைய நாவல் அனுபவத்தைக் கலந்து மூன்று பக்க அளவில் சேறு பூசியுள்ளார்.

''செக்காரப்பட்டி வந்த பிரமையா அங்குள்ள மக்களைத் துரத்திவிட்டுக் குடியேறினான். வீரபாண்டியபுரத்தைத் தலை நகராகக் கொண்டு ஆண்டுவந்த பாண்டியன் ஆதரவைப்பெற்றுத் தன் மகன் பிரமையாவைப் பாண்டியனின் படைத் தளபதியாக் கினான்'' என்று சிரஞ்சீவி கூறுகிறார். ஆனால் தமிழ்வாணன், ''எட்டப்பன் படை வெற்றி பெற்றால், நாம் அவனோடு சேர்ந்துவிடுவோம். அன்றி இளம் பாண்டியர்கள் வெற்றிபெற் றால் அவர்களோடு சேர்ந்து கொள்வோம்'' என்று (ப. 183) இருவரிடமும் பிரமையா நயவஞ்சக நாடகமாடினான் என்று புதிய விரிவாக்கப் பணியை மேற்கொண்டுள்ளார். ''எட்டைய புரம் ஜமீனோடு செக்காரப்பட்டியைச் சேர்க்க உடன்படாமல், தன் வலிமையால் எதிர்த்து நின்று செக்காரப்பட்டியிலேயே சாஸ்வதமாகக் குடியேறினான்'' என்கிறார், சிரஞ்சீவி. ஆனால் ''செக்காரக்குடி வந்த பிரமையா, எட்டப்பன் அழைத்தபோது அந்த உத்தரவைத் தலை மேல் தாங்கி ஓடோடி வந்தான் காட்ர

கட்ட பிரமையா'' என்று தமிழ்வாணன் இழிவுபடுத்துகிறார். ப 182).

துர்க்காதாஸ் எஸ். கே. ஸ்வாமி தம்முடைய 'தமிழ்வீரன் பூலித்தேவன்' என்ற நூலில், பஞ்சபாண்டியர் காலத்தில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைச் சீர்படுத்த முயன்ற பாளையக் காரன் 'காட்ரகட்ட பிரம்மையா' என்னும் முதலாவது கட்ட பொம்மன் என்கிறார் (ப 27). துர்க்காதாஸ் முதலாவது கட்ட பொம்மன் பெயரை மட்டும் ஒருவரியில் கூறுகிறார். தமிழ் வாணன் சொல்லும் கதை அதில் இல்லை.

முதலாவது கட்டபொம்மு பெயர் ''காட்ரகட்ட பிரமையா'' என்று சிரஞ்சீவி, துர்க்காதாஸ் சுவாமி, தமிழ்வாணன் ஆகியோர் மட்டுமே குறிப்பிட்டுள்ளனர். மற்ற வரலாற்று ஆய்வாளர்கள் இப்பெயரைக் கூறவில்லை சிரஞ்சீவி, ''காட்ரகட்ட பிரமையா நாயுடு'' என்கிறார். விறகு வெட்டிப் பிழைத்தவர், அடைப்பைக் காரனாக இருந்தவர் என்பவை ஆதாரமற்றவை. இவர்களது கற்பனையில் பிறந்த கதை. செக்காரப்பட்டி என்று இவர்கள் குறிப்பிடும் ஊர் செக்காரக்குடியாகும். எப்போதும் வென்றான், செக்காரக்குடி என இருக்கின்ற ஊர்ப் பெயர்களையே சரியாகச் சொல்லத் தெரியாத இவர்கள் 'காட்ரகட்ட' என்று ஒரு பெயரைக் கற்பனையில் கண்டுபிடித்து 'ஆராய்ச்சிசெய்வது' தான் வேடிக்கை.

கட்டபொம்மு முன்னோர் ஆந்திராவிலுள்ள பல்லாரி என்ற நாட்டிலிருந்து இங்குக் குடிபெயர்ந்து வந்தனர். பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தில் வாழ்ந்த கம்பளத்தாருக்குக் ''காட்ரகட்ட'' என்ற முன் ஒட்டு இல்லை. 'எத்திவீரன' என்ற பட்டம் உண்டு. எத்தி என்ற சொல்லுக்குக் காளை என்பது பொருள். இவர்கள் கம்பளத்தார் என்ற பிரிவைச் சேர்ந்தவர். ''சொத்துப் பல்லாரி யை ஆண்டவனே, கோத்திர கம்பளத் தோத்திரனே'' என்று பாடல் கூறுகிறது. பல்லாரியில் கம்பலி என்ற பகுதியில் வாழ்ந்த தால் கம்பளத்தார் என்று அழைக்கப்பட்டனர் என்று தி. நா. சுப்பிரமணியமும் (ப. 17), கம்பளத்தை எப்போதும் போர்த்தி இருப்பதாலும், கம்பளம் விரித்து வழக்குப் பேசுவதாலும் இந்தப் பெயர் வந்தது என்று ஜெகவீரபாண்டியனாரும் (ப. 11), கம்பிலி என்ற கோட்டையை இவர்கள் வீரத்தோடு காத்ததால் கம்பளத் தார் என்று பெயர் பெற்றனர் என்று குருகுகதாசப் பிள்ளையும் கூறுகின்றனர். ஜெகவீரபாண்டியனார் கூறுவதே ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

இவர்கள் தொழில் கால் நடைகளைப் பராமரிப்பது அந்தத் தொழிலின் அடிப்படையிலேயே இவர்களில் ஒன்பது பிரிவுகள் ஏற்பட்டன. கதைப் பாடல் "ஒன்பது கம்பள சாதியிலே உண்டான குற்றங்கள் என்ன சொல்வீர்" என்று கூறுகிறது (க. பொ. கூ; ப. 12). பசுமாடுகளை உடையவர். தோக்கலவார், வெள்ளாடு வளர்ப்போர் கொல்லவார், செம்மறி ஆடுகளை உடையவர் சில்லவார், பால் கறந்து உதவியவர் பாலவார். கட்டபொம்முவின் முன்னோர் விறகு வெட்டிப் பிழைத்தவர்கள் என்று தமிழ்வாணன் கூறுவது கட்டபொம்முவை இழிவு படுத்தும் நோக்கில் சொல்லப் பட்ட கற்பனைக் கதையாகும்.

கட்டபொம்மு வகையினர் தோக்கலவார் பிரிவினைச் சார்ந்த வர்கள். இதைப்பாடல்,

"ஆதியிலே பாஞ்சால நகர்தனிலே – சாமி
சாதியிலே கம்பளத்தார்க ளெல்லாம் குலமாம்
சாதியிலே கம்பளத்தார்க ளெல்லாம் – சாமி
தானங்கே தோக்குலவார் குலத்தார் (இராம
- வரி ப 3–28)

என்று குறிப்பிடுகிறது. இவர்கள் திருநெல்வேலிப் பகுதியில் காடல்குடி, மேல்மாந்தை, கல்லூரணி பாஞ்சாலங்குறிச்சி ஆகிய நான்கு பாளையங்களில் மட்டுமே உள்ளனர். இவர்களுக்குக் குல அடைப்பெயர்கள் உண்டு. காடல்குடியார் சிறுமல் என்றும், மேல்மாந்தையார் சக்கன குஞ்சியாராஜேந்திர என்றும், கல்லூரணியார் அனுசின்னு என்றும், பாஞ்சாலங்குறிச்சியார் எத்தின வீரன கெட்டிபொம்மு என்றும் வழங்கப்படுவர். இந்த அடைப்பெயர்களையே தங்கள் இயற்பெயரோடு சேர்த்துக் கொள்வர். 'காட்ரகட்ட' என்ற அடைப்பெயரை யாரும் வரலாற்றிலோ, வாய்மொழி வழக்கிலோ பயன்படுத்தியதற்கான சான்றுகள் இல்லை.

'கெட்டிபொம்மு' என்று வழங்கப்பட்டதன் காரணத்தைக் "'காட்ரகட்ட பிரமையாவின் மகன் (வெறும்) கட்டபிரமையா இவன் தந்தையைக் காட்டிலும் சூழ்ச்சிக்காரன், எதிரிகளோடு நேருக்கு நேர் நின்று போரிடாமல், அவர்களை மறைந்திருந்து தாக்குவதில் கெட்டிக்காரன், இந்தக் கெட்டிக்காரன் என்ற பொருளில் தான் அவனைச் சார்ந்த கம்பளத்தார் அவனைக் 'கெட்டிபொம்மு' என்று அழைத்தார்கள்" (ப. 184) என்று தமிழ்வாணன் கூறுகிறார். சூழ்ச்சியில் வல்லவர்களைக் குள்ளநரி என்று அழைப்பதே மரபு கெட்டிக்காரன் என்று சொல்வதில்லை.

அக்காலத்தில் மறைந்திருந்து போரிடுபவனை இந்த வையம் புகழ்வதில்லை. மறைந்திருந்து வாலி மீது அம்பு ஏவிய இராமனை வாலி மூலம் கம்பன் கேட்கும் கேள்விகளை நினைத்துப் பார்க்க வேண்டும். இராமன் தெய்வம், வாலிக்கு மோட்சம் வழங்கவே அவ்வாறு செய்தான் என்ற ஒரே காரணத்தால் மட்டுமே தப்ப முடிகிறது ஆக, வஞ்சனையில்வல்லவர்களை, மறைந்திருந்து போரிடும் மன்னர்களை இந்தச் சமூகம் 'கெட்டி' என்று பாராட்டுவது மரபில்லை. தமிழ் வாணன் சொல்லும் விளக்கம், கட்டபொம்முவின் முன்னோர்களை இழிவு படுத்தும் நோக்கில் சொல்லப்பட்டதாகும். ''கெட்டி'' என்பது கட்டபொம்முவின் குல அடைப்பெயரில் இருந்து உருவாகியதாகும்.

கம்பளத்தார் தமிழ் நாட்டிற்குக் குடிபெயர்ந்ததற்கு 1) முகமதியர் பெண் கேட்டதால் மறுத்து வந்தனர் என்றும் 2) பஞ்சத்தின் காரணமாக வந்தனர் என்றும் இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. பெண் கேட்டதால் மறுத்து வந்தனர் என்பதற்கு 'எந்தவிதமான சரித்திரச் சான்றும் கிடையாது' என்றும் (ப. 177), அதுபோலவே 12ஆம் நூற்றாண்டுப் பஞ்சம் பற்றிச் சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடவில்லை என்றும் (ப. 178) தமிழ்வாணன் கூறுகிறார்.

குடிப்பெயர்ச்சி பற்றி எழுதும் போது நாம் ஒரு செய்தியை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு குடிப்பெயர்ச்சி ஒரே நாளில் ஒரு காரணத்திற்காகவும், அல்லது பல்வேறு காரணங்களால் பல்வேறு காலங்களிலும் ஏற்பட்டிருக்கலாம். இன்று பம்பாயில் தாராவி, மட்டுங்கா முதலான பகுதிகளில் வாழும் தமிழர்கள், பல காரணங்களால் பல காலங்களில் குடியேறியுள்ளனர். இது போலவே கம்பளத்தாரும் பல காலங்களில், பல காரணங்களுக்காகக் குடிபெயர்ந்திருக்க வேண்டும். அதில் பெண் மறுப்பும் ஒரு காரணமாக இருக்கலாம். பெண் கொடுக்க மறுத்துக் குடிபெயர்ந்தமைக்கு வரலாற்றிலும், வழக்கிலும் எண்ணற்ற சான்றுகள் உள்ளன.

பெண் கேட்டபோது பெண் கொடுக்க மறுப்பவர் மீது அரசன் படை நடத்திச் சென்று பலவந்தமாகப் பெண்ணைச் சிறையெடுக்கும் வழக்கத்தை 'மகட்பாற்காஞ்சி' என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. பெண் கேட்பவர் செல்வச் செழிப்புடையவராக இருப்பினும், குலப் பெருமையால் ஒவ்வாதவராயின் ''நிரலல்லோர்க்குத் தரலோ வில்லெனப்'' போருக்குப் புறப்பட்ட செய்தி புறநானூற்றில் உள்ளது. (புறம் 345) சோழன், செட்டி குலப்

பெண்ணைப் பலவந்தமாகச் சிறையெடுத்ததை ரகுநாதன் குறிப்பிடுகிறார் (ஆராய்ச்சி, ஜூலை 1969). செஞ்சி அரசன் வெங்கடபதிக்குப் பெண் கொடுக்க மறுத்துச் சமணர்கள் பெட்டை நாயை மணமேடையில் கட்டிப் போட்டுவிட்டு ஊரைவிட்டு ஓடியதை மயிலை சீனி. வேங்கடசாமி 'சமணமும் தமிழும்' என்ற நூலில் கூறுகிறார் (ப. 73). ரத்தினகிரிப் பகுதியை ஆண்ட வலவலகான் என்ற முகமதியன், கம்மாளப் பெண்ணைக் கைப்பற்றிச் சென்றதால், கம்மாளர் வேலைநிறுத்தம் செய்தனர். பாலாலமுத்தி நாயக்கர் படை நடத்திச் சென்று வலவலகானைக் கொன்று பெண்ணை மீட்டு வந்தார் என்று 'கோயிற் சாசனங்கள்' கூறுகின்றன (தொகுதி 3, பகுதி 1 ப 1251). நீலகிரி மலைப் பகுதியில் வாழும் படகர் குடிபெயர்ந்ததற்கு முகமதியர் பெண் கேட்ட கதையே சொல்லப்படுகிறது (மஞ்சரி, ஆகஸ்டு 1965). எனவே பெண்கேட்டு மறுத்துக் குடிபெயர்ந்தது சங்க காலம் தொடங்கி சமீன் காலம் வரை நடந்துவந்த நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சி கம்பளத்தாரின் ஒரு கூட்டத்தில் நிகழ்ந்திருக்கலாம். பஞ்சம் என்பது மனிதர் உணவுத் தட்டுப்பாட்டுப் பஞ்சம் மட்டுமல்ல, கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லாத காரணத்தாலும் குடிபெயர்ந்திருக்கலாம்.

பெண் கொடுக்க மறுத்துப் புறப்பட்டு வரும்போது வழியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையில் சில கிளைப் பெயர்களும் கம்பளத்தாரிடம் வழங்குவதைக் காணமுடிகிறது. வரும் வழியில் ஆற்றைக்கடந்து முதலாவது கரை சேர்ந்தது தோக்கலவார் பசு. எனவே தோக்கலவாருக்கு 'முந்தாவுலவார்' என்றும் பெயர் ஏற்பட்டது, என்று தேவதாஸ் நாயுடு பாஞ்சாலங்குறிச்சி சரித்திரத்தில் கூறுகிறார் (ப. 17). இரவு புறப்படும் போது ஒரு குடும்பத்தினர் தூங்கிப் பின்னடைந்ததால் அவர்கள் 'நித்திரைவார்' என்று அழைக்கப்பட்டனர். வரும்போது பசியின் கொடுமையால், இறந்தமாட்டிறைச்சியைச் சாப்பிட்டவர்களைப் 'பெத்தலு என்றும், பாதிவழியில் வேறு திசையில் திரும்பியவர்களை 'மல்லவார்' என்றும், ஓரிடத்தில் தங்கிக்கொண்டு வழியனுப்பி வைத்தவர்களை 'அனுப்பாலூா' என்றும் அழைத்தனர்.

மேலே கூறியவற்றின் மூலம் கம்பளத்தார் வரலாறு பற்றி நாம் ஒரு முடிவுக்கு வரமுடிகிறது. தமிழ்வாணன் கூறும் 'காட்ரகட்ட பிரம்மையா' என்ற கதை, சிரஞ்சீவி, துர்க்காதாஸ், தமிழ்வாணன் ஆகியோரின் கூட்டுத் தயாரிப்பில் உருவான அவியல். 'வரலாற்றுச் சிந்தனையில் இக்கதை தாக்குப்

பிடிக்கமுடியாமல் ஊசிப்போய் விடுகிறது. 'காட்ரகட்ட' என்பது முன்னோர் பெயர் என்றால் நிச்சயமாகக் குடும்பப் பெயரில் இடம் பெற்றிருக்க வேண்டும். இப்பெயர் வழக்கில் எங்கும் காணப்படவில்லை. விறகு வெட்டிப் பிழைப்பது இவர்கள் தொழில் அல்ல. கால்நடை வளர்ப்புச் சமூகம் என்பதை ஒன்பது குலப் பிரிவுப் பெயர்களிலிருந்து உணர முடிகிறது.

'கெட்டி' என்பதற்கு மறைந்திருந்து தாக்குவதில் கெட்டிக் காரன் என்று தமிழ்வாணன் கூறும் விளக்கம் அவரது சுயநலக் காழ்ப்புணர்வின் வெளிப்பாடே. கட்டபொம்முவின் வம்சாவளியைத் தயாரித்த அவரது பகைவன் ஜாக்சன், வெள்ளைக்காரப் பாதிரி யார் கால்டுவெல் ஆகியோர் கூடக் கட்டபொம்முவின் பெயர்க் காரணத்தை இப்படி இழிவு படுத்தவில்லை. ஆனால் இந்தியக் குடிமகனான தமிழ்வாணன், வெள்ளையரை எதிர்த்த இந்தியன் பெயரை-கட்டபொம்முவின் பெயரை—வாய் கூசாமல் வசை பாடுவது வேதனைக்குரியதே.

அடுத்து, கம்பளத்தார் குடிபெயர்ந்த கதையை முற்றிலும் ஒதுக்கி விட முடியாது. இந்தக் குடிப்பெயர்ச்சி, தோசையைப் புரட்டிப் போடுவது போல ஒரே நேரத்தில் ஒட்டுமொத்தமாக நடந்ததல்ல. பல காலங்களில் பல காரணங்களுக்காக ஏற்பட்டி ருக்க வேண்டும். இசுலாமியர் தென்னகம் வந்தது மாலிக்கபூர் படையெடுத்த 14ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே என்று வரையறை செய்ய 'வேண்டியதில்லை. அரபு நாட்டவரும், யவனரும் வணிகத்தின் பொருட்டுத் தென்னகத்தின் கடற்கரை நகரங் களிலும், உள்நாட்டுப் பெரிய நகரங்களிலும் குடியிருந்ததை இலக்கியங்களிலும், வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளிலும் அறிய முடிகிறது. கட்டபொம்மு பரம்பரையினர் 47 தலைமுறை கள் ஆட்சி செய்தார்கள் என்பது நிரூபிக்க முடியாத ஒன்றே. ஆனால் எத்தனை தலைமுறைகள் ஆட்சி செய்தார்கள் என்பதை விட, நாம் அறிந்த பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்களாகிய 1) பொல்லாப்பாண்டிய நாயக்கர் 2) ஜெகவீரக்கட்டபொம்மு நாயக்கர் 3) வீரபாண்டியக் கட்டபொம்மு 4) ஊமைத்துரை ஆகியோர் எப்படி வாழ்ந்தனர் என்பதே முக்கியம். அவர்கள் எப்படியும் வாழவேண்டும் என்று எண்ணாமல், உரிமையை விட்டுக்கொடுக்க மறுத்துப் பலம் வாய்ந்த வெளிநாட்டு வெள்ளை ஆதிக்கச் சக்தியோடு போராடி மடிந்தனர் என்பது உண்மை.

## 8.

# பொய்யான கொலைக் குற்றச்சாட்டு?

சிவகிரிப் பாளையக்காரரின் மகன் தந்தையிடமிருந்து ஆட்சியைப் பெற மாப்பிள்ளைவன்னியன், சங்கரலிங்கம் பிள்ளை ஆகியோர் துணையுடன் கலகம் செய்தான். தந்தையோ வெள்ளையரின் ஆதரவாளர். மகன். வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்தான். ஆங்கிலேய அரசு 1795இல் பிறப்பித்த ஆணையை எதிர்த்துக் கட்டபொம்மு ஓர் அணியை உருவாக்கிக் கொண்டிருந்தார். எனவே வெள்ளையரிடம் வெறுப்புக் கொண்டிருக்கும் சிவகிரியார் மகனுக்கு ஆதரவாக இரண்டாயிரம் பேர் அடங்கிய படையை ஊமைத்துரை தலைமையில் கட்டபொம்மு அனுப்பினார். சிவகிரியைத் தமக்கு ஆதரவாக வைத்துக்கொள்ள கட்டபொம்மு விரும்பியதற்குக் காரணமும் உண்டு. வெள்ளையருக்கு எதிராகத் தாம் தொடங்க உள்ள போரை மலை அடிவாரத்தில், இயற்கை அரணுடன் அமைந்துள்ள சிவகிரிக் கோட்டையில் நடத்தக் கட்டபொம்மு விரும்பினார். கட்டபொம்மு திட்டத்தை உணர்ந்த வெள்ளையர் சிவகிரிப் பாளையத்தை மகனிடமிருந்து மீட்டுத் தந்தையிடம் ஒப்படைத்தனர்.

இதுவே கட்டபொம்முவிற்கும் சிவகிரிப் பாளையத்திற்கும் நடந்த விவகாரமாகும். இந்த உண்மை நிகழ்ச்சியில் தமிழ்வாணன் தம் கற்பனைக் குதிரையை ஓட்விட்டுக் கட்டபொம்மு மீது ஒரு பொய்க் கொலைக் கதையை உருவாக்கியுள்ளார். இந்தக் கதையைத் தமிழ்வாணன் திகிலூட்டும் பாணியில், ஆவேசச் சொற்

களைக் கலந்து. விறுவிறுப்பாக விவரிக்கிறார். முதலில் நாம் தமிழ்வாணனின் பொய் மூட்டையைச் சுருக்கமாகப் பார்த்துவிட்டு. அதன்பின் விவரிப்போம். இதோ அவர் கூறும் கதை.

''கட்டபொம்மு 'சிவகிரிப் பாளையக்காரரின் மகனை அழைத்து'' வயதான பின்னும் உன் தந்தைக்குப் பதவி ஆசை போகவில்லையே! அவர் உயிரோடு இருக்கும் வரை நீ பதவியை அடைய முடியாதே'' என்று தூபமிட்டுப் பதவிப் பித்தை ஏற்படுத்தினான். தந்தையை அகற்றிவிட்டு ஆட்சியைப்பெற மகன் ஆசை கொண்டான். இதற்காக வகுக்கப்பட்ட திட்டப்படி கட்டபொம்முவை மகன் விருந்திற்கு அழைத்தான். வந்த விருந்தினரைச் சிவகிரியார் நன்கு உபசரித்தார். ஆனால் கட்டபொம்மு இரவில் சிவகிரியாரைக் கொன்றுவிடத் திட்டமிட்டான். இந்தச் சதியை அறிந்த சிவகிரியார் சேத்தூருக்குத் தப்பிச் சென்று சரண் அடைந்தார். மகன் ஆட்சியில் அமர்ந்தான். இதற்காகக் கட்டபொம்மு ஒரு பெரும் தொகையை லஞ்சமாகப் பெற்றான். சிவகிரியாரை ஒழிக்கத் திட்டமிட்ட கட்டபொம்மு, சேத்தூராருக்குக் கடிதம் எழுதித் தந்தை மகனிடையே சமரசம் பேச விருப்பம் தெரிவித்தார். பேச்சு வார்த்தை முடிந்து நடந்த விருந்தில் பரிமாறப்பட்ட மதுவில், சேத்தூராருக்குக்கட்டபொம்முவின் ஆட்கள் மயக்க மருந்து கலந்து விட்டனர்.

''மயக்கத்திலாழ்ந்த சேத்தூரார் சிறிது விழித்துப் பார்த்தார். உடனே அவர்களது சதித்திட்டம் அவருக்குப் புரிந்து விட்டது. அவர் திகிலடைந்து குரலெழுப்ப, அடுத்த கணமே பாவி கட்டபொம்மு அவரைத் தன் குத்துவாளால் குத்திக் கொன்றான். பாளையக்காரரின் அபயக்குரல் கேட்டு ஓடிவந்த மனைவி மக்களையும் ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தான்'' (பக் 272 – 279)

தமிழ்வாணன் கூறும் இந்தக் கதை வரலாற்று நூல்களிலோ, வாய்மொழி வழக்காற்றிலோ காணமுடியவில்லை. சிவகிரிப் பாளையக்காரருக்கும் மகனுக்குமே விரோதம். கட்டபொம்மு சிவகிரியாரின் மகனை ஆதரிக்கும் போது, சிவகிரியாரைத் தானே கொன்றிருக்க வேண்டும். தந்தையை ஒழிப்பதுதானே திட்டம். அப்படி இருக்க யாதொரு சம்பந்தமும் இல்லாத சேத்தூராரையும் குடும்பத்தையும் ஏன் கொலை செய்ய வேண்டும்? தமிழ்வாணன் தாம் சொல்லும் பொய்யைப் பொருத்தமாகக் கூடச் சொல்ல

வில்லை. ஆனால் உண்மை என்னவென்றால், சிவகிரிப் பாளையக்காரர் தாம் சேத்தூர்ப் பாளையக்காரரைக் கொன்றார். கால்டுவெல்லும் இவ்வாறே எழுதியுள்ளார் (ப 161). இதனைக் குருகுகதாசப் பிள்ளை ''சேத்தூராரையும் அவரது குடும்பத்தாரையும் அநியாயமாகச் சிறிதளவேனும் இரக்கமில்லாமலும் அனுதாபமின்றியும் வன்கொலையாகக் கொன்ற சிவகிரியார்'' என்று கூறுகிறார். (ப 202). தமிழ்வாணனின்குரு சிரஞ்சீவியும் சேத்தூராரைக் கொலை செய்தது சிவகிரியார் என்றே சொல்லியுள்ளார் (ப 311).

இந்த வரலாற்று உண்மையை மூடிமறைத்து விட்டுச் சேத்தூராரைக் கொன்றது கட்டபொம்மு என்று சிறிது கூடப் பதற்றம் இல்லாமல், இந்த உண்மை வெளிப்பட்டால் பிற்காலத்தில் மக்கள் தன்னைப் பற்றி எவ்வளவு இழிவாக எண்ணுவார்கள் என்ற அச்சமும், நாணமும் இல்லாமல், துணிந்து தமிழ்வாணன் மிகப் பெரிய பொய் சொல்லியுள்ளார். இது தமிழ்வாணனின் தரக்குறைவையும், கட்டபொம்முவை இழிவு படுத்த வேண்டும் என்ற அவருடைய உள் நோக்கத்தையும் புலப்படுத்துகிறது.

பாஞ்சாலங்குறிச்சியினர் யாரையும் வன்கொலை செய்ததாக வரலாற்றுச் செய்தி இல்லை. மாறாக, தங்கள் எதிரிகளிடம் கூட இரக்கத்துடன் நடந்ததற்குச் சான்றுகள் உள்ளன. பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பி வந்து மீண்டும் கோட்டை அமைத்த ஊமைத்துரை, கும்பினியார் பகுதிகளைத் தாக்கிப் பிடித்தார். முதலில் தூத்துக்குடி மீது படையெடுத்துச் சென்று கோட்டையைக் கைப்பற்றினார். அங்கு ஆங்கில வீரர்கள் வைத்திருந்த ஆயுதங்களை மட்டுமே பறித்துக் கொண்டார். அவர்களுக்கு வேறு எந்த இடையூறும் செய்யவில்லை. படைத் தளபதியை ஒரு படகிலேற்றிப் பிழைத்துப் போகும்படி விட்டார். அங்கிருந்த ''பாக்கட்'' என்ற ஆங்கில அதிகாரியை மட்டும் சிறை செய்து பாஞ்சாலங்குறிச்சி கொண்டுவந்தார். அதிகாரியின மனைவி கூடவே வந்து ஊமைத்துரையிடம் முறையிட்டபோது, அவர் மனமிரங்கி அதிகாரியை விடுதலை செய்து, அவருடைய சொத்துக்களையும் திரும்பக் கொடுத்துவிட்டார் (தி. நா. சு. பக் 196–197). தங்களுடைய சகோதரனை அநியாயமாகத் தூககிலிட்டுக் கோட்டையைத் தரைமட்டமாக்கிய வெள்ளையரைக் கூடப் பாஞ்சாலங்குறிச்சியார் போர்முறைக்குப் புறம்பாகப் பழி வாங்கவில்லை. இத்தகைய நற்பண்பு உள்ளவர்களைத் தமிழ் வாணன்,

''நிராயுதபாணிகளான கிழவரையும் பெண்டிரையும் பச்சிளங் குழந்தைகளையும் நெஞ்சில் சிறிதும் ஈரமின்றிக்

கேவலம் அற்பக் காசுக்காகக் கொலை செய்தான் கட்ட பொம்மன். சேத்துராரின் இரத்தம் அவன் கையை விட்டு அகலாத கறை!'' (ப 273)

என்று கொடிய வார்த்தைகளால் இழிவுபடுத்தியுள்ளது நியாயமற்ற செயலாகும்.

கட்டபொம்முவைத் தூக்கிலிட்ட பானர்மேன் செயலைவிடத் தமிழ்வாணன் செய்துள்ள இந்தப் பழிச் செயல் கொடுமையான தாகும். கட்டபொம்முவின் கரத்தில் யாரையும் வஞ்கொலை யாய்க் கொன்ற குருதிக் கறை இல்லை. ஆனால் வரலாற்று உண்மையைக் கொன்ற குருதி தமிழ்வாணன் கரத்தில் அழிக்க முடியாத கறையாகப் படிந்து உள்ளது.

# 9.

# கட்டபொம்முவும் இராமநாதபுரம் பேட்டியும்

## 1) அஞ்சி நடுங்கிச் சென்றாரா?

இராமநாதபுரம் பேட்டி கட்டபொம்முவின் வரலாற்றில் முக்கியமான நிகழ்ச்சியாகும். மாக்ஸ்வெல் நில அளவை எனும் பெயரில் தன் பகுதிகளை எட்டையபுரத்தாருக்குக் கொடுத்ததைக் கட்டபொம்மு ஏற்கவில்லை. தம் தந்தையைப் போலவே வீரபாண்டியனும் வெள்ளையரை எதிர்த்து அவர்களுக்கு எதிரான பல செயல்களில் ஈடுபட்டார். வரி ஒழுங்காகக் கட்டவில்லை. இது குறித்துக் கலெக்டர் ஜாக்சன் பலமுறை கடிதம் எழுதியும் கட்டபொம்மு சென்று பார்க்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெள்ளையர்க்கு ஆதரவான பாளையக்காரர்களாகிய எட்டையபுரத்தார், சிவகிரியார் போன்றோர் ஜாக்சனிடம் கட்ட பொம்மு பற்றிக் குற்றச்சாட்டுகளை அடுக்கினர். இதனால் சினம் கொண்ட ஜாக்சன் உடனே படை அனுப்பும்படி கவர்னருக்குக் கடிதம் எழுதினான். ஆனால் கவர்னர் கட்டபொம்முவை அழைத்துப் பேசுமாறு ஆலோசனை வழங்கினார். இது ஜாக்சனுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. எனவே, தம் திட்டத்தை நிறைவேற்றும் உள்நோக்கில், கடிதம் கண்ட 15 நாட்களுக்குள் கட்டபொம்மு இராமநாதபுரத்தில் தம்மைச் சந்திக்குமாறு எழுதி அனுப்பிவிட்டு, ஜாக்சன் குற்றாலம் சென்று விட்டார்.

கட்டபொம்முவை ஆத்திரமூட்டி, ஊர் ஊராக அலைக்கழித்துச் சந்திக்கவிடாமல் செய்துவிட்டால், அதையே காரணமாகக் காட்டிப் பதவியிலிருந்து நீக்கிவிடலாம் என்பதே ஜாக்சன் திட்டம். தமிழ்வாணனும் இந்த உண்மையை ஒத்துக்கொள்கிறார் (ப 307). இவ்வாறு ஜாக்சன் சூழ்ச்சியை ஒத்துக்கொண்ட தமிழ்வாணன், இந்த அடிப்படையில் பின்வரும் நிகழ்ச்சிகளை அணுக வேண்டு மல்லவா? அப்படி அணுகாமல் குற்றம் சுமத்தும் கண்ணோட்டத் திலேயே இராமநாதபுரம் பேட்டி நிகழ்ச்சி ஒவ்வொன்றையும் எழுதுகிறார். இதோ, தமிழ்வாணன் கூறுவது:

> ''தன்னுடைய பாளையத்தைப் பறிமுதல் செய்து ஜாக்சன் அதை வேறு யாருக்காவது கொடுத்துவிடக்கூடும் என்ற பெரும் பீதி கட்டபொம்மனுக்கு ஏற்பட்டுவிட்டது. அதை எப்படியாவது தவிர்க்க வேண்டுமென்று கும்பினியின் உத்தரவுக்கு அவன் உடனே கீழ்ப்படியத் தொடங்கி விட்டான். (ப 308).
>
> வெள்ளையனுக்கு அடிமைப்படாத ஒரு சுதந்திர அரசுக்கு அதிபதியாக இருந்திருந்தால், கட்ட பொம்மன் கலெக்டரைக் காணப் போயிருக்க வேண்டிய தில்லை. கலெக்டர் ஆணையை ஆண்மையுடன் மறுத்து நின்றிருக்கலாம். (ப 308)
>
> ''மானம் போனாலும் பரவாயில்லை, தன் பதவி போய் விடக்கூடாது என்று அவன் (கட்டபொம்மு) பேட்டி காண்பதில் உறுதியாக நின்றான் (ப 316).

மேற்கூறியவற்றால் கலெக்டர் அழைத்தபோது கட்டபொம்மு பேட்டிக்குச் சென்றது தவறு. அவர் அவ்வாறு சென்றது, அவரது கோழைத்தனத்தைக் காட்டுகிறது என்பது தமிழ் வாணனின் வாதம். சரி. இந்த வாதத்தை ஏற்றுக்கொள்வோம். ஆனால் இந்த இடத்தில் இது போன்ற மற்றொரு பேட்டி நிகழ்ச்சி பற்றிய தமிழ்வாணன் விமர்சனத்தை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது.

இராமநாதபுரம் பேட்டியில் ஜாக்சன் நடந்துகொண்ட விதம் தவறு என்று கண்டுகொண்ட நிர்வாகம் பினனர் அவரைப் பதவி நீக்கம் செய்து, லூசிங்டனைப் பொறுப்பில் அமர்த்தியது. பதவியேற்ற கலெக்டர் லூசிங்டன், கட்டபொம்முவை உடனே வந்து காணுமாறு கடிதம் எழுதினார்.

பாளையக்காரர்கள் அரசு அதிகாரிகளைப் பேட்டி காண முறையாக எழுத்து மூலமாக அழைக்கப்படுவது மரபு. இதனைக் ''கவுல்'' என்று சொல்லுவர். இது கால் (Call) என்ற ஆங்கிலச் சொல்லின் திரிபாகும். கவுல் பெற்றுச் செல்லும் பாளையக் காரரை மதிப்புடன் நடத்தவேண்டும். பேட்டி முடிந்து திரும்பும் போது தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத ஒர் அதிகாரி மரியாதைக்காகப் பாளையக்காரர் இருப்பிடம் வரை உடன் வந்து செல்லவேண்டும். கலெக்டர் 'கவுல்' கொடுத்தால் முறைப் படி வருவேன், இல்லையெனில் வர இயலாது என்று கட்டபொம்மு மறுத்து விடுகிறார்.

அப்படியானால், இங்குக் கட்டபொம்மு ஆண்மையுடன் மறுத்துவிடுகிறார் அல்லவா? கும்பினி உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல் அஞ்சாமல் எதிர்க்கிறார் அல்லவா? தாம் யாருக்கும் அடிமைப் படாத சுதந்திர அதிபதி என்பதை நிரூபிக்கிறார் அல்லவா? தமிழ்வாணன் என்ன எதிர்பார்த்தாரோ, என்ன விரும்பினாரோ, எப்படி நடக்கவேண்டும் என்று ஆசைப்பட்டாரோ, அப்படி இங்குக் கட்டபொம்மு நடந்துள்ளார். எனவே தமிழ்வாணன் கட்டபொம்மு வின் இந்தச் செயலைப் பாராட்டி, இது சரியான முடிவு என்று வரவேற்று எழுதி இருக்க வேண்டுமல்லவா? அவ்வாறு எழுதுவது தானே நியாயம். அது தானே நடுநிலை ஆய்வு. ஆனால் தமிழ்வாணன்,

> ''கலெக்டர் ஜாக்சன் அழைத்த போது குற்றநெஞ்சுள்ள கட்டபொம்மன் அவரைப் பார்க்கப் போவதற்குப் பயந்து தயங்கினான்'' (ப. 337)

என்று கூறுகிறார். இது என்ன நியாயம்? கட்டபொம்மு தம் முடைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப, ஆலோசனை செய்து, ஜாக்சன் சூழ்ச்சியை அறிந்திருந்தும் துணிச்சலோடு சந்திக்கச் சென்றதைப் ''பெரும்பீதியில்'' சென்றார் என்று இழிவாகப் பேசுகிறார். அதே வேளையில் கலெக்டர் ஜாக்சனைச் சந்திக்க மறுத்த கட்டபொம்மு செயலையும் ''பயத்தினால்'' என்று பழித்துப் பேசுகிறார். இது என்ன விவாதம்? இது தமிழ் வாணனின் பிடிவாதம். இதுதான் தமிழ்வாணனின் ஆய்வு நேர்மை. கட்டபொம்முவின் எல்லா நடவடிக்கைகளையும் குறை சொல்லுவது ஒன்றே தமிழ்வாணனின் நோக்கம் என்பதற்கு இஃது ஒரு சரியான எடுத்துக்காட்டாகும்.

## 2) கட்டபொம்மு கவலைப் பட்டாரா?

இராமநாதபுரம் பேட்டியின் போது நடைபெற்ற நிகழ்ச்சி

குறித்துக் கட்டபொம்மு என்ன நினைத்தார் என்பதை.

> ''நடந்துவிட்ட நிகழ்ச்சிகளை எண்ணிக் கட்டபொம்மனும் மிக்க வேதனையடைந்தான் வெண்ணெய் திரண்டுவரும் போது தாழியை உடைத்தாற்போல், கடைசி நேரத்தில் தான் சற்று அவசரப் புத்தியுடனும் கோழைத்தனமாகவும் நடந்துகொண்டு விட்டதை எண்ணி அவன் கவலைப் பட்டான்'' (ப 324) என்று தமிழ்வாணன் கூறுகிறார்.

இதற்கு என்ன ஆதாரம் உள்ளது. தான் அவசரப்புத்தியுடனும் கோழைத்தனத்துடனும் நடந்து கொண்டதாகக் கட்டபொம்மு எந்த இடத்திலாவது வாக்குமூலம் கொடுத்துள்ளாரா? கதைப்பாடல்கள் குறிப்பிடுகின்றனவா? இராமநாதபுரம் பேட்டி பற்றிய ஆதாரங் களாக மூன்றினைக் குறிப்பிடலாம். அவை, 1 கட்டபொம்முவின் இரு கடிதங்கள். 2. டேவிட்சன் கடிதம் 3. விசாரணைக்குழுவின் முடிவு. என்பனவாகும். இவற்றில் கட்டபொம்மு தாம் கோழைத் தனத்துடன் நடந்துவிட்டதாக வருந்திய செய்தி இல்லை.

கட்டபொம்மு தம் கடிதத்தில், ''ஆகஸ்டு 23இல் பேட்டி பற்றிய கடிதம் கிடைக்கப்பெற்றேன் என் உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் குற்றாலம் சென்றேன். அங்கே பேட்டி கொடுக்க கால அவகாசம் இல்லை என்று மறுக்கப்பட்டுச் சொக்கம்பட்டி, சிவகிரி, சேத்தூர். ஸ்ரீ வில்லிபுத்தூர் என்று ஒவ்வொரு ஊராகப் பின்தொடரும் நிர்ப்பந்தத்திற்கு ஆளானேன். இறுதியில் இராமநாதபுரம் வந்தேன். அங்கு நான் கைது செய் யப்பட உள்ளதாக, நம்பிக்கைக்குரிய சிலரால் எச்சரிக்கப்பட்டேன். 'கவுல்' பெற்றுப் பேட்டிக்கு வந்திருப்பதால் அப்படி எதுவும் நடக்காது என்று நான் அவர்களிடம் கூறினேன். செப்டம்பர் மாதம் 7ஆம் தேதி மதியம் 1 மணிக்குப் பேட்டி என்று அழைப்பு வந்தது. காலையில் பேட்டி நடைபெறுவதே இயல்பு. பேட்டி இராமலிங்க விலாசத்தில் நடப்பதற்குப் பதில் மெத்தை வீட்டில் நடந்தது. வழக்கத்திற்கு விரோதமாகப் பேட்டியின் நேரமும் இடமும் அமைந்திருந்தன. பொதுவாகப் பேட்டி நடைபெறும் போது என்னுடைய தம்பிமார், மாப்பிள்ளைமார், மாமனார் ஆகியோர் கலந்துகொள்வது வழக்கம். ஆனால் அவர்கள் வாசலிலேயே தடுக்கப்பட்டனர். உள்ளே வர முயன்ற அவர்களைச் சிப்பாய்கள் கடுமையாகத் தாக்கி வெளியே தள்ளினர். கம்பெனி யின் அழைப்பைப் பெற்றே வந்துள்ளோம் என்று கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பேட்டியின் போது நிர்வாகத் தின் உத்தரவு வரும் வரை கோட்டைக்குள்ளேயே தங்கி இருக்க

வேண்டுமென்று சொல்லப்பட்டது. மூன்று மணி நேரம் நடந்த பேட்டியின் போது நான் தண்ணீர் குடிக்கக் கூட அனுமதிக்கப்பட வில்லை. என் உடல் நலம் சரி இல்லாததாலும், கோட்டைக்குள் அம்மை நோய் பரவி உள்ளதாலும் உள்ளே தங்க மறுத்தேன். ஆனால் கோட்டைக்குள்ளேயே தங்க வேண்டுமென்று கலெக்டரால் கட்டாயப்படுத்தப்பட்டேன். நான் வெளியே சென்று வர அனுமதி பெற்று வந்தபோது, திடீரென்று இரண்டு வீரர்கள் என் மடியைப் பிடித்து இழுத்து அவமதித்தனர். வெளியில் என்னுடைய உடைமைகள் ஆங்கில வீரர்களால் ஏலமிடப்படுவதைப் பார்த்தேன் ஆபத்தை உணர்ந்து வெளி வாயிலை நோக்கிச் சென்றேன்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

கணபதியா பிள்ளையின் 'எட்டையபுரம் அன்றும் இன்றும்' என்ற நூலில் (பக். 52-60) கட்டபொம்முவின் கடிதம் மேற் கோளாகக் காட்டப்பட்டுள்ளது. கட்டபொம்மு எழுதிய ஓலையின் மொழிபெயர்ப்பு, சென்னை ஆவணக் காப்பகத்தில் உள்ளது (ஆர். சி. தொகுதி. 88, பக். 3103-3107). இவற்றில் கட்டபொம்மு, தாம் அவசரத்துடனும் கோழைத்தனத்துடனும்' நடந்துகொண்ட தாக வருத்தப்பட்ட செய்தி காணப்படவில்லை. மாறாக, ''எந்தப் பயமும் இல்லாமல் இராமநாதபுரம் வந்தேன்'' என்றே குறிப்பிட்டுள்ளார் (ஆர். சி ப. 3105).

ஆவணக் காப்பகத்திலுள்ள ரெக்கார்டுகளைப் பார்வையிட்ட தமிழ்வாணன் கட்டபொம்முவின் கடிதத்தைப் படிக்கவில்லையா? அல்லது பதிவேடுகளைப் பார்வையிட்டதாகத் தமிழ்வாணன் கூறுவது பொய்யா? உண்மைச் சான்றுகளை மறைத்து, ஒரு வரலாற்று நாயகனை அவமதிப்பதுதான் தமிழ்வாணன் ஆராய்ச்சி போலும்.

### 3) கட்டபொம்முவைத் தூக்கிச் சென்றனரா?

பேட்டியின்போது கட்டபொம்மு அரண்மனை உள்ளே தங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டார். இது, தம்மைச் சிறைப்படுத்தும் முயற்சியே என்பதை உணர்ந்த கட்டபொம்மு தப்ப முடிவு செய்தார். வெளியில் சென்றுவர அனுமதி பெற்று, நேராக வாசலை நோக்கிச் சென்று, அங்கு நின்றிருந்த மாப்பிள்ளைமார், தம்பியரோடு வெளியேறினார். செல்லும் வழியில் தங்களைத் தடுத்த லெப்டினண்ட் கிளார்க் என்னும் வெள்ளையனை வெட்டிக் கொன்றுவிட்டே வெளியேறினர். ஆனால் இந்த நிகழ்ச்சியைத் தமிழ்வாணன்,

''கட்டபொம்மன் இரண்டாவது வாசலைத் தாண்டி மைதானத்தை அடைந்தான். அங்கு ஏற்கனவே அவன் விட்டுச் சென்றிருந்த, அவன் மைத்துனன் முதலியோர் இருந்தனர். அவர்கள் கட்டபொம்மனைத் தூக்கிக் கொண்டு கோட்டை வாயிலுக்கு விரைந்தனர். கட்டபொம்மன் தன்னையே மற்றவர்கள் தூக்கிக்கொண்டு போக வேண்டிய அளவுக்குக் கிலியடித்துப் போயிருந்தான்'' (ப. 323) என்கிறார்.

கட்டபொம்முவைத் தூக்கிக்கொண்டு போக வேண்டிய அவசியம் என்ன? முடமா? குருடா? சின்னக் குழந்தையா? அல்லது கிழவனா? ஒரு மனிதன் தப்பிச் செல்லும் போது தானாகச் செல்வது எளிதா? மற்றவர்கள் தூக்கிக் கொண்டு செல்வது எளிதா? இந்தக் கயிற்றைத் திரிப்பதற்குத் தமிழ்வாணன் எங்கிருந்து மணலை அள்ளியுள்ளார் என்பதைப் பார்ப்போம்.

இராமநாதபுரம் பேட்டி பற்றி தி. நா. சு. தம்முடைய 'கட்டபொம்மு' என்ற நூலில் விரிவாக எழுதுகிறார். பேட்டியிலிருந்து கட்டபொம்மு வெளியேறியதும், வெளியில் நின்ற பாஞ்சை வீரர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். ''இருவர் கைலாகு கொடுக்க வாயிலை நோக்கி விரைந்தார்'' என்று தி. நா. சு. குறிப்பிடுகிறார் (ப. 118).

அரசன் நடந்து வரும்போது தன் இருமருங்கும் வரும் அடைப்பைக்காரர்களின் தோள்மீது கை வைத்துக் கொண்டு கம்பீரமாக நடப்பதையே 'கைலாகு' என்பர். இதைத் தெளிவுபடுத்தவே தி. நா சு. ''தோள்மீது கை வைத்துக் கொண்டு'' என்றும் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய வீரர்கள் தோள் மீது கை வைத்துக் கொண்டு கட்டபொம்மு நடந்து சென்றதாகத் தி. நா. சு. கூறும் நிகழ்ச்சியைத் தான் தமிழ்வாணன் தம்முடைய கற்பனைக் குதிரையிலேற்றிச் சாக்கடையில் நீராட்டித் ''தூக்கிக் கொண்டு போக வண்டிய அளவிற்குக் கிலியடித்துப் போயிருந்தான்'' என்று கட்டபொம்மு மீது அவமதிப்பு வண்ணத்தைப் பூசி ஆனந்தமடைகிறார்.

## 4 தமிழ்வாணனின் நஞ்சு தோய்ந்த சொல்லும், நடையும்

தமிழ்வாணன் இராமநாதபுரம் பேட்டி பற்றி எழுத, தி. நா. சு. வின் 'கட்டபொம்மு' என்ற நூலையே துணையாகக் கொண்டுள்ளார். ஆனால், அங்கிருந்து செய்திகளை எடுத்துக்

கொண்ட தமிழ்வாணன் தம்முடைய இழிவுபடுத்தும் கண்ணோட்டத்திற்கு ஏற்ப, ஒவ்வொரு சொல்லிலேயும் நச்சு முலாம் பூசி எழுதுகிறார். பேட்டி பற்றி இவர் எழுதும் செய்தியைத் தி. நா. சு. கூறுவதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் இந்த உண்மையை உணரமுடியும். கட்டபொம்மன் பேட்டியிலிருந்து வெளியேறுவதைத் தி. நா. சு.

> ''அவர் (கட்டபொம்மு) வெளியில் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த பால்போர் என்னும் துரை கலெக்டரை அழைத்து இச்செய்தியைத் தெரிவித்தான். கலெக்டரும் மெத்தையின் முன் புறத்தில் இருந்த அறையை அடைந்து வெளியில் எட்டிப் பார்த்தார். கட்டபொம்மு சென்று கொண்டிருப்பதைக் கவனித்து அவரைப் போகவேண்டாம் என்று தடுத்தார். கட்டபொம்மு அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இரண்டாவது வாசலைத் தாண்டி மைதானத்தை அடைந்துவிட்டார்'' (பக். 117–118) என்று கூறுகிறார்.

இதையே தமிழ்வாணன்,

> ''கட்டபொம்மன் ஓடுவதைக் கண்ட பால்போர் என்னும் வெள்ளை அதிகாரி, கலெக்டரைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டான். கலெக்டரும் மெத்தையின் முன்புறத்திலிருந்த அறையை அடைந்து, வெளியே எட்டிப் பார்த்தான். கட்டபொம்மன் ஓடுவது தெரிந்தது. ''ஓடவேண்டாம் உனக்கு எவ்விதமான ஆபத்தும் வராது'' என்று அவன் காதில் விழும் பொருட்டுக் கலெக்டர் உரக்கக் கத்தினான். ஆனால் ஆங்கில மொழியை அறியாமையால், கலெக்டர் என்ன சொல்கிறானென்றே கட்டபொம்மனுக்குப் புரியவில்லை. கலெக்டரின் குரலைக் கேட்டதும், அவன் இன்னும் பெரும் பீதிகொண்டு ஓடத் தொடங்கினான்'' (பக். 322-323.) என்று எழுதியுள்ளார்.

தி. நா சு. நூலிலிருந்து செய்திகளை எடுத்தாளும் தமிழ்வாணன், அதில் கருத்துமாற்றம் இல்லாமல்தான் கையாண்டிருக்க வேண்டும். கருத்துமாற்றம் இருக்குமானால், தி. நா. சு. வின் கருத்தை மாற்றமில்லாமல் கூறி, அதன்பின் தக்க ஆதாரத்தோடு அதை மறுத்துத் தன் கருத்தை நிலைநாட்டி இருக்கவேண்டும். இரண்டுமில்லாமல், மூலநூலின் கருத்திற்கு முற்றிலும் எதிரான சொற்களைப் பயன்படுத்திக் கருத்துக் கொலை புரிந்துள்ளார். தி. நா. சு. வின் கருத்தைக் கையாள்வதில் தமிழ்வாணன் செய்துள்ள மோசடியைக் கீழ்க்காணும் அட்டவணை மூலம் நாம் இன்னும் தெளிவுபடுத்தலாம்.

| தி. நா. சுப்பிரமணியன் | தமிழ்வாணன் |
|---|---|
| 1. அவர் வெளியில் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த பால்போர் | கட்டபொம்மன் ஓடுவதைக் கண்ட பால்போர் |
| 2. கலெக்டரும் மெத்தையின் முன் புறத்தில் இருந்த அறையை அடைந்து வெளியில் எட்டிப்பார்த்தார். கட்டபொம்மன் சென்று கொண்டிருப்பதைக் கவனித்து, | கலெக்டரும் மெத்தையின்முன்புறத்திலிருந்த அறையை அடைந்து, வெளியே எட்டிப்பார்த்தான். கட்டபொம்மன் ஓடுவது தெரிந்தது. |
| 3. அவரைப் போக வேண்டாமென்று தடுத்தார். | ஓடவேண்டாம் உனக்கு எவ்விதமான ஆபத்தும் வராது, என்று அவன் காதில் விழும் பொருட்டுக் கலெக்டர் உரக்கக் கத்தினான். |
| 4. கட்டபொம்மன் அதைக்காதில் போட்டுக் கொள்ளவில்லை. | ஆனால் ஆங்கில மொழியை அறியாமையால் கலெக்டர் என்ன சொல்கிறானென்றே கட்டபொம்மனுக்குப் புரியவில்லை. |
| 5. இரண்டாவது வாசலைத் தாண்டி மைதானத்தை அடைந்து விட்டார். | கலெக்டரின் குரலைக் கேட்டதும். அவன் இன்னும் பெரும் பீதி கொண்டு ஓடத்தொடங்கினான் |

'சென்றான்' என்ற சொற்கள் வரும் இடங்களிளெல்லாம் 'ஓடினான்' என்ற சொல்லைத் தமிழ்வாணன் திட்டமிட்டே பயன்படுத்தியுள்ளார். வீரன் கட்டபொம்மு என்று மக்கள் மனத்தில் பதிந்துள்ள வீர உருவத்தை, மாசுபடுத்த வேண்டும் என்ற, தமிழ்வாணனின் உள்நோக்கத்தை நாம் உணரமுடிகிறது.

''இராமநாதபுரம் பேட்டியில் கட்டபொம்மு சற்று அவசரப் புத்தியுடனும் கோழைத்தனமாகவும் நடந்து கொண்டு விட்டதை எண்ணி வருந்தினார்'' என்று தமிழ்வாணன் கூறுவது ஆதாரமற்றது. கட்டபொம்முவைத் தூக்கிக் கொண்டு அவர் ஆட்கள் ஓடினர் என்பதும் தமிழ்வாணனின் கற்பனைக் கதை. தி. நா. சுப்பிரமணியன் நூலை அடிப்படியாகக் கொண்டு இராமநாதபுரம் நிகழ்ச்சியை எழுதும் தமிழ்வாணன், கட்டபொம்முவின் சிறப்பை இழிவு படுத்தும் வகையில் இழிவான சொற்களைத் திட்டமிட்டே பயன்படுத்துகிறார். இதுதான் தமிழ்வாணனின் 'நடுநிலை' ஆய்வு.

## 5. இராமநாதபுரம் பேட்டியும் கதைப்பாடலும்

கட்டபொம்மன் கதைப்பாடல்களைப் பற்றிக் கூறும்போது, ''கத்திமுனைக்குப் பயந்து உளறிக் கொட்டியிருக்கிறார்கள்'' என்றார் தமிழ்வாணன். ஆனால் தமக்கு ஆதரவாகப்பாடலில் ஒரு வரி இருந்தாலும் மேற்கோள் காட்டத் தயங்குவதில்லை. கட்டபொம்மு குற்றாலம் சென்ற போது தம் படை வீரர்களை நோக்கி, ''எங்குச் செல்கிறீர் என்று மக்கள் கேட்டால், குற்றால நாதரைத் தரிசிக்கச் செல்கிறோம் என்று கூறுங்கள்'' என்று சொன்னதாகக் கதைப்பாடல் குறிப்பிடுகிறது.

''கண்ட சனங்கள் நீர் எங்கே போகிறீர் என்று
கண்டிப்பாய் கேட்டவர் தங்களுக்கு
எண்டிசை போற்றிடும் குற்றால நாதரை
இப்போ தரிசிக்கப் போகிறோ மென்று
சொல்லுங்கள் ... ...''

என்ற இந்த வரிகளை மேற்கோள் காட்டிக் ''கலெக்டரைத் தொடர்ந்து போவதாய்ச் சொல்லுவதற்கு வெட்கமுற்றவனாய்க் கட்டபொம்மன் குற்றாலநாதரைச் தரிசிக்கச் செல்வதாய்க் கேட்டவர்களுக்கெல்லாம் பதில் அளிக்குமாறு தன் பரிவாரங்களுக்கு உத்தரவிட்டான், (ப. 311) என்று தமிழ்வாணன் குறை கூறுகிறார். கட்டபொம்மு மனநிலையை விளக்குவதாகப் பாடலை மேற்கோள்காட்டும் தமிழ்வாணன், பேட்டி தொடர்பாகப் பாடல் குறிப்பிடும் மற்ற வரிகளை ஏன் மேற்கோள் காட்டவில்லை? அவை கட்டபொம்முவின் பெருமையைப் பேசுவதாலா? பாடலை ஒதுக்கினால் முற்றிலும் ஒதுக்கிவிட வேண்டும். அதை ஆதாரமாகக் கொண்டால் எல்லாச் செய்திகள் குறித்தும் பாடல் என்ன கூறுகிறது என்பதையும் சுட்ட வேண்டும். கொள்ளுக்கு வாயைத் திறப்பது, கடிவாளம் என்றதும் வாயை மூடிக்கொள்வது நியாயமில்லை. மேலே குறிப்பிட்டுள்ள பாடலின் இரண்டு வரிகளை மட்டுமே படிப்பவர்கள், தமிழ்வாணன் கூற்றை வைத்துக் கதைப் பாடல்களும் கட்டபொம்முவுக்கு எதிராகவே உள்ளன என்றுதானே எண்ணுவார்கள்.

அது மட்டுமல்லாமல், கட்டபொம்மு பேட்டிக்காக ஜாக்சனைப் பின்தொடர்ந்து சென்றதைத் தமிழ்வாணன், ''தைரியம் இன்றிச் சென்றான் – அஞ்சி நடுநடுங்கினான் – கட்டபொம்முவிற்குப் பயத்தால் குளிர் சுரமே வந்துவிட்டது – தனக்கு நேர்ந்த அவமானங்களைப் பொறுத்துக்கொள்ளத் தீர்மானித்தான் – கெஞ்சிக்

கெஞ்சிக் குழைந்து குழைந்து பேட்டி தருமாறு கேட்டான், மானம் போனாலும் பரவாயில்லை, தன் பதவி போய்விடக் கூடாது என்று அவன் உறுதியாய் நின்றான், கலெக்டருக்குக் கருணை மனு போட்டான்'' (பக். 312-316) என்று கட்டபொம்முவை ஒரு கோழையாகச் சித்திரிக்கிறார். இதற்கு ஆதாரம் என்ன? தமிழ்வாணன் இவற்றிற்கும் பாடல்களைச் சான்று காட்டி இருக்கலாம் அல்லவா?

கட்டபொம்மு, ஜாக்சனைப் பின்தொடர்ந்தபோது நடந்த நிகழ்ச்சிகளையும், எண்ண ஓட்டங்களையும் அறிய வரலாற்று நூல்களை விட, கதைப்பாடல்களே சிறந்த சான்றாகும். ஏனென்றால், பாடகர்களில் சிலர் அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்தவர். சிலர் அந்தத் தலைமுறையினரிடம் நேராகக் கேட்டு உணர்ந்தவர். கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதி நூலகத் தாரால் 1960இல் வெளியிடப்பட்டுள்ள 'கட்டபொம்மன் வரலாறு' என்ற கதைப்பாடலைச் ''சங்கரமூர்த்திப் புலவரே பாடி இருக் கலாம்'' என்று பதிப்பாசிரியர் குறிப்பிடுகிறார் (க.பொ.வ ப. 9). இந்தச் சங்கரமூர்த்திப் புலவர் கட்டபொம்மு அவைப்புலவர். ஆகவே, கதைப்பாடல்கள் கட்டபொம்முவோடு மிகவும் நெருங்கிய வர்களாலும், அனைத்து நிகழ்ச்சிகளையும் அறிந்தவர்களாலும், அறிந்தவர்களிடம் நேரிடையாகக் கேட்டவர்களாலும் பாடப்பட்டி ருக்க வேண்டும் என்பது உறுதி. கட்டபொம்மு கதைப்பாடலை வாரந்தோறும் ஆனந்தவிகடனில் வெளிட்ட ஆசிரியர் முன்னுரையில் இந்தக் கருத்தையே வலியுறுத்துகிறார். எனவே தான் வேறு வரலாற்றுக் கதைப்பாடல்களில் இல்லாத அளவிற்கு வரலாற்று உண்மைகள் கட்டபொம்மு கதைப்பாடல்களில் மிகுதி யாகக் காணப்படுகின்றன.

கட்டபொம்மு பேட்டிக்காகப் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து புறப்பட்டு இராமநாதபுரம் அடைந்தபோது, இடையில் நடை பெற்ற நிகழ்ச்சி குறித்து, கதைப்பாடல்கள் கூறும் செய்திகளை ஏற்றுக்கொள்வது சரியானதே. ஜாக்சனிடமிருந்து கடிதம் வந்தது முதல் இராமநாதபுரம் சேர்ந்தது வரை உள்ள நிகழ்ச்சி குறித்துக் கதைப்பாடல்கள் கூறுவதை இனிமேல் காணலாம்.

பேட்டிக்கு வருமாறு ஜாக்சன் பிப்ரவரி 3ஆம் தேதி கட்ட பொம்முவிற்குக் கடிதம் எழுதினார். பின்னர் வைகுண்டம் பிள்ளை என்பவரை 1798 ஏப்ரல் 28ஆம் தேதி அனுப்பினார். பலமுறை இராமநாதபுரம் வரச்சொல்லி எழுதியும் கட்டபொம்மு வரவில்லை. மே மாதம் 23ஆம் தேதி ஒரு கடிதம் எழுதிப்

பதினைந்து நாட்களுக்குள் இராமநாதபுரம் வரவேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார். ''அவர் வருவதற்கு மறுத்தால் அவருடைய பாளையத்தைப் பறிமுதல் செய்து சர்க்காருக்குச் சேர்த்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும் என்று பயமுறுத்தியதுடன், அவரைக் கைப்பிடியாகப் பிடித்து வருமாறு அந்தக் கடிதத்தை எடுத்துச் சென்றிருந்த அரிக்காரனுக்குக் கட்டளை இட்டு இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். இந்தக் கடிதம் கலெக்டர் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. கட்டபொம்மு பணம் செலுத்தவும் இல்லை. இராமநாதபுரம் வரவுமில்லை. கட்டபொம்மு எந்த மிரட்டலுக்கும் அஞ்சவில்லை என்று தி. நா. சு. குறிப்பிடுகிறார் (ப. 100). ஆனால் தமிழ்வாணனோ ''மானம் போனாலும் பரவாயில்லை தன் பதவி போய் விடக் கூடாது என்பதில் உறுதியாய் நின்றான்'' என்கிறார். கட்டபொம்முவை அடக்க உடனே படை அனுப்புமாறு கவர்னருக்கு ஜாக்சன் எழுதினார். ஆனால் நிர்வாகம் கட்டபொம்முவை அழைத்துப் பேசுமாறு அறிவுரை வழங்கி, இதற்கும் அவர் வரவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க ஜாக்சனுக்கு அதிகாரம் வழங்கலாம் என்று தீர்மானித்தது. அதன்படி ஜாக்சன் ஆகஸ்டு 18ஆம் தேதி கடிதம் எழுதிச் செப்டம்பர் 5ஆம் தேதிக்குள் வந்து சந்திக்க வேண்டும், இல்லா விட்டால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று குறிப்பிட்டிருந்தார். கட்டபொம்மு அக்கடிதம் குறித்துத் தம் தம்பியர், மாப்பிள்ளைமார், மாமன், தானாதிபதி ஆகியோருடன் ஆலோசனை செய்தார். இனி, கதைப்பாடல்கள் இவர்கள் மனநிலையையும் செயலையும் குறித்துச் சொல்லும் செய்திகளைக் காண்போம்.

1) கடிதம் கண்டதும் கட்டபொம்மு சினமுற்றார் :

''தீராதி தீரன் வீரபாண்டியர்க்கு அதிகக்கோபங்கள் தானாகி'' (நட. ப. 23)

2) கலெக்டரைச் சந்திக்க விரும்பவில்லை:

''முப்பது பொன் பெத்த சம்பளக்காரனை
நானென்ன சந்திப்புக் காண்கிறது'' (ஜெக. ப. 24)

3) பேட்டி என்று அழைத்துச் சூழ்ச்சி செய்தால், அதையும் சந்தித்து முறியடிப்போம் என்றான் ஊமைத்துரை:

''கையைக்கடித்தவன் துடைதட்டினான் இரு
கண்ணும் சிவந்திடக் கோபமுடன்
சந்தோச மாகவே பேட்டி தந்தால் நம்மள்

V2N:51547
N92
18243
சென்னை-600 00

சலாமென்று பேட்டி செய்வோம்
மாயைகள் வஞ்சனை செய்தக்கால் வலு
மண்டை சிதற உடைப்ப னென்றான்''
(க. பொ. வ. ப. 6)

ஊமைத்துரை 'கூறியவாறே இராமநாதபுரத்தில் நடைபெற்றது என்பதை நாம் நினைவு கூரவேண்டும்.

4) கட்டபொம்மு பேட்டிக்குப் புறப்பட்டுச் செல்வதைப் ''பூமிதனில் சுத்த வீரசூரன் பாருங்கடி'' (க. பொ. வ. ப. 16) என்று கட்டபொம்முவைச் 'சுத்தவீரன்' என்கிறான் பாடகன். ஆனை, பரி, சேனை சூழ்ந்துவர, பேரிகைமுழங்க, வெண்சாமரம் வீசிட, கம்பீரமாகக் கட்டியங்கூற, கட்டபொம்மு வரும் தோற்றம் கண்டு ஜாக்சன்,

''சந்திப்பு செய்யவும் வந்ததில்லை இவன்
சண்டை முயற்சியால் வந்திருக்கான்''
(க. பொ. வ. ப. 17)

என்று ஆத்திரமும், அச்சமும் கொண்டதாகப் பாடகன் கூறுகிறான். பலமுறை தன்னைப் பார்க்க மறுத்தவன், இன்று பெரும் படையுடன் வருவதைக் கண்ட ஜாக்சன் உள்ளத்தில், இத்தகைய சிந்தனை ஓட்டம் ஏற்பட்டதாகப் பாடல் கூறுவது, பொருத்தம் உடையதாகவே உள்ளது.

பேட்டிக்குப் பின்தொடர்ந்து சென்ற கட்டபொம்மு ''கலக்கமடைந்தான்'' கவலைகொண்டான் (ப. 312) சிவகிரி சென்றபோது, தனக்கு யாது தீங்கு நேருமோ என்று அவன் அஞ்சி நடுங்கினான்'' (ப. 314) என்று தமிழ்வாணன் எந்த ஆதாரமும் இல்லாமல் நேரில் தாமே பார்த்தது போல் கூறுகிறார். ஆனால் கட்டபொம்மு காலத்தில் வாழ்ந்த, நிகழ்ச்சிகளை நன்கு அறிந்த பாடகன் கட்டபொம்மன் கவலை கொண்டதாகக் கூறவில்லை. பின்தொடர்ந்தபோது தங்கிய ஒவ்வொரு ஊரிலும் என்ன நடந்தது என்பதைத் தெளிவாகப் பாடியுள்ளான்.

7. குற்றாலத்தில் தங்கி இருந்தபோது :

''பத்தியாய்க் குற்றால நாதர் தெரிசனம்
பார்த்துச் சிந்தைமனம் பூரித்திட்டார்
விஸ்தாரக் கூடாரம் போட்டாராம் சற்றே
வேடிக்கையாய்ச் சபை செய்தாராம்
குத்துக்கால் வெள்ளி விலாசம் பூச்சரமாம்

முத்துச் சித்திரக் கூடார வுல்லாசம்
மெத்தை விரித்து ஒலகு வைத்து அங்கே
வீற்றிருந்தான் கட்டபொம் முதுரை
சின்னத்துரையும் சிவத்தய்யா முத்தய்யா
சேகரக் கார ரனை வோரும்
கர்ணன் தானாபதிப் பிள்ளையுடன் படை
மன்னரெல் லாரும் மகிழ்ந்திருந்தனர்
சன்னதி வாசலில் கட்டபொம்மு துரைச்
சமத்தன் வந்து கொலுவிருக்க''

(க. பொ. வ. ப. 16)

''நளினமாகவே கட்டபொ முதுரை
நாட்டிய வேடிக்கை தான் பார்த்து''

(ஜெக. வரி 143)

இவ்வாறு கட்டபொம்மு அருவியில் நீராடிக் குறும்பலா ஈசரை வழிபட்டு, நாட்டிய நிகழ்ச்சி கண்டு மகிழ்ச்சியாக இருந்ததாகப் பாடல் குறிப்பிடுகிறது.

7. சிவகிரி சென்றபோது அங்கு மலையில் வேட்டையாடி மகிழ்ந் திருந்ததை,

''மந்திர ரண புயன் மால் வீரபாண்டியன்
மலை வேட்டை யாடலுற்றார்'' (நட.403-404)

என்று பாடல் கூறுகிறது.

கட்டபொம்மு இராமநாதபுரம் வந்தபோது, அவரைக் கைது செய்யும் திட்டம் உள்ளது என்று பலர் எச்சரித்தனர். அந்த வேளையிலும் கட்டபொம்முவும் அவர் படை வீரர்களும் அச்ச மின்றி மகிழ்ச்சியாகப் பொழுது போக்கில் ஈடுபட்டனர். இதை,

''உத்தமன் கட்டபொம் மேந்திரன் துரைரதி
சித்தன் சிவத்தய்யா ஊமைத்துரை
சிங்கார மாகக் கொலுவிருக்க அங்கே
சேவகரெல் லோருஞ் சூழ்ந்திருக்க
கங்கை குலாதிபன் பிள்ளைமகன் சித்திரக்
கம்பிளி மேல்சபை செய்திருக்க
நாட்டிய மாட ஒயிலாட அங்கே
சேவுக ரெல்லோருஞ் சூழ்ந்திருக்க
தேட்டுக் கபதி பாஞ்சைப் பதிநாடு
தீரனென்று கட்டியங் கூறிடவே
காவல்கா ரன்மகன் வெள்ளையன் சிங்கேறு

சாவல் கட்டி விளை யாடுவதும்
சொக்கட்டான் சாறியைத் தான் பரப்பிக் காயை
முற்கட்டும் பிற்கட்டு மாய்நிரப்பி
கட்டபொம்மு துரை சேனை தளகர்த்தன்
சொக்கட்டா னாடி மகிழ்ந்திருந்தான்''
என்று பாடல் குறிப்பிடுகிறது. (க பொ. வ ப–27)

பேட்டிக்குச் சென்றபோது கட்டபொம்மு வழியெல்லாம், கொலுவிருந்து மகிழ்ந்திருந்தார். நாட்டிய வேடிக்கை பார்த்தார். வேட்டையாடி மகிழ்ந்தார். ஒயிலாட்டம், சேவல்போர் கண்டு களித்தார். படைவீரர்கள் சொக்கட்டான் ஆடி மகிழ்ந்திருந்தனர். இவையே கதைப்பாடல் கூறும் செய்திகளாகும் தமிழ்வாணன் கூறியது போல அஞ்சவுமில்லை. நடுங்கவுமில்லை. கட்டபொம்மு மனநிலையை விளக்க அவர் கூறியதாகவரும் ஒரு செய்தியை மட்டும் பாடலிருந்து மேற்கோள் காட்டிய தமிழ்வாணன், வழியெல்லாம் கட்டபொம்மு வேட்டையாடியும், நாட்டியம்கண்டும், விளையாட்டில் ஈடுபட்டும் மகிழ்ச்சியாகச் சென்றதைக் குறிப்பிடும் பாடல்களை ஏன் மேற்கோள் காட்டவில்லை?

கட்டபொம்மு தம் வீரர்களிடம், ''எங்கு செல்கிறீர் என்று கேட்டால் குற்றால நாதரைத் தரிசிக்கச் செல்வதாகக் கூறுங்கள்'' என்று சொல்லியதாகப் பாடல் குறிப்பிடுகிறது. இதைத் தமிழ்வாணன், ''குற்றாலத்துக்குக் கலெக்டரைத் தொடர்ந்து போவதாய்ச் சொல்லுவதற்கு வெட்க முற்றவனாய்க் கேட்டவர்களுக்கெல்லாம் பதில் அளிக்குமாறு தன் பரிவாரங்களுக்கு உத்தரவிட்டானாம்'' என்று ஆச்சரியக்குறியோடு எழுதியுள்ளார். இதில் என்ன தவறு உள்ளது? பொதுவாக வெளியூர் சென்றால் வீட்டில் உள்ளவர்களிடம், யாராவது கேட்டால் வெளியூர் சென்றுள்ளதாக மட்டுமே சொல்லச் சொல்வது வழக்கம். ஓர் அரசன் பல்வேறு காரணங்களால் படைசெல்வது குறித்த உண்மையை மறைக்கலாம். அதில் தவறில்லை. தமிழ்வாணன் இதைத் தம் விருப்பம்போல் பொருள் கூறுவது பொருத்தமில்லாதது.

கட்டபொம்மு, ஜாக்சன் சூழ்ச்சியை அறிந்திருந்தே பேட்டிக்கு அஞ்சாது சென்றார். பின்னரும் இராமநாதபுரத்தில் தாம் மேற்கொண்ட முடிவு சரியானதே என்று உறுதியாகவும் தெளிவாகவும் இருந்தார் தமிழ்வாணன் எந்த ஆதாரமும் இல்லாமல் தம்முடைய சொந்தக் கற்பனையிலேயே இராமநாதபுரம் பேட்டி நிகழ்ச்சியை எழுதியுள்ளார். பிற நூல்களிலிருந்து மேற்

கோள்களைக் கையாளும் போது கூட மூலநூலிலுள்ள சொற்களை நீக்கிவிட்டுக் கட்டபொம்முவை இழிவுபடுத்தும் வகையில் இழிவான சொற்களைத் திட்டமிட்டே பயன்படுத்துகிறார். 'நாம் புதிய வரலாற்றைப் படைக்க வேண்டும்'' என்று நம் தலைவர்கள் கூறுவதுண்டு. அதைத் தமிழ்வாணன் தவறாகப் புரிந்து கொண்டார் போலும். எனவே உண்மை வரலாற்றைத் திரித்துப் புதிய பொய் வரலாறு எழுதியுள்ளார்.

# 10.

## தானாதிபதிக்கு அடைக்கலம் கொடுத்ததேன்?

கும்பினியார் வரியாக வசூலித்த நெல்லைப் பாளையங் கோட்டை, ஸ்ரீவைகுண்டம், ஆத்தூர், ஆழ்வார்திருநகரி ஆகிய இடங்களிலுள்ள கொட்டாரங்களில் சேர்த்துவைத்து நல்லவிலை வந்தபோது விற்று விடுவார்கள். மேஜர் பிற்கட்டு இதன் அதிகாரியாக இருந்தார். ஸ்ரீவைகுண்டத்திலுள்ள நெற்களஞ் சியத்தைத் தானாதிபதி தன் மகன் திருமணச் செலவிற்காகக் கொள்ளையிட்டார். இதில் களஞ்சியக் காவல்காரன் பாண்டித் தேவன் கொல்லப்பட்டான்.

இந்த நிகழ்ச்சியைக் கதைப்பாடல்கள் விரிவாகப் பாடுகின்றன. வரலாற்றாசிரியர்களில் ஆங்கில நூலாசியர்கள் இதற்கு முக்கி யத்துவம் கொடுக்கவில்லை. ஆனால் கதைப்பாடல்கள் இந்த நெற்கொள்ளை நிகழ்ச்சியால் தான் கும்பினிப் பகை ஏற்பட்டுப் பாஞ்சாலங்குறிச்சி அழிவைச் சந்தித்தது என்கின்றன. கொள் ளைக்குக் காரணம் தானாதிபதி தான் என்பதைத் தெளிவாக உணர்ந்த ஆங்கில அதிகாரிகள் தானாதிபதியைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரினர். கட்டபொம்மு நெல்லிற்குரிய விலையைக் கொடுக்க ஒப்புக்கொண்டு, தானாதிபதியை ஒப்படைக்க மறுத்துவிட்டார். இது குறித்துத் தமிழ்வாணன்,

''கட்டபொம்மன் உள்ளே சென்று ஆலோசித்தான்,
தன்னுடைய ஏவுதலின் பேரிலேயே நடைபெற்ற இந்தக்

காரியத்துக்கு யாரைப் பிடித்துக் கொடுப்பது? தானாதி பதிப் பிள்ளையைக் காட்டிக் கொடுத்தால் அவர் பதிலுக்குத் தன்னையே மாட்டி வைத்து விடுவார் என்று அவன் பயமடைந்தான்'' (ப. 349)

என்று கூறுகிறார். கட்டபொம்மு தானாதிபதியை ஒப்படைக்க மறுத்தது, சரணடைந்தவரைப் பாதுகாப்பதற்காக அல்ல, தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவார் என்ற பயம். எனவே கொள்ளைக்குக் காரணம் கட்டபொம்முவே என்பது தமிழ்வாணன் விவாதம். சிரஞ்சீவியும், உணர்ச்சிகரமான நீண்ட வசனங்களைப் பேசி இறுதியில், ''ஸ்ரீவைகுண்டம் கொள்ளையைத் தானாதிபதிப் பிள்ளை நடத்தவில்லை. அதனால் கட்டபொம்மு ஒப்படைக்க வில்லை. கட்டபொம்மு தாம் தப்பிக்க, பழியைத் தானாதிபதி மீது போட்டார்'' (ப. 331) என்று கூறுகிறார்.

பணம் கொடுத்து நெல்வாங்கி வருகிறேன் என்று சென்ற தானாதிபதி ஸ்ரீவைகுண்டத்தில் நெல்லைக் கொள்ளையிட்டது, அங்கு ஏற்பட்ட கலவரத்தில் காவல்காரன் இறந்தது, ஆகிய செய்திகள் கட்டபொம்முவிடம் மறைக்கப்பட்டன என்றே தேவதாஸ் நாயுடு, தி. நா. சுப்பிரமணியம் போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். மேஜர் பிற்கட்டு செய்தி அனுப்பிய பிறகே அறிந்தார் என்றே கதைப்பாடல்களும் கூறுகின்றன. காவல்காரனின் தாய்,

''மெத்தப் படித்த சுப்பிரமணியபிள்ளை உம்
புத்தியும் கட்டையாய்ப் போச்சி திப்போ
எண்ணி எட்டுநாளைக்குள்ளே உன்னையே
யல்லோ தூக்கிலே போடா விட்டால்
என்பேரு முத்துக் கருப்பாயி இல்லை'' (மா. 213–215)
''தானாதி பதியாலே வந்த பொல்லாப்பு
தானங்கே கும்பினி யாரோடே'' (இராம. 1629)

என்று சபதமிடுவதாய்ப் பாடல் கூறுகிறது.

இவ்வாறே கட்டபொம்மன் கூத்து (ப. 89), கட்டபொம்மு வரலாறு (ப. 64) என எல்லாக் கதைப்பாடல்களுமே, தானாதிபதி தாம் விரும்பியவாறு செய்து, பிரச்சினையை ஏற்படுத்தி விட்டார் என்றே கூறுகின்றன.

தி. நா. சுப்பிரமணியமும், இராமநாதபுரத்தில் சிறைப்பட்டது முதல் தானாதிபதி கட்டபொம்மு மீது வருத்தம் கொண்டிருந்தார். அதற்குப் பழிவாங்கவே ஸ்ரீவைகுண்டம் நெல்லைக் கொள்ளை கொண்டார். அவரது உள்ளக் கிடக்கை தெரியாமல் கட்ட

பொம்மு காப்பாற்றினார். தானாதிபதி செயலைக் கண்டித்த தாலேயே சில காலம் கோட்டைக்கு வராமல் ஆத்தூரில் தங்கி இருந்தார்'' என்று குறிப்பிட்டுள்ளார் (ப. 140). தி. நா. சு. வின் இந்தக் கணிப்பு சரியே. மேஜர் பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுக்கு முன். ஆத்தூரில் தனியே இருக்கும் தானாதி பதியைக் கைது செய்யப் படை அனுப்பினான். ஆனால் தானாதிபதி தப்பிக் கோட்டைக்கு வந்து விட்டார்.

தானாதிபதி பிடிபட்ட போது மேஜர் பானர்மேன் கவர்னருக்குக் கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தின் வாசகத்தைப் படித்தால் தானாதிபதி பற்றி நாம் அறியமுடியும். சிரஞ்சீவியே தம்முடைய நூலில் இக்கடிதத்தை மேற்கோள் காட்டியுள்ளார். இதோ அந்த மொழிபெயர்ப்பு: ''சுப்பிரமணிய பிள்ளை என்பவன் பாளையத்தில் முக்கிய நிர்வாகி. மிகவும் கெட்டவன். கபட வஞ்சனை சதியாலோசனை தர வல்லவன். கைது செய்து என் முன்பாகக் கொண்டு வரப்பட்டவர்களில் சுப்பிரமணிய பிள்ளை என்ற கட்டபொம்முவின் பிரதானியும், அவருடைய தம்பியும் முக்கியமானவர்கள். இவர்களைக் கைது செய்ததானது கட்ட பொம்முவைக் கைது செய்வதைவிட முக்கியமானதாக நான் கருதுகிறேன். ஏனென்றால், இவர்கள் பயங்கரமானவர்கள். திறமை மிக்கவர்கள். முக்கிய பொறுப்பான பதவிகளை வகித்து வந்தவர்கள். முதலாமவர் நிறைய பொருளைச் சேர்த்து வைத்துள்ளதால், அரசாங்கத்திற்கு எதிராக எவ்விதமான நடவடிக்கையிலும் அவர் அந்தப் பொருளைச் செலவிடக் கூடும்'' (பக் 336-339).

தானாதிபதியிடம் பெரும் பொருள் இருந்ததைப் பானர்மேன் குறிப்பிட்டுள்ளார். தானாதிபதி மீது கும்பினியாருக்கு இருந்த வெறுப்பினாலேயே, அவரைத் தூக்கிலிட்டு, அவர் தலையைப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் பார்வைக்கு வைத்தனர். எனவே தானாதிபதி எதுவும் அறியாத அப்பாவி என்று வாதிட இடமில்லை. கட்டபொம்முவிடம் கூறாமலேயே தானாதிபதி நெற்களஞ்சியத் தைக் கொள்ளையிட்டார் என்பது நம்புதற்கு உரியதாகவே உள்ளது.

தானாதிபதி கட்டபொம்முவிடம் சரணடைந்ததால் தான் கட்டபொம்மு அவரைக் கும்பினியாரிடம் ஒப்படைக்க மறுத்தார். இதைக் கட்டபொம்மு ''தானாதிபதி செய்தது தவறு, அவர்

அவ்வாறு செய்திருக்க வேண்டியதில்லை. ஆனால் கடுமையான பஞ்சத்தால் அவ்வாறு செய்துவிட்டார். நான் இதற்காக வருத்தம் தெரிவித்துள்ளேன். இஃது எனக்குத் தெரியாமல் நடைபெற்றது. ஆனால் கம்பெனியாரின் தண்டனைக்குப் பயந்து என்னிடம் பாதுகாப்புக் கேட்டபோது கொடுத்தேன். சரணடைந்தவர்களைக் கட்டபொம்மு ஒருபோதும் காட்டிக் கொடுக்கமாட்டான். நான் அதற்குப் பணம் கொடுக்கிறேன் என்று கூறிய போதும் மறுத்து விட்டனர்'' என்று விசாரணையில் கூறியுள்ளார்.

தண்டனைக்குப் பயந்து தன்னிடம் சரணடைந்ததாலேயே ஒப்படைக்க மறுத்துப் பாதுகாப்புக் கொடுத்ததாகக் கட்டபொம்மு கூறியுள்ளார். ஆனால் தமிழ்வாணன் ''தானாதிபதிப் பிள்ளையைக் காட்டிக் கொடுத்தால், அவர் பதிலுக்குத் தன்னை மாட்டி வைத்துவிடுவார் என்று கட்டபொம்மு பயமடைந்ததால்'' என்கிறார். கட்டபொம்மு பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், பாளையக்காரர்கள் மீது 'கிரிமினல்' விசாரணை நடத்த முடியாது. இது பாளையக்காரர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளுள் ஒன்று இதனால்தான் ஊர்க்காட்டு ஜமீந்தார், சிங்கம்பட்டி ஜமீன்தாரை வேட்டையில் சுட்டபோது தன்னால் எவ்வித விசாரணையும் செய்யமுடியவில்லை என்று கலெக்டர் பௌனி கோபம் கொண்டுள்ளார் (குருகுக. ப. 211). எனவே கட்ட பொம்மு பயப்படவேண்டிய அவசியமே இல்லை தானாதிபதி தன்னிடம் சரணடைந்ததாலேயே காட்டிக் கொடுக்க மறுத்தார்.

தமிழ்வாணன் கட்டபொம்முவின் இந்தப் பெருந்தன்மையைப் பாராட்ட வேண்டாம். ஆனால் 'பயத்தால்' ஒப்படைக்க மறுத்தார் என்று ஓர் உயர்ந்த செயலை இழிவுபடுத்துவது நாகரிகமான செயலன்று. ஒரு வேளை தமிழ்வாணனும் சிரஞ்சீவியும் சொல்வது போல, கட்டபொம்மு தானாதிபதியை ஒப்படைத்திருந்தார் என்றால், இவர்கள் என்ன எழுதுவார்கள்? ''நம்பி வந்த தானாதிபதிக்குக் கட்டபொம்மு துரோகம் செய்துவிட்டார். நன்றிகெட்ட கட்டபொம்மு வெள்ளையருக்கு அஞ்சி நடுங்கித் தன்னுடைய மந்திரியையே காவு கொடுத்து விட்டார்'' என்று குற்றக் கணைகளைத் தொடுப்பார்களா இல்லையா? நிச்சயமாக எழுதுவார்கள். கட்டபொம்மு இராமநாதபுரம் பேட்டிக்குச் சென்றதைப் ''பெரும் பீதியால்'' பார்க்கச் சென்றார் என்றும், கலெக்டர் லூசிங்டனைப் பார்க்க மறுத்த போது போவதற்குப் பயந்து தயங்கினார் என்றும் தமிழ்வாணன் எழுதியதை இங்கு நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கட்டபொம்மு என்ன செய்தாலும் அதை இழிவு படுத்த வேண்டும் என்பதே இவர்களது ஒரே

இலட்சியம். இந்த இலட்சியத்தில் கட்டபொம்முவின் உயர்ந்த பண்பைக் கூடக் கொச்சைப்படுத்துகிறார்கள். தன்னைச் சரணடைந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாப்பதே உயர்ந்த பண்பு என்று இராமகாவியம் நமக்கு அறிவுறுத்துகிறது. இந்த உயர்ந்த பண்பு கட்டபொம்முவிடம் இருந்தது பாராட்டுவதற்குரியது.

## 11.

# கோட்டையில் இருந்து தப்பியது தவறா?

மேஜர் பானர்மேனுடன் நடந்த போரின் முடிவில் கட்டபொம்மு கோட்டையை விட்டு வெளியேறினார். இதைத் தமிழ்வாணன ''தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே நோக்கம்'' என்று, கூறுகிறார் (ப. 356). சிரஞ்சீவியும் ''கோழையாகி நெஞ்சுரம் நீங்கித் தருணம் பார்த்துக் கோட்டையை விட்டு நழுவி ஓடிவிட்டான் கட்டபொம்மு'' என்று குற்றம் சுமத்துகிறார் (ப. 337-338).

இவர்கள் குற்றச்சாட்டுகளை விவாதிக்கும் முன் போர் தொடங்கியதன் பின்னணியைப் பார்ப்பது அவசியமாகும். முன்னர்க் கும்பினியாரிடம் கொடுத்த நாட்டின் நிர்வாகத்தை 1785இல் ஆர்க்காட்டு நவாப்பு திரும்பப் பெற்றார். திறைப்பணம் சரியாக வந்து சேரவில்லை. 1790இல் வலுக்கட்டாயமாக நவாப்பிடமிருந்து கர்நாடக நிர்வாகத்தைக் கும்பினியார் ஏற்றனர். வேறுவழியின்றி 1792இல் நவாப்பு கும்பினியாரோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, வரிவசூலிக்கும் உரிமையை மீண்டும் அவர்களிடமே கொடுத்துவிட்டார். வெள்ளையர் நிர்வாகப் பொறுப்பை ஏற்றதும் பாளையக்காரர்களைக் கட்டுப்படுத்தத் திட்டமிட்டனர்.

பாளையங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள, கர்னல் ஹாமில்டன் மாக்ஸ்வெல் என்பவருக்கு முழு

உரிமை வழங்கப்பட்டது. மாக்ஸ்வெல் 1792 நவம்பரில் பாளையக்காரர்களை எல்லாம் கயத்தாற்றிற்கு வரவழைத்தார். கவர்னர். கிளைவால் கையெழுத்திடப்பட்ட நடவடிக்கையின் நகலை எல்லாருக்கும் கொடுத்தார். இந்த நடவடிக்கையின்படி மாக்ஸ்வெல் பாளையங்களின் எல்லையை வரையறை செய்து, வரித்தொகையையும் நிர்ணயம் செய்தார். பாளையக்காரர்கள் வெறும் குத்தகைதாரர் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் மூலம் பாளையக்காரர்கள் கோட்டை கட்டுவது, படைகள் வைத்துக் கொள்வது போன்ற உரிமைகள் தடை செய்யப்பட்டன.

கட்டபொம்மு இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை எல்லை வரையறை செய்த போது தம்முடைய பகுதிகளை எட்டையபுரத்தாருக்குக் கொடுத்ததை ஆட்சேபித்தார். இவை குறித்துப் பேசி முடிவு செய்ய வேண்டும் என்று கட்டபொம்மு விரும்பினார். நவாபு பாளையக்காரர்களுக்குக் கொடுத்திருந்த உரிமைகளை ரத்து செய்ய வேண்டும் என்று கும்பினியார் வற்புறுத்தினர். 1795இல் நவாபு இணங்காவிட்டாலும் நடவடிக்கையை நிறைவேற்றவேண்டுமென்று லண்டனிலிருந்து இயக்குநர்கள் முடிவு செய்தனர். கும்பினியர் தங்கள் தீர்மானத்தை நிறைவேற்ற முற்பட்ட போது கட்டபொம்மு ஒத்துக்கொள்ள மறுத்துத் தீவிரமாக எதிர்த்தார்.

வெள்ளையர் நடவடிக்கையை எதிர்த்துக் கட்டபொம்மு ஓர் அணியைத் திரட்டினார். ஏழாயிரம் பண்ணை, காடல்குடி. குளத்தூர், கோலார்பட்டி. நாகலாபுரம் ஆகிய பாளையக்காரர்கள் இவரது கூட்டணியில் சேர்ந்தனர். மருது சகோதரர்களும் ஒத்த கருத்துடன் இணக்கம் தெரிவித்தனர். இந்த உரிமைப் போரைப் பாஞ்சாலங்குறிச்சியில் தொடங்கக் கட்டபொம்மு விரும்பவில்லை. சமவெளியில் உள்ள தம்முடைய சிறிய மண்கோட்டை மூலம் பெரும் போரைச் சமாளிக்க முடியாது என்பதே அதற்குக் காரணம். மலை அடிவாரத்தில் இயற்கை அரணுடன் கூடிய, அளவில் பெரியதும், அமைப்பில் வலியதுமாகிய சிவகிரிக் கோட்டையே போரைத் தொடங்கச் சரியான இடம் எனத் தீர்மானித்தார். எனவே சிவகிரிப் பாளையத்தைத் தம் அணியில் சேர்க்க விரும்பினார். சிவகிரிப் பாளையக்காரர் வெள்ளையர் ஆதரவாளராக இருந்தார். ஆனால் மகன் வெள்ளையர் மீது வெறுப்புக் கொண்டிருந்தான் மகனுக்கு மாப்பிள்ளை வன்னியரும், மந்திரி சங்கரலிங்கம் பிள்ளையும் துணை நின்றனர். தந்தையிடமிருந்து ஆட்சியைப் பெற மகன் கல்வரம் செய்தான். கட்டபொம்மு

மகனுக்கு ஆதரவாக ஊமைத்துரை தலைமையில் இரண்டாயிரம் பேர் அடங்கிய படையைத் துணையாக அனுப்பினார்.

கட்டபொம்மு சிவகிரிப் பாளையத்தின் மீது கண் வைத்ததன் காரணத்தை வெள்ளையர் உணர்ந்தனர்[1]. எனவேதான் இந்தப் புரட்சிக் கூட்டணி வலிமை அடையும் முன்பே அதன் தலைவனாகிய கட்டபொம்முவை ஒழித்து விடவேண்டும் என்று வெள்ளையர் பாஞ்சாலங்குறிச்சி மீது திடீர்ப் படையெடுப்பு நடத்தத் திட்டமிட்டனர்.[2] இதன் மூலம் மற்றப் பாளையங்களை ஒடுக்கி விடலாமென்று ஆங்கிலேய அதிகாரிகள் நினைத்தனர். இதைக் கதைப்பாடலும்,

> ''கட்டனைப் பிடித்துத் திட்டம் பண்ணாவிட்டால்
> பட்டணம் ஒன்றும் ஒடுங்காது
> பட்டணம் ஒன்றும் ஒடுங்காது அந்தப்
> பாளையக்காரர்கள் அடங்கார்'' (இராம 903–904)

என்று கூறுகிறது.

மேஜர் பானர்மேனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. திருச்சி, தஞ்சை, மதுரை, பாளையங்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள படைகள் ஒன்று சேர உத்தரவிடப்பட்டது. படைகள் கயத்தாறு வந்து சேர்ந்தன. பானர்மேன் எட்டப்பனை அழைத்து ஆலோசனை கேட்டான். கட்டபொம்மு கோட்டையில் தனியாக உள்ளான். படைகள் இல்லை. தம்பி ஊமைத்துரை திருச்செந்தூர்த் திருவிழாவிற்குச் சென்றுள்ளான், தானாதிபதி ஆத்தூரில் உள்ளார். உடனே சென்று கோட்டையை முற்றுகையிட வேண்டுமென்று எட்டப்பன் ஆலோசனை வழங்கியதோடு, தம்முடைய படையையும் துணைக்கு அனுப்பினார். இந்தத் திடீர்த்தாக்கு தலைக் கட்டபொம்மு எதிர்பார்க்கவில்லை. பானர்மேன் அழைத்த போது கவுல் கொடுத்தால் தான் வர இயலும் என்று உறுதியாக நின்றார். கவுல் பெற்றுச் செல்வது என்பது பாளையக்காரர்களது உரிமைகளில் ஒன்று. இந்த உரிமையைக் காப்பதில் தான் போராட்டமே தொடங்கியது. இதை உணராத சிரஞ்சீவி, 'பானர்மேன் அழைத்த போது கட்டபொம்மு வந்திருக்கலாம்,

---

1, S. R. Lushington, 21 August, 1799, Letter to Board of Revenue proceedings, vol. 231, P. P. 3903-4.

2. Madras council, September, 1799. Revenue consultations, vol. 97. P. P. 2418-20.

என்று கூறுகிறார் (ப. 335). தமிழ்வாணன் இராமலிங்க முதலியார் கூற்றாக, ''கும்பினியின் நீதியில் நம்பிக்கை வைத்துச் சென்றிருக்க வேண்டுமென்று கருதுகிறார்'' (ப. 354).

கும்பினியாரின் நீதி எப்படிப்பட்டது? கட்டபொம்முவின் தூதுவனாகச் சென்ற மாப்பிள்ளை வன்னியனைக் கைது செய்து சிறையிலிட்டது தான் நீதியா? மாணவர் காங்கிரஸ் தலைவராக இருந்த தமிழ்வாணன் இதை நியாயப்படுத்தியே எழுதியுள்ளார் (ப. 351). கோட்டையில் படைகள் இல்லாத நேரத்தில் வெள்ளையர் முற்றுகை இட்டனர். இதனால் வெள்ளையர் வீரத்திற்கு அவமானம் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற கவலையில் தமிழ்வாணன், ''திருச்செந்தூர்த் திருவிழாவிற்குச் சென்ற படை வீரர்கள் விடிவதற்குள் திரும்பிவிட்டனர்'' என்று கூறிக் கும்பினியார் மீது பழி ஏற்படா வண்ணம் அவர்களைப் பாதுகாக்கிறார் (ப. 352).

பானர்மேன் கோட்டையை முற்றுகையிட்டதும் இராமலிங்க முதலியாரை அனுப்பி, நிபந்தனை இன்றிச் சந்திக்குமாறு செய்தி அனுப்பினான். கட்டபொம்மு கவுல் கிடைத்தால் தான் வர இயலும் என்று கூறிவிட்டார். குருதி சிந்தாமல் கட்டபொமமுவைக் கைது செய்து விடவேண்டும் என்பது தான் பானர்மேன் திட்டம். ஆனால் சிரஞ்சீவி, ''இஃது ஆதாரமற்றது, ஏனெனில் நடந்துபோன குற்றங்களுக்காக எவர் மீதும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளக் கூடாது என்பதாக ஏற்கனவே கும்பினியார் பானர்மேனுக்கு ஆணையிட்டிருந்தனர்'' என்று கூறுகிறார் (ப. 335). அப்படியானால் கட்டபொம்முவால் தூதுவனாக அனுப்பப்பட்ட மாப்பிள்ளை வன்னியனை ஏன் பானர்மேன் கைது செய்தான்? தானாதிபதியைக் கைது செய்ய ஆத்தூருக்குப் பானர்மேன் படை அனுப்பியது ஏன்? தானாதிபதியின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களையும், குழந்தைகளையும் கைது செய்து சிறையில் அடைத்தது ஏன்? கட்டபொம்முவைக் கைது செய்வது அவர்களது நோக்கமில்லை என்றால் 'கவுல்' கொடுக்க மறுத்த தேன்? கடைசி நேரத்தில் பேட்டியை உறுதிசெய்யும் வகையில் ஒரு வாளையாவது அனுப்பும்படி கட்டபொம்மு கேட்ட போது ஏன் மறுக்க வேண்டும்?

வெள்ளையரிடம் வெறுப்புக் கொண்டிருந்த இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்க சேதுபதியை இருபத்தெட்டு ஆண்டுகளாகச் சிறையில் வைத்துக் கொன்ற கொடியவர்தாமே இந்த வெள்ளை

யர். இந்திய நாட்டை அடிமைகொண்டு, இந்த நாட்டுச் செல்வங்களையெல்லாம் கொள்ளை கொண்டு, இந்த மண்ணின் மைந்தர்களின் ரத்தத்தைக் குடித்து வாழ்ந்த வெள்ளையர்களைப் பெரிய நீதிமான்கள் என்று நிலைநாட்ட முயலும், தமிழ்வாண னையும் சிரஞ்சீவியையும் என்ன சொல்வது?

பானர்மேன் சூழ்ச்சியில் சிக்கிவிடக் கூடாது என்பதால் தான் கட்டபொம்மு பாளையங்கோட்டை செல்ல மறுத்தார். ஆனால் தமிழ்வாணன் ''பயத்தால் செல்லவில்லை'' என்கிறார் (ப. 350). அது மட்டுமல்லாமல் ''கட்டபொம்மு இது குறித்துத் தூத்துக்குடி சென்று டேவிட்சனிடம் ஆலோசனை கேட்ட போது, ''நீ மேஜர் பானர்மேனை நேரில் போய்ப் பார்த்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் தான் பிழைக்க முடியும் என்று தெளிவாகக் கூறி விட்டான்'' என்று கட்டபொம்மு டேவிட்சனைச் சந்தித்ததாகத் தமிழ்வாணன் ஒரு புதிய வரலாறு எழுதியுள்ளார் (ப. 30-51). இதில் தமிழ்வாணன் கையாண்டுள்ள 'மன்னிப்பு' 'பிழைப்பு' என்ற சொற்களை நாம் கவனிக்கவேண்டும். எப்படியும் 'பிழைக்க' வேண்டும் என்று கட்டபொம்மு எண்ணி இருந்தால் ராபர்ட் கிளைவின் ஆணையை எதிர்த்திருக்க மாட்டார். எட்டையபுரத்தார் பாதையில் தானும் சென்றிருப்பார். கட்ட பொம்மு பானர்மேனைச் சந்திக்க மறுத்ததையே இழிவு படுத்தும் இவர்கள், சந்தித்திருந்தால் எப்படி எழுதியிருப்பார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

கடைசி நேரத்தில் கட்டபொம்மு நிபந்தனை இன்றிச் சந்திக்க வேண்டும் என்று பானர்மேன் விடுத்த அழைப்பையும் கட்டபொம்மு மறுத்தார். போர் தொடங்கியது. மண்கோட்டை தானே என்று மனத்தில் மமதை கொண்டு கோட்டை அருகே சென்ற வெள்ளையர் களைப் பாஞ்சை வீரர்கள் வல்லயம் கொண்டு குத்தி வீசி எறிந் தனர். கோட்டையைப் பிடிக்க முடியாமல் கும்பினிப் படை பின்வாங்கியது. எனவே முதல் நாள் போரில் கட்டபொம்முவிற் கே வெற்றி கிடைத்தது. போதிய அளவு படை திரட்ட அவகாசம் இல்லாத நிலையில், வெளியிலிருந்து கோட்டைக்கு உதவிப் படைகள் வராதவாறு முற்றுகை இடப்பட்ட சூழ்நிலையில், பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் பீரங்கியையும், துப்பாக்கிகளையும் கொண்ட முறையான பயிற்சி பெற்ற வெள்ளைப் படையை எதிர்த்துக் கோட்டையைப் பாதுகாத்தது வீரம் செறிந்த நிகழ்ச்சி யாகும்.

எதிரியின் வலிமையைக் குறைத்து மதிப்பிட்ட தவற்றை உணர்ந்த பானர்மேன் பாளையங்கோட்டையிலிருந்து 24 பவுண்டு

பீரங்கியுடன் கூடிய துணைப்படை வரும் வரை முற்றுகையை நீடிப்பது என்று முடிவு செய்தார். 24 பவுண்டு பீரங்கிக்கு முன் தம்முடைய கோட்டை தாக்குப்பிடிக்காது என்பதைக் கட்டபொம்மு உணர்ந்தார். தம்முடைய படை வீரர்கள் உயிரைத், தெரிந்தே காவு கொடுக்க விரும்பவில்லை. எனவே நம்பிக்கைக்குரிய சிலருடன் கட்டபொம்மு கோட்டையை விட்டு வெளியேறினார். இதைத் தமிழ்வாணனும், சிரஞ்சீவியும் உயிர் மீது உள்ள ஆசையால் கோழை போலத் தப்பிச் சென்றார் என்கிறார்கள்.

கட்டபொம்மு தம் உயிர் மீது ஆசை கொண்டு அதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று எண்ணி இருந்தால், ஒரு போரை நடத்தி அதன் பின் தப்பிச் சென்றிருக்க வேண்டியதில்லை. பானர்மேன் அழைத்த போது சென்று சரணடைந்திருக்கலாம். கட்டபொம்மு உயிரினைக் காக்க எண்ணவில்லை. உரிமையைக் காக்கவே போராடினார். பெரும் ஆதிக்க சக்திகளை இயன்ற அளவு எதிர்த்துப் போராடி, முடியாத போது, கால அவகாசத்தை எடுத்துக்கொள்ள, தப்பி மறைவது வரலாற்றில் ஒன்றும் புதுமை அன்று. 'வீர' என்ற அடைமொழியுடன் .அழைக்கப்படும் வீரசிவாஜி எத்தனையோ முறை. இது போலக் கோட்டையை விட்டுத் தப்பி இருக்கிறார். முகலாய தளபதி சாயிஸ்டாகானின் வீட்டை வளைத்து சிவாஜி தாக்கும் போது, எதிரிக்குப் பெரும் துணைப்படை வருவது அறிந்து தப்பிஓடவில்லையா?சிறையிலிருந்து சிவாஜி பூக்கூடைக்குள் மறைந்து தப்பவில்லையா? இந்த நிகழ்ச்சிகளைத் தமிழ்வாணன் தம்முடைய நூலில் கூறியுள்ளார் (ப. 128, 132). ஆனால் இவற்றை எழுதும் போது மட்டும், உயிருக்கு அஞ்சித் தப்பி ஓடியதாக ஏன் எழுதவில்லை?

எதிரியின் கையில் சிக்காமல் தப்புவதும் ஒரு வெற்றியே. இந்தப் போர் உத்திக்கு வரலாற்றில் எத்தனையோ சான்றுகளைக் கூறலாம். புரட்சியாளர்கள் எல்லாருமே தலைமறைவாகியே, தங்கள் இலட்சியத்தைச் சாதித்து உள்ளனர். இன்றும் சாதித்துக் கொண்டு இருக்கின்றனர். கட்டபொம்முவின் தந்தை ஜெகவீர பாண்டியனார், புல்லர்ட்டன் படையெடுப்பின் போது தப்பிச் சிவகிரிகாட்டில் மறைந்திருந்து, எதிரிகளைத் தாக்கியும், வரி வசூலித்தும், மீண்டும் தம் பாளையத்தை அடைந்ததை இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும். பிற்காலத்தில் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பிய ஊமைத்துரை மீண்டும் வெள்ளையரை எதிர்த்துப் போராடியதையும் நினைவு கொள்ளவேண்டும்.

உயிரை விடுவது மட்டுமே வீரமல்ல. அறிவுடன் கூடிய வீரமே வீரமாகும். தன் வலிமை, எதிரி வலிமை, அவனது துணை வலிமை, இடம், காலம் இவற்றை அறிந்து, அவற்றிற்கு ஏற்பச் செயல்படுவதே சிறந்த வீரர்களின் செயலாகும். சிங்கம் எதிரிலே வரும் போது, கையில் எந்த ஆயுதமும் இல்லாமல், பாரதியின் ''அச்சமில்லை அச்சமில்லை, அச்சமென் பதில்லையே'' என்ற பாடலைப் பாடிக்கொண்டு, நெஞ்சை நிமிர்த்திச் சென்றால் என்ன நடக்கும்? ''மிச்சமில்லை, மீதியில்லை பிச்சி பிச்சி திங்கிறேன்'' என்று சிங்கம் சாப்பிட்டுவிடும். இப்படிப்பட்டவர் களை நாம் உயிர் ஆசை இல்லாத மாவீரர் என்று அழைப்போமா? முட்டாள் என்று தான் சொல்வோம். கட்டபொம்மு வள்ளுவன் வகுத்த வீர இலக்கணத்தையே பின்பற்றியுள்ளார். கட்டபொம்மு கோட்டையை விட்டு வெளியேற எடுத்த முடிவு சரியானதே. ஆனால் உள் நாட்டார் அவரைக் காட்டிக் கொடுத்ததால் அவர் எண்ணம் ஈடேறவில்லை. எட்டையபுரத்தாரும், தொண்டை மானும் வெள்ளையருக்குத் துணைபுரியவில்லை என்றால், தென் பாண்டி நாட்டு வரலாறு வேறு விதமாக அமைந்திருக்கும்.

தமிழ்வாணன் கட்டபொம்முவை இழிவுபடுத்தியது மட்டுமல் லாமல், ஒரு நல்ல வரலாற்று ஆசிரியராகிய தி. நா. சு. வையும் கொச்சைப் படுத்துகிறார். 'கும்பினி அதிகாரிகளிடம் சரணடைந்து உயிர்ப்பிச்சை கேட்பதே கட்டபொம்மனது நோக்கம் என்பதைத் தி. நா. சு. அவர்கள் தமது ''கட்டபொம்மு'' என்ற நூலின் 165வது பக்கத்தில் வெளியிட்டிருக்கிறார்'' என்று தமிழ்வாணன் குறிப்பிட்டுள்ளார் (ப. 359). தி. நா. சுப்பிரமணியன் தம்முடைய நூலில் தமிழ்வாணன் சுட்டி இருப்பது போல ''உயிர்ப்பிச்சை கேட்பதே நோக்கம்'' என்று சொல்லவில்லை. பொய்மை என்னும் சாக்கடையில் நீராடிய தமிழ்வாணன், அதை ஒரு நேர்மையான வரலாற்று ஆசிரியராகிய தி. நா. சு. மீதும் அள்ளித் தெளிப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

குற்றம் இல்லாத ஒன்றைக் குற்றமென்று கட்டபொம்மு மீது குற்றம் சாட்டும் தமிழ்வாணன் தகுதியையும் நாம் சிறிது சொல்ல வேண்டியது உள்ளது. கட்டபொம்மு கோட்டையிலிருந்து உயிருக்கு அஞ்சி ஓடியது தவறு, நெஞ்சை நிமிர்த்தித் துப்பாக்கிக் குண்டுகளை ஏந்தி, வெற்றி அல்லது வீர மரணத்தைக் கோட்டை யிலேயே அடைந்திருக்க வேண்டும் என்பதே தமிழ்வாணன் விருப்பம். இதனை ஏற்றுக்கொள்வோம், ஆனால் இது போன்ற சம்பவம் தமிழ்வாணன் வாழ்க்கையில் ஏற்பட்ட போது அவர் என்ன

செய்திருக்க வேண்டும்? கட்டபொம்மு எப்படி நடந்திருக்க வேண்டுமென்று சொன்னாரோ அப்படித் தானே இவர் நடந்திருக்க வேண்டும்? அது தானே நியாயம்? ஆனால் தமிழ்வாணன் என்ன செய்தார்? தமிழ்வாணன் 'வெள்ளையனே வெளியேறு' என்று மாணவர்களைத் திரட்டி ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்த போது, கடைத்தெருவில் போலீஸ், மக்களைச் சுட்டுக்கொண்டிருக்கிறது என்றவுடன், வீட்டை நோக்கி ஓட்டமெடுத்து, மாறுவேடத்தில் வெளியூருக்குத் தப்பி ஓடியிருக்கிறார் (ப. 20). தங்கள் கூட்டம் நடக்கும் இடத்திலிருந்து நெடுந்தொலைவில் துப்பாக்கிச்சூடு நடை பெறுவதைக் கேட்ட உடனேயே தமிழ்வாணன் ஓட்டம் எடுத்திருக்கிறார். தமிழ்வாணன் ஏன் ஓடினார்? உடற்பயிற்சிக் காக ஓடினாரா? இப்படிப்பட்ட தமிழ்வாணனுக்குக் கட்டபொம்மு கோட்டையை விட்டுத் தப்பும் முடிவு எடுத்தது குறித்து விமர் சிக்க எந்தத் தகுதியும் கிடையாது.

# 12.

## இப்படியும் ஒரு பொய்யா?

தப்பிச் சென்ற கட்டபொம்மு பிடிபட்டது குறித்து எழுதும் போது தமிழ்வாணன்

> ''திருக்களம்பூரில் புதுக்கோட்டை மன்னரின் தளபதியான சர்தார் முத்துவைரவ அம்பலகாரர் என்பவர் இருந்தார். தம் அதிகாரத்துக்கு உட்பட்ட காட்டுப் பகுதியில் யாரோ வேற்று ஆட்கள் நடமாடுவதாக அவர் கேள்விப்பட்டார். அதே சமயம் தெற்கே இருந்து கட்டபொம்மனைத் தேடி வந்த கும்பினி வீரர்களும் திருக்களம்பூரை அடைந்தனர் முத்துவைரவ அம்பலகாரர் கட்டபொம்முவைக் கைது செய்து அவனைத் தேடி வந்த கும்பினிச் சிப்பாய்களிடமே அவர் அவனை ஒப்படைத்தார். புதுக்கோட்டை மன்னருக்கே அதன் பிறகு தான் இந்தச் செய்தி தெரிய வந்தது என்று கூறுகிறார், (ப. 360)

கோட்டையிலிருந்து தப்பிய கட்டபொம்மு கோலார்பட்டியில் தங்கி இருந்தார். இதை அறிந்த எட்டையபுரத்தார் தன் படையை அங்கு அனுப்பினார். கோலார்பட்டியில் நடந்த மோதலில் இரு பக்கமும் கடுமையானசேதம் ஏற்பட்டது. கட்டபொம்மு ஆறுபேருடன் தப்பிவிட்டார். இடைவிடாப் பயணத்தில் குதிரைகள் இறந்து விட்டன. ஆறுபேரும் நடந்தே புதுக்கோட்டையைச் சேர்ந்த ஆனி யூர்க் காட்டை அடைந்தனர். கட்டபொம்மு தப்பியது கண்டு சினம் கொண்ட பானர்மேன், எட்டையபுரம், புதுக்கோட்டை. சிவகிரி, சொக்கம்பட்டி ஆகிய பாளையக்காரர்ரகளுக்குக் கடிதம் எழுதினான்.[1] கட்டபொம்முவை உயிரோடு பிடிக்கமுடியாவிட்டால்

---

1. 1799 Revenue Consultation, Vol. 98 PP, 2733 to 36

கொல்வதற்குத் தயங்க வேண்டாம் என்று குறிப்பிட்டிருந்தார்.[2]

தொண்டைமான் உத்தரவின் பேரிலேயே அவரது தளபதி கட்ட பொம்முவைத் தேடிக் கைது செய்தார்.[3] கட்டபொம்மு பிடிபட்ட தும் தொண்டைமான் கலெக்டருக்குக் கடிதம் எழுதினார்.[4] இந்தக் கடிதத்தைத் தமிழ்வாணனின் குரு சிரஞ்சீவி தம்முடைய நூலில்,

> ''நீங்கள் குறிப்பிட்டிருந்தபடி பாஞ்சாலங்குறிச்சிப் பாளை யக்காரராகிய கட்டபொம்முவை ஆறு பேருடன் சேர்த்துப் பிடித்து வைத்திருக்கிறேன். அவனைப் பிடிப்பதற்கு நான் பட்ட அல்லல் அளவிடமுடியாதவை. மலைகள், குகைகள், காடுகள் முதலிய பல இடங்களிலும் தேடி அலைந்த என் வீரர்கள் படாத பாடுபட்டு முடிவில் தெய்வாதீனமாக அகப்பட்டான். அவன் பொல்லாதவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். தன் உயிரைத் திரணமாக நினைக்கும் அவன் தான் பிடிபட்டு விட்டோமே என்று மனமுடைந்து தற் கொலை செய்து கொள்ளவும் கூடும். அவனை இங்கே வைத்துக் காப்பாற்றுவது சங்கடமானது. ஆகவே உடனே படைகளை அனுப்பி அவனைக் கொண்டு போகவேண்டும். கணமும் தாமதியாமல் காரியத்தைச் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். படை வரவை ஆவலுடன் எதிர் பார்க் கிறேன்'' (பக். 344–345).

என்று தொண்டைமான் கடிதத்தின் மொழி பெயர்ப்பைக் கொடுத் துள்ளார்.

ஆனால் தொண்டைமானின் தளபதி கட்டபொம்முவைக் கைது செய்து வெள்ளையரிடம் ஒப்படைத்த பிறகே தொண்டைமானுக்குத் தெரிந்தது என்று தமிழ்வாணன் கூறுகிறார். ஆவணக் காப்பகத்தில் பதிவேடுகளைப் பார்வை இட்டதாகக் கூறும் தமிழ்வாணன் தொண்டைமானின் கடிதங்களைப் பார்க்கவில்லையா? கட்ட பொம்மு பற்றிய குறைகளை எல்லாம் சிரஞ்சீவி நூலிலிருந்து கையாண்ட தமிழ்வாணன், அந்த நூலில் உள்ள தொண்டைமான் கடிதச் செய்தியைப் படிக்கவில்லையா? புதுக்கோட்டை அரசர் தான் கட்டபொம்முவைப் பிடித்துக் கொடுத்தார் என்பது சாதாரண மக்கள் அறிந்த செய்தியாகும்.

---

2. Ibid P. 2734
3. Ibid PP. 2793. 2795.
4. Tondaiman 24 September 1799 letter to Lushington, Proceedings of the Board of Revenue, Vol. 235, PP. 8069-70.

புதுக்கோட்டை அரசர் செய்தது தவறு என்ற கருத்து மக்கள் உள்ளத்தில் இன்று வரை வேரோடி உள்ளது என்பதற்கு 7–8–91இல் ஜூனியர் விகடனில் வந்த செய்தியே சான்று. ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்து புதுக்கோட்டையில் மழை பெய்யாத தற்குக் காரணம், கட்டபொம்மு ஆவியின் சீற்றமே என்று நம்பி, அங்குள்ள மக்கள் கட்டபொம்முவின் ஆவிக்குப் பூசை நடத்தி இருக்கின்றனர். இந்த நம்பிக்கை, அறிவியல் அடிப்படை யில் ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. ஆனால் கட்டபொம்முவைக் கைது செய்து ஒப்படைத்தது குறித்து மக்கள் என்ன நினைக் கிறார்கள் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. இப்படிப் பட்ட ஒரு செய்தியைத் தமிழ்வாணன் மறைக்க வேண்டியதன் அவசியம் என்ன? வரலாற்றைச் சொல்ல வேண்டியது தான், ஒரு வரலாற்றாசிரியர் கடமை. வரலாற்றுத் தலைவர்களைப் பழியிலிருந்து பாதுகாக்க முயல்வது தேவையில்லாதது.

கட்டபொம்மு 23–9–1799இல் பிடிபட்டார். உடனே தொண்டைமான் 24ஆம் தேதி கலெக்டருக்குக் கடிதம் எழுதி, 1–10–1799இல் கும்பினியாரிடம் ஒப்படைக்கிறார். கட்டபொம்மு ஆறுநாட்கள் தொண்டைமானது காவலில் தங்கி இருக்கிறார். ஆனால் தமிழ்வாணன், ''முததுவைரவ அம்பலகாரர் கட்ட பொம்முவைக் கைது செய்து, அவரைத் தேடி வந்த கும்பினிச் சிப்பாய்களிடமே ஒப்படைத்துவிட்டார்'' என்கிறார். 239 ஆங்கில நூல்களையும், ஆவணக்காப்பக ரெக்கார்டுகளையும் பார்வையிட்ட தாகச் சொல்லும் தமிழ்வாணன், இந்த வரலாற்றை எங்குப் படித்தார் என்பது தான் நமக்குப் புரியவில்லை. கட்டபொம்மு வைப் பிடித்துக் கொடுத்த தொண்டைமானைப் பாராட்டி லூசிங்டன், கிளைவிற்குக் கடிதம் எழுதினார். கவர்னர் கிளைவ் லண்டனிலுள்ள இயக்குநர்களுக்கு இதைத் தெரியப்படுத்தினார். இயக்குநர்கள் புதுக்கோட்டை அரசரைப் பாராட்டிச் சால்வையும் (Khilut) ஒரு குதிரையும் அத்துடன் இரண்டாயிரம் பொற்காசு களும் கொடுத்ததாகப், ''புதுக்கோட்டையின் பொது வரலாறு'' என்ற நூலில் இராதாகிருஷ்ண அய்யர் குறிப்பிடுகிறார் (ப. 811).

பிற்கால வரலாற்றின் திருப்புமையமாக விளங்கிய கட்ட பொம்மு பிடிபட்ட நிகழ்ச்சியைப் புதுக்கோட்டை அரசருக்கே தெரியாது என்று பொய் சொல்லத் தமிழ்வாணனுக்கு எப்படித் தான் துணிவு வந்ததோ? இந்தத் துணிவைத் தான் தமிழ்வாணன் ''துணிவே துணை'' என்று தம்முடைய பதிப்பகத்தின் வாசக மாகக் குறிப்பிடுகிறார் போலும்.

13.

# காலில் விழுந்திருப்பாரா கட்டபொம்மு?

வீரத்தின் திருவுருவமாக மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றவர் வீரபாண்டியக் கட்டபொம்மு. இந்தச் சிந்தனையின் அடிப்படையிலே தான், நெற்றியில் திருநீறு துலங்கிட, விழிகளில் வீரம் ததும்பிட, இதழில் புன்னகை சிந்திட, எடுத்த அடியும், பிடித்த வாளும், முறுக்கிய மீசையுமாகிய தோற்றத்துடன் கட்டபொம்மு உருவம் தீட்டப்பட்டது. இதைப் பொறுக்காத தமிழ்வாணன், கட்டபொம்முவின் பண்புருவத்தையே மாசுபடுத்த வேண்டும் என்ற மனப்பான்மையில், கட்டபொம்முவின் செயல்களைப் பேசும் போதெல்லாம், காலில் விழுந்தான், அஞ்சினான், அஞ்சி ஓடினான் என்ற சொற்களைப் பயன்படுத்துகிறார்.

மற்ற இடங்களில் தமிழ்வாணன் இந்தச் சொற்களைப் பயன்படுத்தியதையாவது நாம் மன்னித்து விடலாம். கட்டபொம்முவின் விசாரணையும் தூக்குத் தண்டனையும், பாறை நெஞ்சம் கொண்டோர் உள்ளத்தையும் உருக்கிவிடும். அந்த நிகழ்ச்சியைப் பற்றித் தமிழ்வாணன். ''கும்பினி மேலதிகாரிகளைத் தனிமையில் சந்தித்திருந்தால் காலில் விழுந்து கெஞ்சுவதற்குக் கூட அவன் தயங்கி இருக்கமாட்டான். இங்கே மற்றப் பாளையக்காரர்களின் மத்தியில், பானர்மேனுக்குப் பணிந்து கெஞ்சுவது அவனுக்கு அவமானமாகப்பட்டது.'' என்று எழுதியுள்ளார் (ப. 362).

கட்டபொம்மு எந்த இடத்திலாவது பணிந்து சென்றதற்கு ஆதாரம் உள்ளதா? ஜாக்சன் கலெக்டராகப் பொறுப்பேற்ற போது எல்லாப் பாளையக்காரர்களும் சென்று பார்த்தனர். கட்டபொம்மு

செல்லவில்லை பலமுறை கடிதம் எழுதியும் பார்க்கவில்லை. இறுதியில் கவர்னர், ஜாக்சனுக்குக் கடிதம் எழுதியதை அறிந்தே சென்றார். கட்டபொம்மு பேட்டிக்குச் சென்ற முறையைக் ''கட்ட பொம்மன் வரலாறு'' என்ற கதைப்பாடல் அழகாகக் கூறுகிறது. (பார்க்க. பின்னிணைப்பு – 2 ). இராமநாதபுரம் அரண்மனையில் தங்க வேண்டும் என்று சொன்ன போது மறுத்து வெளியேறினார். லூசிங்டன் பலமுறை அழைத்த போது 'மாமூல்' படியே பார்ப்பேன் என்பதில் உறுதியாக இருந்தார். தானாதிபதியை ஒப்படைக்க வேண்டுமென்று சொன்ன போது மறுத்தார். பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சியை முற்றுகையிட்டுச் சரணடையும்படி உத்தர விட்ட போது மறுத்துப் போரிட்டு முதல் நாள் போரிலே வெற்றியும் பெற்றார்.

இவ்வாறு எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தம்முடைய சுயமரியாதையையும், தன்மானத்தையும் கட்டபொம்மு விட்டுக் கொடுக்கவில்லை. படை பலத்திலும், ஆயுத பலத்திலும் பாஞ்சாலங் குறிச்சியார் குறைந்தவர்களாக இருந்தனர். ஆனால் தன்மான உணர்வில் ஒருபோதும் தலை குனிந்து நிற்கவில்லை. கோட்டையை முற்றுகையிட்ட போதே காலில் விழாத 'கட்டபொம்மு, விசாரணை யின் போது மற்றப் பாளையக்காரர்கள் இல்லாதிருந்தால் பானர்மேன் காலில் விழுந்திருப்பார் என்று கூறுவது அறிவியல் பூர்வமான விவாதமாகாது.

இனி நாம், கட்டபொம்மு விசாரணையின் போது சொல்லிய பதிலையும், தூக்குத் தண்டனை அறிவித்த போது நடந்துகொண்ட முறையையும், அதை அறிந்த வெள்ளை அதிகாரிகளின் மனநிலை யையும் காண வேண்டியது அவசியமாகும். இந்த நிகழ்ச்சியே கட்ட பொம்முவின் பண்பையும் மான உணர்வையும் அறிய ஆதாரமாக விளங்குகிறது.

வரலாற்று ஆசிரியர்கள், விசாரணை பற்றிய செய்திகளை எல்லாம், பானர்மேன் போர்டுக்கு எழுதிய கடிதத்தை அடிப்படை யாகக் கொண்டே எழுதியுள்ளனர். முதலில் இந்தப் பகுதிகளைக் கால்டுவெல் தான் திருநெல்வேலி வரலாற்றில் கொடுத்துள்ளார். இதன் மொழிபெயர்ப்பே ''திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்'' 'பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம்' 'கட்டபொம்மு' ஆகிய நூல் களில் உள்ளது. பானர்மேன் குறிப்பிடும் கட்டபொம்முவின் வாக்கு மூலம் அடங்கிய 'ஏ' முத்திரையிட்ட கடிதத்தின் நியாயத்தை ஒய்வு பெற்ற கேப்டன் ராவ் என்பவர் இம்பிரிண்ட் (Imprint) பத்திரிகையில் ''ஒரு பாளையக்காரர் மீதான ரரணுவ நீதி

மன்றத் தீர்ப்பு'' என்ற கட்டுரையில் கட்டபொம்முவின் விவாத நியாயங்களைக் கூறியுள்ளார்.[1] (பின்னிணைப்பு–3).

விசாரணையின் போது கட்டபொம்மு, ''குத்தகை என்று நான் யாருக்கும் பணம் எப்போதும் செலுத்தியது இல்லை. எனவே இல்லாததைச் செலுத்தவில்லை.

எனக்கு நண்பர்களாகவோ, பகைவர்களாகவோ இருந்த கம்பெனி அதிகாரிகள் என்னை அழைத்த போது அவர்களை நான் அவமதித்தது கிடையாது. எனக்கு எழுத்து மூலம் 'கவுல்' வழங்கப்படும் போது தான் பார்க்கச் செல்வது வழக்கம். ஜாக்சன் என்னை முறையாக அழைக்கவில்லை என்பதே அவர் மீது எனக்கு ஏற்பட்ட கோபமாகும். அவரது அலுவலகத்தில் காத்திருப்பதற்கு நான் ஒன்றும் அவரது வேலைக்காரன் அல்லன்.

தானாதிபதி செய்தது தவறு. அவர் அவ்வாறு செய்திருக்க வேண்டியதில்லை. ஆனால் கடுமையான பஞ்சத்தால் ஏற்பட்ட நெல் தட்டுப்பாட்டின் காரணமாக நெற் களஞ்சியத்தைத் திறந்து மக்களை அள்ளும்படி செய்தார். நான் இதற்காக வருத்தம் தெரிவித்துள்ளேன். இஃது எனக்குத் தெரியாமல் நடைபெற்றது. ஆனால் கம்பெனித் தண்டனைக்குப் பயந்து என்னிடம் தானாதி பதி பாதுகாப்புக் கேட்ட போது கொடுத்தேன். சரணடைந்தவர்களைக் கட்டபொம்மு ஒரு போதும் காட்டிக் கொடுக்கமாட்டான். நான் அதற்குப் பணம் கொடுக்கிறேன் என்ற போதும் கம்பெனி ஏவலர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

நீ என்னுடைய நாட்டை வளைத்துக்கொண்டு சரணடை என்றால் என் சுயமரியாதை அதற்கு இடம் கொடுக்குமா? என் கோட்டை உன்னால் தகர்க்கப்பட்டது. நான் ஒரு ரகசியப் பாதை வழியாக நம்பிக்கைக்குரிய சிலருடன் திருச்சி செல்ல முடிவு செய்தேன். ஆனால் நீ, நான் என் குடிமக்களை நிர்க்கதியாக விட்டு விட்டுத் தப்பி ஓடிவிட்டதாகச் செய்தியைப் பரவவிட்டாய். என் தலைக்கு விலை வைத்தாய். இதுவே தொண்டைமானையும், எட்டையபுரத்தாரையும் காட்டிக் கொடுக்கும் துரோகத்தைச் செய்யத் தூண்டியது. என் கோட்டையைத் தரைமட்டமாக்கி என் பொருட்களைக் கொள்ளையடித்தீர்கள். அந்தக் கொள்ளைக்கு நீயே தலைமை தாங்கினாய். அப்படிப்பட்ட நீயே இன்று என் மீது குற்றம் சுமத்தி என்னை வாதிடுமாறு வேண்டு

1. Court Martial of a Poligar Chief - 'Imprint, June - 1981

கிறாய். இங்கு வாதிடுவதில் எனக்கு என்ன நியாயம் கிடைக்கும்? இது என் விதி. உன் குற்றச்சாட்டுகளை நான் ஏற்கிறேன். உன் விருப்பம் போல் செய்துகொள்'' என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

வாக்குமூலத்தின் ஒவ்வொரு வரியிலும் நியாயங்கள் இருப்பதை உணரமுடிகிறது. எனவேதான் கால்டுவெல் இந்தக் கடிதத்தை மேற்கோள் காட்டவில்லை. கட்டபொம்முவுடைய பேச்சில் இருந்து, வெள்ளையர் பாளையக்காரர்களைக் ''குத்தகைதார்'' என்று குறிப்பிட்டதை அவர் ஏற்கவில்லை என்பதும், அதனால் தான் வரி கட்டவில்லை என்பதையும் அறியமுடிகிறது.

'கலெக்டர்கள், முறையாக அழைக்காத போது பார்க்கச் செல்வதில்லை'' ''சரணடைந்தவர்களைக் கட்டபொம்மு ஒரு போதும் காட்டிக் கொடுக்கமாட்டான்'', ''நீ என் நாட்டை வளைத்துக் கொண்டு சரணடை என்றால் என் சுயமரியாதை அதற்கு இடம் கொடுக்குமா?'' என்னும் தொடர்கள் கட்டபொம்முவின் தன்மான உணர்வையும், உயர்ந்த பண்பையும், சுயமரியாதையையும் தெளிவுபடுத்துகின்றன. இவற்றை எல்லாம் உணராமல் தமிழ்வாணன், ''கட்டபொம்மு பானர்மேன் காலில் விழுந்திருப்பான்'' என்று இழிவுபடுத்துவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

கட்டபொம்முவின் எதிரிகளாகிய வெள்ளையர் கூட அவரை இப்படி இழிவு படுத்தவில்லை. தூக்குமேடைக்குச் செல்லும் இறுதி நேரத்தில் கூட அஞ்சா நெஞ்சத்துடன் விளங்கிய கட்டபொம்முவின் செயல் குறித்து, ஆச்சரியமும் வியப்பும் அடைந்துள்ளனர். கட்டபொம்முவின் கடைசி நேரச் செயல் குறித்துப் பானர்மேன் கவர்னருக்குக் கடிதம் எழுதினான். அதில், ''நேற்று விசாரணை நடைபெற்ற போது கூடியிருந்தவர்கள் முன்பாக பாளையக்காரரின் போக்கும் நடத்தையும் அஞ்சா நெஞ்சத்துடனும், ஏளனத்துடனும் இருந்ததை நான் இங்குக் குறிப்பிடாமலிருக்க முடியாது. அவரைப் பிடிப்பதற்குத் தீவிர முயற்சி செய்த எட்டையபுரம் பாளையக்காரரை அவர் மீண்டும் மீண்டும் சீற்றத்துடனும், நிந்தனையுடனும் உற்று நோக்கினார். தூக்கிலிடப்படும் இடத்திற்கு அவர் உறுதியுடனும் வீரத்துடனும் நடந்து செல்லும்போது வலதுபுறமும் இடதுபுறமும் இரு மருங்கிலுமிருந்த பாளையக்காரர்களை ஏளனத்துடனும் நிந்தனையுடனும், உற்று நோக்கிக் கொண்டே சென்றார். தூக்கிலிடப்படும் இடத்திற்குச்

செல்லுகையில் தம்முடைய ஊமைச் சகோதரரைப் பற்றி மட்டும் சற்றுக் கவலை தெரிவித்ததாக என்னிடம் கூறப்பட்டது. தூக்கி லிடப்படும் மரத்தினடியில் சென்றதும் கோட்டையை விட்டுச் சென்றதற்கு அவர் வருத்தம் தெரிவித்ததாகவும் அதைப் பாது காப்பதில் தாம் இறந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்று கூறியதாகவும் என்னிடம் தெரிவிக்கப்பட்டது'' என்று பானர்மேன எழுதியுள்ளார். (பின்னிணைப்பு – 4).

கட்டபொம்முவால் பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் பெரும் சேதத்தை அடைந்தான். அப்படிப்பட்டவனே கட்ட பொம்முவை ''அஞ்சா நெஞ்சத்துடன் விளங்கினார்'' என்று வியந்து பாராட்டியுள்ளான். ஒரு மனிதன் வாழ்வில், தன் எதிரியால் பாராட்டப்படுவதுதான் மிகப் பெரிய வெற்றியாகும். அந்த வெற்றியை வட இந்தியாவில் அலெக்சாண்டரிடம் புருஷோத்தமன் பெற்றார். தென் இந்தியாவில் பானர்மேனிடம் கட்டபொம்மு பெற்றார். ஆனால் இந்த மண்ணில் பிறந்த தமிழ் வாணனும், சிரஞ்சீவியும் கட்டபொம்முவின் மீது பொய்யான பழியைச் சுமத்துவதில் ஆர்வமாக இருந்துள்ளனர். இவர்கள் ஆர்வம் சமூகக் கேட்டிற்கு வழிவகுப்பதைத் தவிர வேறு எந்தப் பயனையும் தரப் போவதில்லை.

14.

## கொடிய தண்டனையை நியாயப் படுத்தலாமா?

கட்டபொம்முவின் தூக்கு நிகழ்ச்சி, துயரம் நிரம்பியது. அது வெள்ளையர் ஆதிக்கத்தின் கொடிய செயலாகும். கட்டபொம்மு மீது குற்றம் சுமத்திய பானர்மேனே நீதிபதியாகவும் இருந்து, தண்டனை வழங்கியது நீதிமன்ற நெறிமுறைக்கு முற்றிலும் எதிரானதாகும். இந்தச் செயலைத் தமிழ்வாணன் கண்டித்து எழுதாமல், ''பானர்மேன் நடந்துகொண்ட விதம் நீதியா அநீதியா என்பது வேறு செய்தி'' என்று பூசி மெழுகி, இந்த முன்னாள் மாணவர் காங்கிரஸ் தலைவர் வெள்ளையரைக் காப்பாற்ற முயல்கிறார். தமிழ்வாணன் இப்படி என்றால், சிரஞ்சீவி, தூக்கு நிகழ்ச்சி குறித்து ஆவேசமாகக் கேள்வி கேட்கிறார். ''ஒரே ஒரு கேள்வி மட்டும் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது. கட்டபொம்மன் ஒரு சுத்த வீரனாக இருந்திருந்தால், சுதந்திரப் போராட்ட நிஷ்காமிய கர்மவீரனாக விளங்கி இருந்தால் கட்டபொம்முவைத் தூக்கிலிட்டுக் கொல்வதைப் பார்த்து நாட்டு மக்கள் சகித்திருப்பார்களா? கொதித்தெழுந்து, ஆயிரமாயிரம் அன்னியர்களை ஆளுக்கொரு மரத்தில் தூக்கிலிட்டு அண்டத்தை அதிரவைத்திருக்க மாட்டார்களா? மக்கள் ஏன் அப்படிச் செய்யவில்லை. ஏன்? ஏன்? என்பது எதிரொலிக்கிறது. ஆனால் பதில் சொல்வாரைத்தான் காணோம்'' என்று பரிதவிக்கிறார் சிரஞ்சீவி (ப. 347).

சிரஞ்சீவி ஒரு பக்க அளவில் எழுதியுள்ள வசனத்தை நாம் இங்குச் சுருக்கிக் கொடுத்துள்ளோம். சிரஞ்சீவியின் இந்தக் கேள்விகள் சிறுபிள்ளைத்தனமானவை. கட்டபொம்முவிற்கு ஏற்பட்ட கொடிய மரணத்தைக் கூடக் கொச்சைப்படுத்த வேண்டும் என்ற திட்டத்திலேயே இவ்வாறு ஆவேசக் கேள்விகளைக் கேட்டு, வாசகர்களைத் திசைதிருப்ப முயல்கிறார். பதில் சொல்வாரைக் காணோம் என்று கண்ணை மூடிக் கொண்டு பிதற்றும் சிரஞ்சீவிக்கு நாம் பதில் சொல்வோம்.

ஒரு வரலாற்று நிகழ்ச்சியைப் பற்றி நாம் விமர்சனம் செய்யும் போது, அந்தக் கால அரசியல் சூழல், மக்கள் சிந்தனை, இவற்றை மறந்துவிடக்கூடாது. காலத்தைக் கண்டிப்பாகக் கருத்தில் கொள்ளவேண்டும். 20-ஆம் நூற்றாண்டு அரசியலை மனத்தில் வைத்துக் கொண்டு கட்டபொம்மு காலத்தை ஆய்வு செய்யக் கூடாது. திலகர், காந்தி ஆகியோர் காலத்தில் சுதந்திரம், விடுதலை, போராட்டம், புரட்சி என்ற சொற்களின் பொருள் வேறு. எல்லை வேறு, கட்டபொம்முவின் காலத்தில் இவற்றின் கனமும் பரிமாணமும் வேறு. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்தியா ஒன்று என்ற சிந்தனை ஏற்படவில்லை. புதுக்கோட்டை, சிவகிரி, சிவகங்கை, இராமநாதபுரம், எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி ஆகியவை தனித்தனி நாடுகள் என்ற சிந்தனை தான் மக்களிடம் இருந்தது. தங்கள் நாட்டின் தலைவன் பக்கத்துப் பகுதி அரசரோடு நட்பாக இருந்தால், அந்த மக்களும் நட்போடு இருப்பார்கள். தங்கள் தலைவனுக்குப் பக்கத்து அரசர் பகை என்றால் அவர்களுக்கும் அவன் பகைவன். மொழி, இன அடிப்படையிலான சிந்தனை ஏற்படவில்லை. எட்டையபுரத்தாரும் நாயக்கர், கட்டபொம்முவும் நாயக்கர், ஆனால் இருவரும் பகையாக இருந்தனர். அதே நேரத்தில் சிவகங்கை மருதுபாண்டியரும் கட்டபொம்முவும் நண்பர்களாய் இருந்தனர்.

எனவே இப்படிப்பட்ட காலச் சூழ்நிலையில் கட்டபொம்முவிற்கு இழைக்கப்பட்ட கொடுமை கண்டு பெருமளவு அவன் நாட்டு மக்களும், சிறிதளவு அவனது நட்பு நாட்டவருமே கவலைப்பட்டு இருப்பார்கள். கட்டபொம்முவிற்குத் தண்டனை எதிரியின் பகுதியில் நிறைவேற்றப்பட்டது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். அந்த மக்கள் கட்டபொம்முவை ஆதரித்து ஏதாவது பேசுவார்களா? வீரபாண்டியக் கட்டபொம்மன் திரைப் படத்தில் புதுக்கோட்டை அரசர் பற்றிச் சிவாஜிகணேசன் பேசிய வசனத்திற்கு, அந்தப் பகுதியில் எவ்வளவு எதிர்ப்பு இருந்தது

என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்தியா சுதந்திரம் பெற்றுக் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒரே நாடாக விளங்கும் இந்த நாளில் கூட மக்கள் தங்கள் இராஜ விசுவாசத்திலிருந்து விடுபடவில்லை என்றால், ஜமீன்கள் ஆட்சி செய்த காலத்தில் எப்படிப்பட்ட சிந்தனையில் இருந்திருப்பார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

கட்டபொம்மு சுதந்திரப் போராட்ட வீரனாக இருந்திருந்தால், அவனைத் தூக்கிலிட்டதைப் பார்த்து மக்கள் கொதித்தெழுந்து ஆயிரமாயிரம் அன்னியரை ஆளுக்கொரு மரத்தில் தூக்கிலிட்டு அண்டத்தை அதிரச் செய்திருக்கமாட்டார்களா? என்று கேட்கும் சிரஞ்சீவியிடம் நாம் கேள்வி கேட்போம். இந்தியச் சுதந்திரப் போராட்டம் உச்ச நிலையில் இருந்த போது, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்தியா ஒரே நாடு என்ற சிந்தனை ஏற்பட்ட நாளில், செய்தித் தொடர்பு போக்குவரத்து மிகுந்த சூழ் நிலையில், ''பாரதமாதா கி ஜே' என்ற முழக்கம் திசையெங்கும் எதிரொலித்த காலத்தில் தானே மதன்லால் திங்ரா, குதிராம் போஸ், வீரன் பகத்சிங் ஆகியோர் வெள்ளையரால் தூக்கிலிடப் பட்டனர்? இவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தாமே? சப்பள உயர்விற்காகப் போராடவில்லையே? அப்போது ஏன் ஆயிரமாயிரம் அன்னியரைத் தூக்கிலிட்டு மக்கள் அண்டத்தை அதிர வைக்க வில்லை? தூக்கிலிட்டதை ஆதரித்த தேசீய வாதிகள் கூட அப்போது இருந்தனர்.

இவற்றை எல்லாம் மனத்தில் கொள்ளாமல் ''தாயகத்தின் விடுதலைக்குப் போராடிய பெரும் வீரனாகக் கட்டபொம்முவை அன்றைய தமிழர்கள் கருதி இருந்தால் ........ பிற்காலத்தில் இமயத்திலிருந்து குமரிவரை நடந்த விடுதலை எழுச்சிப் போராட்டப் புரட்சிகளிலும் கிளர்ச்சிகளிலும் துடித்தெழுந்த மக்கள் அன்று தூக்குத் தண்டனையிலிருந்தும் கட்டபொம்முவைக் காப்பாற்றத் துரித நடை போட்டிருப்பார்கள்'' என்று சிரஞ்சீவி (ப. 347) விவாதிப்பது வேடிக்கையாக உள்ளது. சிரஞ்சீவியும், தமிழ்வாணனும் அறியாமல் இப்படி எழுதவில்லை. கட்டபொம்மு விடுதலைப் போராட்ட வீரன் அல்லன், என்ற எண்ணத்தை ஏற்படுத்தவே இவ்வாறு எழுதி உள்ளனர்.

ஆனால் கட்டபொம்முவிற்கு இழைக்கப்பட்ட கொடுமை கண்டு அவர் மக்கள் கொதித்து எழுந்தனர். பாளையங்கோட்டைச் சிறைக்கதவு தகர்க்கப்பட்டது. ஆறே நாளில் பாஞ்சாலங் குறிச்சியில் மிகப்பெரிய கோட்டை கட்டப்பட்டது. பாஞ்சாலங்

குறிச்சி வந்த வெள்ளையர் படை தங்கள் கண்களை நம்ப முடியாமல் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தது. கட்டபொம்மு "சுதந்திர உணர்ச்சி கொண்ட சுத்த வீரனாக இருந்ததால் தான், மக்களுக்காக வாழ்ந்து மக்களுக்காகவே பாடுபட்டு மக்களின் ஏகோபித்த அபிமானத்தைப் பெற்றவனாக இருந்ததால் தான் நாட்டுமக்கள் சகிக்காமல் கொதித்தெழுந்து" சிறையை உடைத்து மீண்டும் ஆட்சியை அமைத்து வெள்ளையரை எதிர்த்தனர். இந்தச் செய்தியைத் தமிழ்வாணனும் சிரஞ்சீவியும் ஏன் சிந்திக்கத் தவறினார்கள்?

பிற்காலத்தில் எழுந்த தேசீய அளவிலான சுதந்திரப் போராட்டம் போன்ற கண்ணோட்டத்தில் கட்டபொம்மு விடுதலை இயக்கத்தைத் தொடங்கவில்லை. ஆனால் நாடு பிடிக்கும் எண்ணத்தோடு கர்நாடக அரசியலில் ஈடுபட்டுத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்ற வெள்ளையரைப் பாஞ்சாலங்குறிச்சியார் தொடர்ந்து எதிர்த்து வந்தனர் என்பது உண்மையே. நீறுபூத்த நெருப்பாக இருந்த வெள்ளையர் எதிர்ப்புப் போராட்டம், ஊமைத்துரை காலத்தில் உச்சநிலையை அடைந்தது.

'பாளையக்காரர்கள் கோட்டைகள் கட்டக்கூடாது. படைகள் திரட்டக் கூடாது, ஆயுதங்கள் வைத்துக் கொள்ளக்கூடாது, அவர்கள் சாதாரண குத்தகைதாரரே, தனி அந்தஸ்து எதுவும் கிடையாது என்று கும்பினி நிர்வாகம் ஆணை பிறப்பித்தபோது, அதை கட்டபொம்மு ஒருவரே எதிர்த்தார். கட்டபொம்மு தம்முடைய உரிமையை விட்டுக்கொடுக்க மறுத்து, இறுதிவரை எதிர்த்து உயிர் துறந்தார். ஆனால் கயத்தாற்றில் பானர்மேன் முன் கூடிய பாளையக்காரர்கள் அவனது உத்தரவிற்குக் கீழ்ப் படிந்து கோட்டையை இடிக்கவும் ஆயுதங்களை ஒப்படைக்கவும் சம்மதித்தனர். கயத்தாற்றில் அவர்கள் இருக்கும் போதே கோட்டைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. தங்கள் ஆயுதங்களைக் கும்பினியார் காலடியில் குவித்துவிட்டு வெறுங் கையோடு நாடு திரும்பினர். புதுக்கோட்டை அரசரும், எட்டைய புரத்தார் கூட்டத்தாரும், வெள்ளையர் ஆதிக்கம் இந்த நாட்டில் வேரூன்றப் பலவகையில் துணைநின்றனர். இப்படிப்பட்டவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் பாஞ்சாலங்குறிச்சியார் செயல் எப்படி இருந்தது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் தான் அவர்களது ஆதிக்கத்திற்குக் கட்டுப்படாத சுதந்திர உணர்ச்சியை நாம் உணர முடியும்.

சிறையிலிருந்து வெளிவந்த ஊமைத்துரை வெள்ளையர் படைத்தளங்களைத் தாக்கினார். எட்டையபுரத்தாரையோ, புதுக்

கோட்டை அரசையோ தாக்கவில்லை. ஊமைத்துரை புதுக் கோட்டை அரசருக்கும், சரபோஜி மன்னருக்கும் கடிதம் எழுதி ஆங்கிலேயருக்குத் துணையாகப் படை அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். ஆங்கிலேயரே தங்கள் எதிரி என்பதில் பாஞ்சாலங்குறிச்சியார் தொடக்கம் முதலே தெளிவாக இருந்தனர். வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்க்கக் கட்டபொம்மு ஒரு கூட்டணியை உருவாக்கினார். உள்நாட்டுத் துரோகத்தின் துணை யுடன் வெள்ளையர் அதைக் கருவிலேயே அழித்தனர். வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து வீரமுழக்கமிட்டுத் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்தவர் வரிசையில் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக் காரர்களுக்கு முதலிடம் உண்டு. இதை யாரும் மறுக்கவோ மறைக் கவோ முடியாது.

15.

# கொள்ளைக்காரன் யார்?

தமிழ்வாணன் தம்முடைய நூலின் பெயரையே 'கட்டபொம்மன் கொள்ளைக்காரன்' என்று வைத்தது அநாகரிகமான செயலாகும். கட்டபொம்முவைக் கொள்ளைக்காரன் என்று எழுத தமிழ்வாணன் எங்கே இருந்து ஆதாரத்தைக் கண்டுபிடித்தார் என்பதை,

> ''ஒப்பிலக்கணம் என்னும் உயரிய நூலை இயற்றிய பெரியார் கால்டுவெல் பாதிரியாரை அறியாதார், தமிழ் கற்றோரிடையே எவருமிருக்க மாட்டார்கள். தமிழுக்குப் பெரும் பணி புரிந்த, தமிழின் தனிச் சிறப்புக்களை உலகிற்கு எடுத்துணர்த்திய அந்தக் கிறிஸ்தவப் பெருமகன் திருநெல்வேலிச் சீமையில் வாழ்ந்தவராவார். அவர் திருநெல்வேலியின் வரலாறு என்ற ஓர் அரிய நூலையும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அந்த நூலில் அவர் நமது கட்டபொம்மனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள சில பகுதிகளைப் பாருங்கள்'' என்று கூறுகிறார்.

கால்டுவெல்லின் திருநெல்வேலி வரலாறு பற்றிய தமிழ்வாணன் அறிவாற்றல் எத்தகையது என்பதை நாம் ''மருட்டும் நூற்பட்டியல்'' என்ற தலைப்பில் தெளிவாக விளக்கி உள்ளோம் (ப. 7). அதைத் தமிழ்வாணன் இங்கு உண்மை என்று நிரூபிக்கிறார். ''அவர் (கால்டுவெல்) குறிப்பிடும் சில பகுதிகளைப் பாருங்கள்'' என்று, ஏதோ கால்டுவெல் நூலை, இவர் படித்து நமக்குச் சொல்வதைப் போலக் கெட்டிக்காரத்தனமாக எழுதி

உள்ளார். ஆனால் உண்மை என்னவென்றால், சிரஞ்சீவி ''நாடாளவில் மல சூறையாடினான்'' என்று, தம் நூலில் கொடுத்துள்ள (பக். 308-315) கால்டுவெல் நூற் பகுதிகளைத் தமிழ்வாணன் சில சொற்களை மாற்றி அப்படியே கொடுத்துள்ளார்.

தமிழ்வாணன் கால்டுவெல்லைப் பற்றிக் குறிப்பிடும் போது 'பெரியார்' என்று புகழ் மாலை சூட்டிப் பாராட்டுகிறார். தமிழ்ப் பணியைப் பொறுத்தமட்டில், கால்டுவெல் இந்தப் புகழ்ச்சிக்கு முற்றிலும் தகுதி உடையவரே. ஆனால் தமிழ்வாணன் இந்த இடத்தில் புகழ்ந்து எழுதி இருப்பதில் உள்நோக்கம் உள்ளது. இப்படிப்பட்ட சிறந்த அறிஞர் கால்டுவெல் கூறுவது உண்மையாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை உணர்வை வாசகர்களிடம் ஏற்படுத்தவே கால்டுவெல்லின் புகழைக் கூறுகிறார்.

கால்டுவெல்லின் தமிழ்ப்பணியை நாமும் பாராட்டுகிறோம். ஆனால் அதே நேரத்தில் வரலாற்று வீரர்கள் பற்றிக் கால்டுவெல்லின் மனோபாவம் எப்படி இருந்தது என்பதையும் நாம் அறிவது அவசியமாகும். இதற்கு ஆதாரம் உள்ளது. கணபதியா பிள்ளையின் ''எட்டையபுரம் அன்றும் இன்றும்'' என்ற நூலுக்குக் கால்டுவெல் ஓர் அணிந்துரை வழங்கி உள்ளார். அதில் வெள்ளையர் ஆட்சி வேரூன்றத் தொடங்கிய காலத்தில் பாளையக்காரர்கள் எப்படி நடந்திருக்க வேண்டும் என்ற அவரது உள்ள உணர்வையும் விருப்பத்தையும் வெளியிட்டு உள்ளார். அதில், ''எட்டையபுரம் ஜமீன்தார் வரலாறு எல்லா ஜமீன்களும் பின்பற்றுவதற்கு உரிய வரலாறு ஆகும். இவரே மற்ற ஜமீன்களுக்கு முன் மாதிரியாக விளங்கக் கூடியவர். ஆங்கில அரசின் வளர்ச்சிக்காக எல்லா வழிகளிலும் உதவி செய்தவர்'' என்று கால்டுவெல் எட்டையபுரத்தாரைப் பாராட்டி உள்ளார் (பக் V-VI.)

''எட்டையபுரத்தாரை ''முன்மாதிரி ஜமீன்'' என்று பாராட்டும் கால்டுவெல், வெள்ளையரை எதிர்த்த பாஞ்சாலங்குறிச்சியாரைப் பற்றி என்ன எழுதுவார் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. கால்டுவெல் போன்ற வெள்ளையர் ஆதரவாளர்கள் எழுதிய வரலாற்று நூல்கள் மனரீதியில் ஆங்கில அடிமைகளை உருவாக்கும் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டவை. காலனி ஆதிக்கத்தையும், ஆங்கிலேயர் ஆக்கிரமிப்பையும் நியாயப் படுத்துவதற்காக எழுதப்பட்டவை. ஆங்கிலேயரை எதிர்த்தவர்களின் இலட்சியத்தையும் நோக்கத்தையும் மறைத்து, அவர்களது புரட்சி எழுச்சியை மாசு படுத்தி, அதன் மூலம் புரட்சி சிந்தனையை

மக்களிடம் மழுங்க அடிப்பதே இந்நூல்களின் நோக்கமாகும். இந்திய நாகரிகத்திற்கும், வரலாற்றிற்கும், தொன்மைக்கும். எழுச்சிக்கும் ஆதாரமாக உள்ள, உள்நாட்டுச் சான்றுகளை இவர்கள் கற்பனை என்று ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தாங்கள் எழுதிய வரலாறே உண்மை வரலாறு என்று நிலைநாட்டி, அதன் முலம் ஆங்கில அரசைத் தாங்கிப்பிடித்தவர்கள். இந்த அடிப்படையில் தான் கட்டபொம்மு கதைப் பாடல்களைக் கால்டுவெல் கற்பனை என்று கூறி அதை ஒதுக்கித் தள்ளும் மனப்பான்மையை உருவாக்கினார் (பக். 207 – 208).

கால்டுவெல் ஏன் கட்டபொம்முவைச் சிறுமைப்படுத்தி எழுதினார் என்ற உள்நோக்கத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். வெள்ளையர் ஆதிக்கத்தைத் தொடர்ந்து எதிர்த்த பாஞ்சாலங் குறிச்சியாரின் சுதந்திரச் சிந்தனையை மறைத்து, வெள்ளையர் கட்டபொம்முவைத் தூக்கிலிட்டது நியாயமே என்ற கருத்தை மக்கள் உள்ளத்தில் விதைக்கும் நோக்கத்தோடு கால்டுவெல் எழுதி உள்ளார். கால்டுவெல்லின் இந்த அணுகுமுறையை நாம் குறை சொல்ல வேண்டியதில்லை. ஒரு வெளிநாட்டைச் சேர்ந்தவர். வெளிநாட்டார் ஆதிக்கத்தை எதிர்த்தவரை, இந்தக் கண்ணோட்டத் தில் தான் எழுதுவார். இது இயல்பே. ஆனால் இந்திய மண்ணின் மைந்தர்களாகிய தமிழ்வாணனும், சிரஞ்சீவியும், வெளிநாட்ட வராகிய கால்டுவெல் எழுதி உள்ள செய்தியைக் கூட அப்படியே கொடுக்காமல், செய்தியின் தலையையும் காலையையும் வெட்டி விட்டு, கட்டபொம்முவை இழிவு படுத்தும் நோக்கில் பெரிது படுத்தி எழுதி உள்ளது தான் மன்னிக்க முடியாததாகும். கால்டுவெல் எழுதி உள்ளதாகத் தமிழ்வாணன் மேற்கோள் காட்டி உள்ள பகுதியையும் கால்டுவெல் நூலில் உள்ள மூலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தச் சதி அம்பலமாகும். இனி அந்தப் பகுதிகளைப் பார்ப்போம்.

கால்டுவெல் நூலிலிருந்து தமிழ்வாணன் மேற்கோள் காட்டி உள்ள பகுதி :

> ''அந்தப் பாளையக்காரன் தனது பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிலிருந்து ஆயுதம் ஏந்திய துணைவர்களுடன் புறப்பட்டுச் சென்று சர்க்கார் கிராமங்களிலும் பிற பாளை யக்காரர்களின் கிராமங்களிலும் புகுந்து தாக்கி, தன் கண்ணில்பட்டதை எல்லாம் கொள்ளையடிப்பான். பல சமயங்களில் முக்கியமான கிராமத் தலைவர்களைத் தூக்கிக் கொண்டும் போய்விடுவான்'' (ப. 288).

கால்டுவெல் நூலிலுள்ள மேற்கண்ட மேற்கோளின் முழுமையான மூலப் பகுதி:

What Puli Deva was in Tinnevelly in the middle of the last century, that Kattaboma Nayaka was towards its close-the centre of all disloyalty and misrule. From his fort of Panjalamkurichi the Poligar used to sally forth at the head of his armed followers, and making incursions into Circar villages, as well as into the villages of other Poligars, sack and plunder all that came in his way, often times carrying off some of the principal inhabitants. In 1797 rebellion broke out in the Ramnad country, and many of the Tinnevelly Poligars joined the insurrection, almost all of them' with Kattaboma Nayaka at their head, refusing to pay their kists to Government. (P. 173)

கால்டுவெல் கூற்றிலிருந்து தமிழ்வாணன் நீக்கி விட்ட பகுதிகள் :

''சென்ற நூற்றாண்டின் இடைக்காலத்தில், புலித்தேவர் நெல்லை மாவட்டத்தில் எவ்வாறு இருந்தாரோ அது போல கடைசி காலகட்டத்தில் கட்டபொம்முவும் அரசு விசுவாசம் இன்மைக்கும் தவறான ஆட்சிக்கும் நடுநாயக மாக விளங்கினார்''

''1797 இல் இராமநாதபுரத்தில் புரட்சி வெடித்தது. கட்ட பொம்மு தலைமையில் நெல்லை மாவட்டத்திலுள்ள பாளையக்காரர்களில் பெரும்பாலும் அனைவரும் அந்த ஆட்சி எதிர்ப்புப் புரட்சியில் சேர்ந்தனர். அவர்கள் வரி கட்டுவதற்கும் மறுத்தனர்''.

தமிழ்வாணன் இந்த இரண்டு பகுதிகளையும் மறைத்து விட்டு, இடைப்பட்ட பகுதியை மட்டுமே மேற்கோள் காட்டி உள்ளார். ஆங்கில அரசிற்கு எதிராகப் புரட்சி செய்து, வரி கொடுக்க மறுத்த தால், கட்டபொம்முவையும், புலித்தேவரையும் 'விசுவாசம்'' இல்லாதவர்கள் என்று கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். கட்ட பொம்மு தம் எதிர்ப்பு உணர்ச்சியை, வெளிப்படுத்தும் அடிப்படை யிலேயேதான் அரசு நிலங்களிலும், வெள்ளையர் ஆதரவுப் பகுதி களிலும் அத்து மீறிப் புகுந்து உழுது பயிரிட்டு எதிர்த்த இடங்களைச் சூறையாடினார். இதைத் தடுத்தவர்களைப் பணயக் கைதிகளாகக்

கொண்டு சென்றார். இவை வெள்ளையர் எதிர்ப்புச் செயல்களாகும் கொள்ளை ஆகாது. கேசவன் தம்முடைய ''கதைப்பாடலும், சமூகமும்'' என்ற நூலில் இவ்வாறே குறிப்பிட்டுள்ளார் (ப. 68).

கட்டபொம்மு தம்முடைய பகைவர் நிலத்தின் விளைச்சலையும், கால்நடைகளையும் கவர்ந்ததால் கொள்ளைக்காரன் என்றால்; வேந்தர்கள், குறுநில மன்னர்கள் பாளையக்காரர்கள் அனைவரையுமே கொள்ளைகாரர்கள் என்றே சொல்ல வேண்டும். வரலாறு தெரிந்த காலம் முதல் மன்னர்களது நடவடிக்கை இப்படித்தானே இருந்து வந்துள்ளது. இலக்கியங்களும், வரலாறும் அவர்களைக் கொள்ளைக்காரர்கள் என்று குறிப்பிட வில்லை. பகைவர் நிலங்களில் இருந்து ஆநிரைகளைக் கவர்ந்து வருவதை 'வெட்சி' என்று தொல்காப்பியர் பொருளிலக்கணம் வகுத்துள்ளார். பிற வேந்தர் விளைநிலங்களைக் கைப்பற்றப் படை எடுத்துச் செல்வதைப் புறநானூறு புகழ்ந்து பாடுகிறது. வள்ளுவரும் மன்னர்களுக்குப் பொருள் வரும் வழியைக் கூறும்போது.

''உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்'' (756)

என்று ''தெறுபொருளும்'' மன்னர்க்கு உரியது என்கிறார். தம் நாட்டின் மீது படை நடத்திப் பொருட்களைக் கொள்ளையிடக் கூடாது என்பதற்காகவே வலிமை வாய்ந்த பேரரசனுக்கு மற்றவர் திறை செலுத்தி வந்தனர். நாகப்பட்டினம் புத்த விகாரத்தைக் கொள்ளையிட்டுத் திருமாலுக்குக் கோயில் கட்டிய திருமங்கை மன்னர், திருமங்கை ஆழ்வார் என்று போற்றப்படுகிறார். அதை எந்த இலக்கியமும் கொள்ளை என்று இழிவாகப் பேசவில்லை. அது அந்தக் காலகட்டத்தின் வழக்கம். கட்டபொம்மு செயலும் அந்த வகையிலேயே அடங்கும். அவற்றை இன்றைய ஜனநாயக அரசியல் சட்டத்தோடு ஒப்பிட்டு நாம் விமர்சனம் செய்யக் கூடாது.

கட்டபொம்மன் நடவடிக்கைகளைக் 'கொள்ளை' என்று கூறும் தமிழ்வாணன் கூட்டத்தாரிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டியது அவசியமாகும். அந்தக் கேள்வி தமிழகத்தின் பிற பாளையக்காரர்கள் நடவடிக்கைகள் பற்றியது அல்ல. கட்டபொம்முவைத் தூக்கிலிட்டு நீதியை நிலை நாட்டியதாகத் தமிழ்வாணன் துதிபாடும் வெள்ளையர் நடவடிக்கையைப் பட்டியலிட்டு, ''இதற்கு என்ன பெயர்?'' என்ற கேள்வியைத் தான் கேட்கிறோம். இதோ அந்தப் பட்டியல்:

1. பாஞ்சாலங்குறிச்சி மீது படை எடுத்துவந்த கர்னல் புல்லர்ட்டன், கோட்டைக் கருவூலத்திலிருந்த நாற்பதாயிரம் வராகனையும் பங்கு போட்டுக் கொண்டான். (கால்டுவெல், ப. 150).

2. இராமநாதபுரத்தில் கட்டபொம்மு ஜாக்சனிடம் பேசிக் கொண்டு இருக்கும் போது, அவருடைய உடைமைகள், வெள்ளிப் பாத்திரங்கள், பித்தளைப் பாத்திரங்கள், குதிரை, பல்லக்கு, குடை, சாமரம், விருதுகள், கிஸ்திப் பாக்கிக்காகக் கொண்டு வந்திருந்த பணமுடிப்பு ஆகியவை எல்லாம் கோட்டை வாயிலில் கும்பினிச் சிப்பாய்களால் ஏலம் போடப்பட்டன. கட்டபொம்முவின் சொத்துக்கள் யாவும் கொள்ளையிடப்பட்டும், பறிமுதல் செய்யப்பட்டும் போய்விட்டன (தி. நா. சு. ப 117).

3. மேஜர் பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக் கைப்பற்றிய போது கோட்டைக்குள் அகப்பட்ட யானை, குதிரை. மாடு முதலியவற்றையும், நகைகளையும் மற்றும் விலை உயர்ந்த பொருட்களையும் ஆங்கில வீரர்களுக்குப் பங்கு போட்டுக் கொடுத்தார் (தி. நா சு. ப. 164).

4. கட்டபொம்முவின் சிற்றன்னையார் தம் உறவினர் வீட்டில் கொடுத்து வைத்திருந்த நகைப்பெட்டியை மேஜர் பானர்மேன் தேடிப்பிடித்துக் கைப்பற்றிக்கொண்டார். (தி. நா. சு.ப. 163-164).

5. 1795-இல் இராமநாதபுரம் கோட்டையைக் கைப்பற்றிய ஆங்கில அதிகாரிகள் மார்ட்டின்சும், பவுனியும் அரண்மனையில் இருந்து 50, 455 குளிச்சக்கரம் பணத்தையும், அந்தப்புரத்திலிருந்து பத்துச் சாக்குப்பைகளிலிருந்து 10,000 ஸ்டார் பக்கோடா பணத்தையும், நாற்பத்தோரு பைகளில் வைத்திருந்த 20,475 குளிச்சக்கரம் பணத்தையும், கருவூலத்திலிருந்து 58,741.13 0 ஸ்டார் பக்கோடா பணத்தையும் கைப்பற்றினார் (R.C. Vol. 62 P. P. I. 112, 1136 – 1230).

6. சேதுபதி மன்னரின் அந்தரங்கப் பணியாளர்களைத் திருச்சியிலிருந்து வரவழைத்து விசாரித்து. அவர்களில் ஒருவரது வாக்கு மூலத்திலிருந்து கிணற்றுக்குள் மறைத்து வைத்திருந்த சில பணப் பைகளையும் கைப்பற்றினர். சேதுபதி மன்னர் திருச்சி செல்லும் போது எடுத்துச் சென்ற பணப்பெட்டி, நகைப் பெட்டி பற்றித் தெரிந்து கொள்ள கணக்குப் பிள்ளைகளைப் படாதபாடு படுத்தினர் (எஸ். எம், கமால் பக் 84—85).

வெள்ளையரின் இந்த நடவடிக்கைகளுக்கு என்ன பெயர்? என்று நாம் தமிழ்வாணன் கூட்டத்தாரிடம் கேட்கிறோம். வெளி நாட்டிலிருந்து வியாபாரம் நடத்த வந்தவன் இங்கு நடத்திய வெறியாடல் கொள்ளையில்லையா? பொழுதெல்லாம் நம் செல்வங்களைக் கொள்ளை கொண்டுபோன அந்நியரைக் கொள்ளைக்காரன் என்று கூறவில்லை. ஆனால் இந்த நாட்டில் பிறந்து, வெளி நாட்டவனை எதிர்த்து உரிமைக்குரல் கொடுத்து உயிர்துறந்த, வீரனைக் கொள்ளைக்காரன் என்று தலைப்பிட்டு நூல் எழுதியதை என்னவென்று சொல்வது? வஞ்சகச் சதி என்று தானே சொல்ல வேண்டும்.

மேலும், கட்டபொம்மு மீது விசாரணையின் போது வெள்ளையரால் நான்கு குற்றங்களே சுமத்தப்பட்டன. அவை :

1) வரி ஒழுங்காகக் கட்டவில்லை.

2) கலெக்டர் அழைத்த போது சந்திக்க மறுத்தார்.

3) சிவகிரியாரின் மகனுக்கு ஆதரவாகப் படைகள் அனுப்பினார்.

4) பானர்மேன் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுச் சரணடையாமல் எதிர்த்துப் போரிட்டார்,

என்பனவாகும். கொள்ளையடித்ததாகக் கட்டபொம்முமீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. எனினும் தமிழ்வாணன் கூட்டத்தார் கூறும் கொள்ளைக் குற்றச்சாட்டுகளை நாம் தனித் தனியாக விவாதிப்போம்.

### குற்றச்சாட்டு 1

''இராமநாதபுரம் கடை வீதியில் கொள்ளையிட்டார்'' (ப. 325)

இராமநாதபுரம் பேட்டி கலவரத்தில் முடிந்தது. கோட்டையினுள் இருந்து வெளியேறிய பாஞ்சை வீரர்கள் இராமநாதபுரம் கடைவீதியைச் சூறையாடினர் என்று பாடல் குறிப்பிடுகிறது. கட்டபொம்மன் கதைப்பாடல்களைப் பொய்யென்று கூறும் தமிழ்வாணன் இந்த நிகழ்ச்சி இடம் பெறும் வரிகளை மட்டும் மெய்யென்று மேற்கோள் காட்டியுள்ளார். எனினும் நாம் இதை விவாதிப்போம்.

கட்டபொம்முவின் வீரர்கள் இராமநாதபுரம் வீதியை எந்தச் சூழ்நிலையில் சூறையாடினர்? ஏன்? என்ற நியாயங்களையும் பார்க்கவேண்டும். கலெக்டரைச் சந்திக்கப் புறப்பட்டு வந்த

அவர்களது மன்னர் பலநாட்கள் அலைக்கப்பட்டு இறுதியில் அவமதிக்கப்படுகிறார். மன்னரது தம்பியரும் மாப்பிள்ளைமாரும் பேட்டி நடக்கும் முன்பே தாக்கப்பட்டனர். அவர்களது உடைமைகள் முழுவதும் ஆங்கில வீரர்களால் பறிமுதல் செய்யப்பட்டு, அவர்களது கண் முன்னேயே ஏலம் போடப்பட்டன. அவர்களது தலைவன் கட்டபொம்முவின் முந்தியைப் பிடித்து இழுத்து ஆங்கில வீரர்கள் அவமதித்தனர். நடந்த மோதலில் பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்த பலர் உயிர் துறந்தனர். முற்றுகையை உடைத்து வெளியில் வந்துள்ளனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கட்டபொம்முவின் படை வீரர்கள் எப்படிக் கொதித்துப்போய் இருப்பார்கள் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். மான உணர்வுள்ள அவர்கள் ஆத்திரமும் சினமும் கொண்டு வன்முறையில் ஈடுபட்டது இயற்கையே, ஆச்சரியப்பட எதுவுமில்லை.

தன் கணவன் அநியாயமாகக் கொல்லப்பட்ட போது கண்ணகி மதுரைக்கு நெருப்பு வைத்துத் தன்னுடைய ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டாள். இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட போது இந்தியா எங்கும், குறிப்பாக டெல்லியில் என்ன நடந்தது? சீக்கியர் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. எம். ஜி. ஆர் இயற்கை மரணமடைந்த போது அண்ணா சாலைக் கடைகள் சூறையாடப்பட்டன. மண்டல் கமிஷன் அறிக்கையை வி. பி. சிங் அரசு அமுலாக்க எண்ணிய போது டெல்லியில் கார்கள் கொளுத்தப்பட்டன, கடைகள் சூறையாடப்பட்டன. ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட போது, கொலையாளி யார் என்று தெரியும் முன்பே எதிர்க் கட்சிக்காரர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையடித்து, அடித்து நொறுக்கிச் சேதப்படுத்த வில்லையா? அதுவும் யார் யாரிடம் அவ்வாறு நடந்தனர்? ஒரே நாட்டை, ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்தச் சகோதரர்களின் ரத்தத்தை ருசி பார்த்து உடைமைகளைக் கொள்ளையடித்தனர். ஏன் இப்படிச் செய்தார்கள் என்று கேட்டால், ‘ஆத்திரத்தில் நடைபெற்றுவிட்டது’ என்று பதில் சொல்லப்படுகிறது.

எனவே, ஒரு வெளிநாட்டவனால், மற்றொரு சீமையில் தங்கள் தலைவன் அவமதிக்கப்பட்ட நிலையில், தங்கள் உடைமைகளையும், உடன் வந்தோரில் சிலர் உயிரையும் இழந்த நிலையில் கட்டபொம்முவின் வீரர்கள் இப்படித்தான் செயல்பட்டு இருப்பார்கள். அவ்வாறு செயல்பட்டது தான் நியாயம். இல்லையென்றால் இந்தச் சமூகம் அவர்களைப் ‘பேடிகள்’ என்று அழைத்திருக்கும். இது சரி என்று சமூகம் ஏற்றுக்கொண்டதால் தான். கதைப்பாடகன் இதை மக்கள் முன் பாடி இருக்கிறான். இது

இழிவான செயலென்றால் பாடகன் பாடும்போது மக்கள் அவனை விட்டு வைத்திருக்க மாட்டார்கள்.

அது மட்டுமல்லாமல் இராமநாதபுரம் நிகழ்ச்சியை விசாரணை செய்த மூவர்குழு, ''இராமநாதபுரம் கலகத்திற்கு எந்த விதத்திலும் கட்டபொம்முவைக் குறை சொல்வதற்கில்லை. தன்மான கௌரவத்திற்கே பங்கமேற்படுகிற போது, கோழையைப் போல அவர் நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறாகும். மேலும், தம் தலைவனுக்கு ஆபத்து ஏற்பட இருக்கும் சமயம் அவனுக்குக் கட்டுப்பட்டு இருக்கும் பரிவாரங்கள் கைகட்டிச் சும்மா இருக்காது. உணர்ச்சி வசப்படத்தான் செய்யும்.'' என்று அறிக்கை கொடுத்துள்ளது. இதைச் சிரஞ்சீவியே தம்முடைய நூலில் மேற்கோள் காட்டியுள்ளார் (ப. 325). வெள்ளைக்காரர்களே சூழ்நிலையை நன்றாக உணர்ந்து, அந்த நிலையில் படைவீரர்கள் இப்படி உணர்ச்சி வசப்பட்டு, ஆத்திரப்படுவது இயற்கையே என்று சொல்லும் போது, தமிழ்வாணனும் சிரஞ்சீவியும் ஏன் ''தப்பி ஓடுங்கால் தட்டுப்பட்டதையும் விடவில்லை'' என்று சொல்லவேண்டும்?.

## குற்றச்சாட்டு 2

''சொக்கம்பட்டியைக் கொள்ளையடித்தார் ஜெகவீர பாண்டியனார்'' (ப. 251).

1783ஆம் ஆண்டில் கர்னல் புல்லர்ட்டன் என்பவன் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுத்து வந்தான். பகல் முழுவதும் பீரங்கியால் தாக்கியும் கோட்டையைத் தகர்க்க முடியவில்லை. பாஞ்சாலங்குறிச்சிப் படை வீரர்களில் பெரும் பகுதியினர் சொக்கம்பட்டி முற்றுகையில் ஈடுபட்டிருந்தனர். அந்தப் படை திரும்புவதற்குள் கோட்டையைப் பிடித்துவிட வேண்டுமென்று எண்ணித் தொடர்ந்து இரவு முழுவதும் பீரங்கியால் குண்டுகளைப் பொழிந்தான். இருபுறமும் பெரும் சேதம் ஏற்பட்டது. கும்பினியார் பின்னடைந்து ஓய்வு எடுத்தனர். போதிய அளவு படை இல்லாததால் பாளைக்காரர் கோட்டையை விட்டு வெளியேறினார். கும்பினியார் கோட்டைக்குள்ளிருந்த நாற்பதினாயிரம் வராகன் பணத்தைக் கைப்பற்றித் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். பாளையக்காரர் டச்சுக்காரர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலப் பிரதியையும் கைப்பற்றினர்.

புல்லர்ட்டன் படையெடுத்து வரும்போது பாஞ்சாலங்குறிச்சிப் படைகள் சொக்கம்பட்டியை முற்றுகையிட்டிருந்தன என்று

தி. நா. சு. குறிப்பிடுகிறார் (ப. 78). ஆனால் தமிழ்வாணன 'முற்றுகை' என்ற சொல்லை நீக்கிவிட்டு, ''சொக்கம்பட்டி யென்னும் மறத்தமிழர் பாளையத்தைக் கொள்ளையடிப்பதற்காகப் புறப்பட்டுப் போயிருந்தனர்'', என்று திரித்துக் கூறுகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் சொக்கம்பட்டி ஜமீந்தார்தான் ''அடிக்கடி திருவாங்கூர் எல்லைக்குள் புகுந்து அந்தப் பிரதேசங்கள் தம்மைச் சார்ந்தவை என்று கூறித் திறைப்பணம் வசூலித்தும், பணம் கொடுக்காவிட்டால் கொள்ளையடித்தும் போவார்'' என்று தி. நா. சு. குறிப்பிடுகிறார் (ப. 59). எனவே சொக்கம் பட்டியைக் கொள்ளையடிக்க ஜெகவீர பாண்டியக் கட்டபொம்மு சென்றார் என்பது ஆதாரமற்ற குற்றச்சாட்டாகும்.

## குற்றச்சாட்டு 3

''அருங்குளம் சுப்பலாபுரத்தைக் கொள்ளையிட்டார்''.

''அருங்குளம், சுப்பலாபுரம் என்ற இரண்டு கிராமங்களும் எட்டையபுரத்தைச் சேர்ந்தவை. இந்த இரண்டு கிராமங்களையும் ஜெகவீரபாண்டியக் கட்டபொம்மு சூறையாடித் தன் வசப்படுத்திக் கொண்டார்'', என்று தமிழ்வாணன குற்றப் பத்திரிகை வாசிக்கிறார் (பக் 256, 257). இதற்கு நாம் ''சான்றுகள் அல்ல என்ற பாடலைச் சான்று காட்டலாமா?'' என்ற ஆறாவது தலைப்பில் முன்னரே பதில் அளித்துள்ளோம்.

## குற்றச்சாட்டு 4

''ஆழ்வார்திருநகரி, திருவைகுண்டம் போன்ற இடங்களில் கட்டபொம்மு புகுந்து சூறையாடினான்'' (ப, 286).

ஆழ்வார்திருநகரி, திருவைகுண்டம் ஆகிய பகுதிகள் வெள்ளையரின் நேரடிப் பார்வையில் இருந்த பகுதிகளாகும். மாக்ஸ்வெல் செய்த சர்வேயை ஏற்றுக் கொள்ளாத கட்டபொம்மு, அரசு நிலங்களைத் தம் ஆட்களைக் கொண்டு உழுது பயிரிட்டார். ''கட்டபொம்மு தம் படைகளை எல்லா ஊர்க் காவலிலும் ஈடுபடுத்தினார். அவரது ஆட்கள் ஆழ்வார்திருநகரி, திருவைகுண்டம் ஆகிய பகுதிகளைத் தாங்களே உழுதனர். எதிர்த்தவர்களைப் பணயக் கைதிகளாகக் கொண்டு சென்றனர்.'' என்று கால்டுவெல் கூறுகிறார் (ப. 163). இந்தச் செய்தியைத் தமிழ்வாணன் வழக்கம் போலத் தம்முடைய பாணியில் ''உழுதுபயிரிட்டனர்'' என்பதைத் திரித்துப் ''புகுந்து சூறையாடினான்'' என்ற சொல் விளையாட்டு நடத்தியுள்ளார்.

குற்றச்சாட்டு 5

''திருவைகுண்டம், ஆழ்வார்திருநகரி கோயில்களைக் கூட விட்டுவைக்காமல் கொள்ளையிட்டான்'' (ப. 286).

இஃது ஆதாரமற்ற குற்றச்சாட்டு மட்டுமல்ல, துளி கூட நெஞ்சில் ஈரமின்றிச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும். பாஞ்சாலங் குறிச்சியார் பரம்பரை பரம்பரையாக இறை வழிபாட்டில் மிகுந்த பயபக்தியுடன் ஈடுபட்டு வந்துள்ளனர். ஜெகவீரபாண்டியக் கட்ட பொம்மு திருச்செந்தூர் முருகக் கடவுளின் உச்சிக்காலப் பூசை முடிந்த பிறகே உணவு உண்ணும் வழக்கமுடையவர். பூசை முடிந்ததை அறிய, திருச்செந்தூரிலிருந்து பாஞ்சாலங்குறிச்சி வரை மணி மண்டபங்களை அமைத்திருந்தார். இதன் எச்சம் இன்றும் ஆத்தூரில் உள்ளது. திங்கட்கிழமை தோறும் திருச் செந்தூரிலிருந்து இலைவிபூதி கொண்டுவரக் குதிரைகளை ஏற் பாடு செய்திருந்தார். ஆலயத்தில் தம் பெயரில் கட்டளை நிறுவித் திருவிழாக்களை நடத்தியுள்ளார். கட்டபொம்மு வழிபாடு செய்த முருகன் திருஉரு இன்றும் திருச்செந்தூர் ஆலயத்தில் உள்ளது.

ஜெகவீரபாண்டியக் கட்டபொம்மு செய்துள்ள பல்வேறு அறப் பணிகளுக்கான சான்றுகள் உள்ளன. தஞ்சைப் பல்கலைக் கழகக் கல்வெட்டுத் துறைப் பேராசிரியர் இராசு திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள பல செப்பேடுகளைப் பார்வையிட்டுள்ளார். அவற்றுள் ஒன்று ஜெகவீரபாண்டியக் கட்டபொம்முவின் செப்பே டாகும். அதில் ''28—1—1792 ஆம் நாள் கட்டபொம்மன் ஆட்சிக் குட்பட்ட உம்பளக் கிராமம், சீவிதக் கிராமம் சிறுபாட்டுக் கிராமம் அமரக் கிராமம் ஆகியவைகளிலுள்ள கவித்துக் கட்டிய ஓட்டு வீட்டில் வசிப்பவர்கள் ஆண்டுதோறும் குறுணி தானியம் திருந்செந்தூர் முருகன் கோயிலுக்கு அளிக்க வேண்டும் என்று'' குறிக்கப் பட்டுள்ளது. செப்பேட்டின் முகப்பில் முருகப்பெருமான் மயில் வாகனத்தில் அமர்ந்துள்ளது போன்று ஓவியம் தீட்டப்பட்டுள்ளது (பின்னிணைப்பு-5). இது போலவே திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலுக்குச் செய்த அறக்கட்டளை பற்றிய செப்பேடு நெல்லையப்பர் கோயிலில் உள்ளது.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் வடமேற்கு மூலையில் தெப்பக்குளம் அருகே சிவன் கோயிலும், தெற்கே சுப்பிரமணிய சுவாமி கோயிலும், மத்தியில் சக்கதேவி ஆலயமும் இருந்ததாகப் ''பாஞ்சாலங்குறிச்சி சரித்திரம்'' என்ற நூலில் தேவதாஸ் நாயுடு குறிப்பிடுகிறார். (பக் 34-35). பகவந்தனை சிவன் கோயில் பாஞ்சா

லங்குறிச்சியார் கட்டியது. திருச்செந்தூர் ஆலயத்தில் ஒன்பதாம் திருநாள் கட்டளை கட்டபொம்முவிற்கு உரியது. திருநெல்வேலி, திருக்குற்றாலம், அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலுள்ள ஆலயங் களில் கட்டபொம்மு செய்த அறப்பணிகளைக் கதைப்பாடல்கள் கூறுகின்றன.

தெய்வம் குடியிருக்கும் ஆலயத்தின் மீது கட்டபொம்மு பரம் பரையினர் கொண்டிருந்த மரியாதைக்கு மற்றுமொரு வியப்பை நல்கும் சான்றினைக் கூறலாம். ஊமைத்துரை பாளையங் கோட்டைச் சிறையிலிருந்து வெளியே வந்ததும் ஆங்கிலேயர் பகுதி களை எல்லாம் தாக்கிப் பிடித்தார், திருவைகுண்டத்தைத் தாக்கச் சென்ற போது, ஆங்கிலப் படை வீரர்கள் அங்கிருந்த திருமால் ஆலயத்துக்குள் புகுந்து கொண்டனர். ஊமைத்துரை கோயிலை முற்றுகையிட்டார். அவர் நினைத்திருந்தால் கோயில் கதவை உடைத்துக் குறுகிய நேரத்தில் எதிரிகளைக் கைது செய்திருக்க முடியும். ஆனால் ஊமைத்துரை என்ன செய்தார்? கோயிலின் சுற்றுச் சுவரின் நான்கு திசைகளிலும் மேடையாக மண்ணைக் குவித்தார் அதன் வழியாக ஏறிக் கோயிலுக்குள் குதிக்கத் திட்ட மிட்டார். சுற்றிலும் மணலைக் குவிப்பதற்கு ஏற்பட்ட கால இடை வெளியில் பாளையங்கோட்டையிலிருந்து துணைப்படை வந்து கோட்டைக்குள் இருந்தவர்களை அழைத்துச் சென்றுவிட்டது. ஊமைத்துரை, சுவரையோ, கதவையோ உடைக்கும் செயலில் ஈடுபடாமல் மண்ணைக் குவித்ததன் காரணத்தை தி. நா. சு. ''தங்களுக்குப் புனிதமான கோயிலாதலால் அவர்கள் உடைத்து இடிக்க விரும்பவில்லை'' என்று குறிப்பிடுகிறார் (ப. 198). இதுவே உண்மை.

வரலாற்றில் நாம் அறியக்கூடிய பொல்லாப்பாண்டியன் முதல் கடைசியாக ஆட்சி புரிந்த ஊமைத்துரை முடிய, பாஞ்சாலங்குறிச்சி யார் அனைவருமே ஆலயங்களை மதித்து வந்ததைத் தான் நாம் அறிய முடிகிறது. போரைக் காரணமாகக் கொண்டு கூட ஆலயத் திற்கு எந்த இடையூறும் செய்யாத, உயர்ந்த பண்புடையவர் களாகவே விளங்கி உள்ளனர். ஆலயங்கள் மீது பெரும் மதிப்புக் கொண்ட கட்டபொம்மு பரம்பரையினரைத் தமிழ்வாணன் ''கோயில் களைக் கூட விட்டு வைக்காமல் கொள்ளையடித்தனர்'' என்று கூறுவது நியாயமற்ற செயலாகும். இப்படிப்பட்ட அபாண்டமான பழியைக் கட்டபொம்மு மீது சுமத்திய தமிழ்வாணனை, திருவைகுண்டம், ஆழ்வார்திருநகரி ஆலயங்களில் எழுந்தருளி உள்ள தெய்வம் கூட மன்னிக்காது.

## குற்றச்சாட்டு 6

''நெசவாளர் வயிற்றிலடித்தார்.''

> ''கும்பினியர் நெசவாளர்களுக்குப் பாளையக்காரர் மூலம் பணம் கொடுப்பர். கட்டபொம்மன் அதில் பாதியை எடுத்துக்கொண்டு நெசவாளர் வயிற்றில் அடித்து விடுவான்'' (ப. 297)

என்று தமிழ்வாணன் குற்றம்சாட்டுகிறார். இந்தப் பொய்க் குற்றச்சாட்டை விவாதிக்கும் முன் நாம் ஒரு வரலாற்றை அறிந்து கொள்ளவேண்டும். இந்தியாவை, அதிலும் பருத்தி அதிகமாக விளையும் தென்னிந்தியாவைத் தங்களது வியாபாரச் சந்தையாக ஆக்கிக் கொள்வதில் மேற்கு நாடுகள் போட்டி போட்டு வந்தன. கர்நாடக நவாப்பின் ஆதரவோடு ஆங்கிலேயர்கள் தங்கள் வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். இவர்களைத் தொடர்ந்து பிரெஞ்சுக்காரர்களும், டச்சுக்காரர்களும் தென்னிந்தியக் கடற்கரையில் வியாபாரத்திற்காக முகாமிடத் தொடங்கினர். இந்த வியாபாரிகள் தென்னிந்திய அரசியலில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இவர்களுக்கு ஆதரவாக இங்குள்ள பாளையக்காரர்களும் பிரிந்து நின்றனர். சந்தாசாகிப்பிற்கு டூப்ளே நவாப்புப் பட்டம் சூட்டினார். இவருக்குப் போட்டியாக ஆங்கிலேயர் முகமது அலியை நவாப்பாக அறிவித்தனர். புலித்தேவருள்ளிட்ட மேற்குப் பாளையக்காரர்கள் பிரெஞ்சுக்காரர்களை ஆதரித்தனர். தொண்டைமான், எட்டையபுரத்தார் போன்றோர் ஆங்கிலேயரை ஆதரித்தனர். பாஞ்சாலங்குறிச்சியார் இரு அணியிலும் சேராமல் டச்சுக்காரர்களோடு உடன்பாடு கொண்டிருந்தார்.

பாஞ்சாலங்குறிச்சியார் டச்சுக்காரர்களை மதித்தற்குக் காரணமும் உண்டு. ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்களைப் போல டச்சுக்காரர்கள் தென்னாட்டு அரசியலில் அதிகமாகத் தலையிடவில்லை. அவர்கள் பாளையக்காரர்களின் உரிமையை மதித்து நடந்தனர். எனவேதான் பாஞ்சாலங்குறிச்சியார், தென்னாட்டில் மிகப்பெரிய சக்திகளாக விளங்கிய கும்பினி, பிரெஞ்சு ஆகிய அணிகளில் சேராமல் டச்சுக்காரர்களுக்கு ஆதரவு அளித்தனர். டச்சுக்காரர்களோடு ஒப்பந்தமும் செய்து கொண்டனர்.

டச்சுக்காரர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தங்கள் பகுதியில் வாழும் நெசவாளர்களை ஆங்கில வியாபாரிகளுக்குத் துணி நெய்து கொடுக்கக் கூடாது. என்று கட்ட பொம்மு தடை செய்தார். பொல்லாப்பாண்டியர் காலம் முதற் கொண்டே பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்கள் கும்பினியாரிடம் வெறுப்புக் கொண்டிருந்தனர் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். ஆங்கில வியாபாரிகளுக்குத் துணி நெய்து கொடுப்பதைக் கட்டபொம்மு தடை செய்ததைத் தி. நா, சு. ' திருநெல்வேலியி லிருந்த கும்பினி வர்த்தக அதிகாரியும் வேறு பலரும் கட்டபொம்மு மீது குறை கூறிவந்தனர். கும்பினிக்குத் துணி நெய்து கொடுத்து வந்தவர்களைப் பாளையக்காரர் கலைத்து வந்தனராம்'' என்று கூறுகிறார் (ப.100). தறிநெய்பவர்களுக்குக் கும்பினியார் முன்பணம் கொடுத்திருந்தனர். இந்த முன்பணத்தைத் துணி நெய்யாத நிலை யில் திரும்பப் பெறுவது இயலாது. இதனால் ஆங்கில வியாபாரி களுக்கு மிகுந்த பொருள் இழப்பு ஏற்படும் நிலை உருவாகியது. இதனை ''நெசவாளர்களுக்குக் கொடுத்த முன்பணத்திற்கும் கூட ஆபத்து வரும்'' என்று ஜாக்சன் கவர்னருக்கு எழுதியதாகத் தி. நா. சு. குறிப்பிடுகிறார் (ப. 101). இதைத்தான் தமிழ்வாணன் தம் வழக்கமான பாணியில் ''கும்பினியர் நெசவாளர்களுக்குக் கொடுத்த பணத்தில் பாதியைக் கட்டபொம்மு எடுத்துக்கொண்டு, நெசவாளர் வயிற்றில் அடித்து விடுவான்'' என்று திரித்து எழுதி யுள்ளார்.

ஆனால் உண்மையில் நெசவாளர்களைச் சுரண்டி அவர்கள் வயிற்றிலடித்தது ஆங்கிலேய வர்த்தகப் பிரதிநிதிகள் தாம். இதைக் கும்பினிக்கு நெசவு செய்து வந்த நெசவாளர்கள் பற்றி எழுதிய டாட்வெல் (Dodwell) குறிப்பிட்டுள்ளார். இது பற்றி அவர் தம் நூலில், ''கும்பினியாரது ஒப்பந்தத் தறிகள் ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே இருந்தன. பொதுவாக, நெசவாளர்கள் அப்பொழுது கும்பினியாரிடம் பணி செய்வதற்கு விருப்பம் இல்லாத வர்களாக இருந்தனர். காரணம் அவர்கள் கும்பினியாரது தொழில் மையங்களில் பணியாற்றுமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். மேலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கூலிக்குக் கூடுதலான துணி யை நெய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. அவர்கள் பெற்ற கூலியில் ஒரு பீஸ் துணிக்கு நாலணா வீதம் தலைமை நெசவாளி பிடித்துக்கொள்வார். இதைப் போலவே நெசவாளர்களுக்கு வழங்கப்படும் முன் பணத்திலும் ஒரு பகுதியைப் பிடித்துக் கொள்வர். அத்துடன் உற்பத்தி செய்த துணியின் தரத்தைக் குறைவாக மதிப்பிட்டுக் குறைவான கூலி கொடுக்கும்

முறையும் இருந்து வந்தது. இவற்றிற்கெல்லாம் மேலாக அடிக்கடி அதிகாரிகளது இடையீடும் தொந்தரவும் இருந்து வந்தன'' என்று எழுதியுள்ளார் (எஸ். எம். கமால். ப. 65).

ஆங்கில நிர்வாகம் தென்னகம் முழுவதுமுள்ள நெசவாளர்களைக் கொத்தடிமைகளாக்கி நாடெங்கும் கம்பெனி ஒப்பந்தத் தறிகள் மட்டுமே இயங்கும் நிலையை உருவாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. இதை எதிர்ப்பவர்களை அரசு விரோதச் செயலில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தி ஒடுக்கவும் உறுதிகொண்டது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மைக்கேல் என்ற வர்த்தகப் பிரதிநிதி நியமிக்கப்பட்டார் இவர் செயல் திட்டத்தோடு முதலில் இராமநாதபுரம் சென்றார். மன்னரைச் சந்தித்துக் கவர்னரின் முடிவைத் தெரிவித்தார். அதன்படி மன்னரின் ஆட்சிக்குட்பட்ட நெசவாளர்கள் ஆங்கிலேயருக்கு மட்டுமே நெசவு செய்ய வேண்டுமென்று மைக்கேல் நிர்ப்பந்தம் செய்தார். நிர்ப்பந்தித்தார் என்பதைவிட மிரட்டினார் என்றே சொல்ல வேண்டும். மன்னர் இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தார். இதன் விளைவாக வெள்ளையர் இராமநாதபுரத்தின் மீது படையெடுத்தனர். சேதுபதியின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. மன்னரைக் கைதுசெய்து திருச்சியில் சிறை வைத்தனர். மன்னர் முத்துராமலிங்க சேதுபதி தம்முடைய நாற்பத்தெட்டு ஆண்டு கால வாழ்க்கையில் இருபத்து நான்கு ஆண்டுகள் சிறையில் உள்ளம் வாடி உயிர் துறந்தார்.

சேதுபதி மன்னரைப் போலவே கட்டபொம்முவும் வெள்ளையர் வர்த்தகத் திட்டத்தை மறுத்ததல்லாமல் அவர்களுக்குத் துணி நெய்து கொடுக்கக் கூடாது என்று தடையும் விதித்தார். வெள்ளையர் அரசு கட்டபொம்முவைத் தூக்கிலிட்டதற்கு இதுவும் முக்கிய காரணமாகும். இந்த வரலாற்று உண்மைகளை எல்லாம் உணராமல் நெசவாளர் பிரச்சினை குறித்து எதுவும் தெரியாமல், ''கட்டபொம்மு நெசவாளர் வயிற்றிலடித்தார்'' என்று கூறும் தமிழ்வாணனை என்ன சொல்வது! நெசவு குறித்த வரலாறுகளைப் பார்க்கும்போது நெசவாளர் வயிற்றிலடித்தது வெள்ளையரே என்பது தெளிவாகிறது. கட்டபொம்மு நெசவாளர் வயிற்றிலடித்தார் என்று கூறுவது கட்டுக்கதை. கட்டபொம்மு நெசவாளர் வயிற்றிலடிக்கவில்லை. நெசவாளர்களைக் கொள்ளையடித்த வெள்ளையரின் வயிற்றிலடித்தார் என்பதுதான் உண்மை. கட்டபொம்மு மீது தமிழ்வாணன் சுமத்தி இருக்கும் அத்தனைக் குற்றச்சாட்டுகளும் ஆதாரமற்றவை, திரித்துச் சொல்லப்பட்டவை' உள்நோக்கம் கொண்டவை என்பதை இதன் மூலம் மேலும் அறியலாம்.

## 7) தமிழ்வாணன் சொல்லும் பழமொழி

கட்டபொம்முவைப் பற்றித் தமிழ்வாணன் இரண்டு பழமொழி களைக் கூறுகிறார். அவை ; 1) ''பாஞ்சாலங்குறிச்சியான் மிஞ்சியையும் மிஞ்ச விட மாட்டான். 2) ''காதறுப்பான் கட்ட பொம்மு'' (ப. 286).

இந்த இரண்டு பழமொழிகளையும் தமிழ்வாணன் ஏதேனும் நூலில் படித்தாரா? அல்லது யாராவது சொல்லக் கேட்டாரா? நூலில் படித்திருந்தால் அந்நூலைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். தமிழ்வாணன் அவ்வாறு குறிப்பிடவில்லை. சொல்லக் கேட்டிருந் தால் சொல்லியவர் யார்? அவரது முகவரி என்ன? எந்த நாளில் பேட்டி கண்டார்? என்ற விபரங்களை எல்லாம் சொல்ல வேண்டும் அப்படிச் சொன்னால் தானே அது அறிவியல் அணுகுமுறையுடன் கூடிய ஆராய்ச்சியாகும். எந்த ஆதாரமும் இல்லாமல் தாமாக எதுகை மோனையில் தம்முடைய விருப்பம் போல் சொற்களை உருவாக்கினால் அது பழமொழி ஆகிவிடுமா?

கட்டபொம்முவைப் பற்றி இரண்டு பழமொழிகள் சொல்லப் படுகின்றன. 1) ''விளைஞ்சா கரிசல் விளையணும், கொடுத்தா கட்டபொம்மு கொடுக்கணும்''. இந்தப் பழமொழி பாஞ்சா லங்குறிச்சிப் பகுதிகளில் வழங்கி வருகிறது. ஜெகவீரபாண்டியனார் தம்முடைய பாஞ்சாலங்குறிச்சி வீரசரிதம் என்ற நூலிலும் இதைக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பழமொழி பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரின் கொடைச் சிறப்பை விளக்குகிறது.

2) ''தொண்டைக் குழியில் சீவன் உள்ள மட்டும் தோக்குலவார் குலம் தோற்காது''. இந்தப் பழமொழியும் வழக்கில் உள்ளது. நாட்டுப்புறக் கதைப்பாடல்களிலும் காணப்படுகிறது (க. பொ. கூ. ப. 33). கடைசித் துளி இரத்தம் உள்ளவரை எதிரியோடு போராடும் கம்பளத்தாரின் வீரஉணர்வை இந்தப் பழமொழி விளக்குகிறது.

தமிழ்வாணன் கூறும் பழமொழிகள் வழக்கில் இல்லை என் பதைக் கள ஆய்வில் உணர முடிந்தது. எந்த நூல்களிலும் காண முடியவில்லை. ஆகவே தமிழ்வாணன் கூறும் இரண்டு பழமொழி களும் பழமொழிகள் அல்ல, அவரே தன் தகுதிப்படி உருவாக்கிய இழி மொழிகளாகும்.

தென்னாட்டின் மீது படையெடுத்து வந்த மாலிக்கபூர், 612 யானைகளையும் 20,000 குதிரைகளையும், 96000 மணங்கு பொன்னும் முத்தும் அணிகலன்களும் அடங்கிய பெட்டிகளையும்

மதுரையிலிருந்து கொள்ளை யடித்துச் சென்றான். காஞ்சிபுரம், இராமேஸ்வரம் ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களைக் கூட அவன் விட்டு வைக்கவில்லை. அப்படிப்பட்ட மாலிக்கபூரைக்கூடக் ''கொள்ளைக்காரன் மாலிக்கபூர்'' என்று தலைப்பிட்டு யாரும் எழுதவில்லை. இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும் தமிழ்வாணன் கூட ''மாலிக்கபூர் கொண்டு போனான்'' (ப.43) தான் என்று கூறுகிறார். ''கொள்ளைக்காரன்'' என்று குறிப்பிடவில்லை. ஆனால், பானர்மேன் விசாரணையில் எவ்விதக் கொள்ளைக் குற்றச்சாட்டிற்கும் ஆளாகாத, இந்த மண்ணில் பிறந்து வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து, உரிமையைக்காக்க உயிர்துறந்த கட்டபொம்மு மீது இல்லாத பழியைச் சுமத்தி ''கொள்ளைக்காரன்'' என்று தலைப்பிட்டுத் தமிழ்வாணன் நூல் எழுதியது அநாகரிகமான செயலாகும்.

---

## முடிவுரை :

எழுத்தாளர்களே ஒரு சமுதாயத்தின் எண்ணச் சிறகுகளை இயக்கிச் செயலில் இறங்கத் தூண்டுபவர்கள். பிரெஞ்சுப் புரட்சிக்கு ஓர் உருவமும், உத்வேகமும் தந்தவர்கள் வோல்தேர், ரூஸ்ஸோ, திதெரோ முதலிய பிரெஞ்சு எழுத்தாளர்களே யாவர். எனவே ஓர் எழுத்தாளனின் பேனாவிலிருந்து உண்மையும், நியாயமுமே வெளிப்பட வேண்டியது அவசியமாகும். நீதி தேவதையின் துலாக்கோலாக எழுத்தாளர் விளங்கவேண்டும். அவர்களது எழுத்து மனித நேயத்தையும், சமூக நீதியையும் வளர்க்க வேண்டும்.

வீரபாண்டியக் கட்டபொம்மு தம் வாழ்வில் சுயமரியாதையையும், உரிமையையும் விட்டுக்கொடுக்காமல், ஆதிக்கச் சக்திகளை எதிர்த்து வீரவாழ்வு வாழ்ந்தார். கட்டபொம்மு வரலாற்றை எழுதுபவர்கள் இந்தச் செய்திகள் மக்களை எட்டும் வகையில் எழுதவேண்டும். இதன் மூலம் கொத்தடிமைச் சிந்தனையில் இருந்து விடுபட்டு, நியாயம் நேர்மைகளுக்காகக் குரலையும், கரத்தையும் உயர்த்தும் வீர உணர்வுடைய சமுதாயத்தை உருவாக்க இயலும். இவ்வாறில்லாமல், பொய்களையும், பழிசுமத்தும் கற்பனைக் கதைகளையும் வரலாற்றில் புகுத்தி இன வேறுபாட்டைக் கிளறிவிடும் சொற்களை அள்ளித் தெளித்து எழுதுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன? இத்தகைய நூல்கள் மனித நேயத்தைக் கொன்று, சமுதாயத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லுமே தவிர இதனால் வேறு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. இதை தமிழ்வாணனும் சிரஞ்சீவியும் ஏன் சிந்திக்கவில்லை என்பது தான் நமக்குப் புரியவில்லை.

கட்டபொம்மு மீது தமிழ்வாணன் கூட்டத்தார் கணக்கற்ற கண்டனக் கணைகளை ஏவினாலும், அவர்களால் மக்கள் கட்ட பொம்மு மீது கொண்டிருந்த ஈடுபாட்டைத் தகர்க்க முடியவில்லை. பரம்பரை பரம்பரையாக வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து, வேரோடு அழிந்துபோன அந்த இலட்சிய வீரர்களின் பூத உடல்கள் மட்டுமே கண்ணிற்கு மறைந்தன. அவர்கள் புகழ் நிலைத்து நிற்கிறது. ஏனென்றால், லட்சியத்திற்காகப் போராடும் வீரர்கள் எல்லாம் புதைக்கப் படுவதில்லை, விதைக்கப் படுகிறார்கள். இன்றும் மனித சமுதாயத்தின் ஒவ்வொரு போராட்டத்திலும் பல கட்டபொம்முகளைக் காணமுடிகிறது. அதே நேரம் எட்டப்பர் களும் இருந்து கொண்டே இருக்கின்றனர். கட்டபொம்மு என்ற சொல் புகழுக்குரிய பண்பின் உருவமாக இந்தச் சமுதாயத்தில் நிலைத்து நிற்கிறது. மனித சமுகம் உள்ளளவும் அது நிலைத்து நிற்கும். எங்கெல்லாம் அடக்குமுறையும், ஆதிக்க வெறியும் தலைவிரித்து ஆடுகிறதோ. அங்கெல்லாம் கட்டபொம்முக்கள் தோன்றிக்கொண்டே இருப்பார்கள்.

அன்று பல பாளையக்காரர்கள் மானம் சிறிதென்று எண்ணி, வாழ்வு பெரிதென்று கொண்டு, ஆங்கில அரசின் ஆணைக்கு அடிபணிந்து, அயுதங்களை ஒப்படைத்து, கோட்டைகளை இடித்து நடைப்பிணங்களாக வாழ்ந்தனர். ஆனால் கட்டபொம்முவும் ஊமைத்துரையும் உரிமையை இழந்து அடிமையாய் வாழ மறுத்து எதிர்த்துப் போரிட்டு வீரமரணத்தைத் தழுவினர்.

வெள்ளையர் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தரைமட்ட மாக்கினர். ஆனால், இன்று மண்ணில் புதைந்த பாஞ்சை நகர் மறுபடியும் முளைத்து நிற்பதைப் பார்க்கிறோம். கோட்டை, கொத்தளம், கொலுமண்டபம், சக்கதேவி ஆலயம் அனைத்தும் மீண்டும் நிமிர்ந்து எழுந்து, மறைந்த மாவீரர்களின் புகழைப் பறை சாற்றிக் கொண்டு இருகின்றன வெள்ளையர் பாஞ்சாலங் குறிச்சி என்ற பெயரையே தமிழகத்தின் வரைபடத்திலிருந்து அகற்றினர். இன்று தமிழகத்தின் ஒரு மாவட்டத்திற்கே கட்ட பொம்முவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சித்திரை மாதம் கடைசி வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான மக்கள் கோட்டையில் கூடித் திருவிழா நடத்துகின்றனர். நாள்தோறும் மக்கள் குடும்பத்தோடு சென்று அந்த மாவீரர்களின் தியாகத்தை யும், வீர வரலாற்றையும் நினைவு கூர்கின்றனர்.

மனிதகுலத்தார் அனைவருக்கும் சாதிக்கும், மதத்திற்கும், இனத்திற்கும் அப்பாலும் ஒரு வாழ்க்கை இருக்கிறது. அது அரசியல் நீதிக்கும், சமூக நீதிக்குமான இலட்சியப் போராட்ட மாகும். அந்தப் பாதையில் எடுத்த அடியும், பிடித்த கொடியும்,

வெடித்த குரலுமாய் நின்று இன்னுயிர் நீத்த தியாக சீலர்களை, அவர்களது நாடு என்றும் மறக்காது, மறக்காது. ஏனென்றால், ஒரு நாட்டின் வரலாறு. இலட்சிய வீரர்கள் நெஞ்சில் ஏந்திய உயர்ந்த எண்ணங்களாலேயே உருவாக்கப்படுகின்றது. இவர்கள் வாழ்ந்த வாழ்வே அர்த்தமுள்ள, அழியாப் புகழுடைய வாழ்வாகும். பாஞ்சாலங்குறிச்சியார் இத்தகைய வாழ்வே வாழ்ந்தனர்.

மண்ணில் இன்பங்களை விரும்பாது சுதந்திர மாண்பினை உயிரென மதித்த கட்டபொம்மு, ஊமைத்துரை ஆகியோர் பண்பினை இளைய தலைமுறைகளுக்கு உணர்த்தி, அதன்மூலம் நியாயங்களுக்காகக் கரத்தையும் குரலையும் உயர்த்தும் உணர்வைச் சமுகத்தில் வளர்ப்பதே நமது கடமையாகும்.

நன்மையும் அறிவும்
எத்திசைத்தாயினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்
அச்சமொன்றில்லை...

— பாரதி

## பின்னிணைப்பு — 1

பாஞ்சாலங்குறிச்சியில் நடந்த இரண்டாவது போரைப்பற்றி, அப்போரில் கலந்துகொண்ட கர்னல் வெல்ஷ் (Col. Welsh) எழுதியதன் ஒரு பகுதி.

The 1st of April was ushered in with the painful re- col ection that many of our late gay and cheerful companians were lying at the foot of breach unburied and a flag of truce was consequently sent to the fort, to entreat permission to remove and intern our dead. This was kindly and unconditionally accorded and we then collected the disfigured and gory bodies and buried them in the evening, with military honours. The enemy, setting us a bright example of humanity, made not The smallest attempt to disturb us and we enjoyed a good night's rest, that of the preceding having been anything but refreshing.

## பின்னிணைப்பு - 2

(கட்டபொம்மு பேட்டிகாணச் சென்ற முறை இது "கட்ட பொம்மன் வரலாறு" என்ற கதைப்பாடலில் இடம்பெறும் பகுதி பக் - 15 – 16)

ஆனை பரிசேனை ஒட்டகையும் அதின்
மேலாகப் பேரிகை தான் முழங்க
மானா பரனான கட்டபொம் முதுரை
வாரசிங் காரத்தைப் பாருங்கடி!
தம்பூரு வீணை முழங்கிடவே வெண்
சாமரைப் போடத் தமிழ்ப்பாட
கம்பீர மாகவே கட்டியங் கூறப்பராக்கு
எச்சரிக்கை யென்று தான் முழங்க
மங்கையர் மங்களம் பாடிவர வெகு
சிங்கார நாட்டிய மாடிவர
சங்கீத மேளங்க ளுந்தொனிக்க நல்ல
நாக சுரங்களுந் தான் முழங்க
வல்லையம் நேரிசம் வேலைக்காரர் சிலர்
வரிசை யாகவே சூழ்ந்துவர
உல்லாச மாகவே கம்பளச் சேருவை
யெல்லோருங் கூடி வழிநடந்து
தாழை மடல்களும் பிச்சி யிருவாட்சி
சாந்து சவ்வாது கமகமென
பாளையத்தூடே தான்ஊமத் துரைவீர
பாண்டியன் வாரதைப் பாருங்கடி!
சாமி பராக் கெச்செரிக்கை யென்றுசொல்லச்
சந்தி வட்டக்குடை முன்னடக்க
பூமிதனில் சுத்த வீரசூரன் கட்ட
பொம்முதுரை வாரான் பாருங்கடி!
பாஞ்சால தேசத் துரைமார்கள் நல்ல
பாருவைக் கேத்த ஒயில்க்காரர்
பூஞ்சிட்டித் துப்பட்டா மேல்போட்டு அவன்
போறசிங் காரத்தைப் பாருங்கடி!

# முன்னாள் இராணுவ அதிகாரி கேப்டன் ராவ் எழுதிய ஆய்வுக் கட்டுரையின் பகுதி

Getti Bomma Naik said; I have paid money tributes to no one so far. It is unthinkable that the poligar of Panjalakurichi, should ever pay a tribute to anyone, however, exalted he may be. So I refused to pay it.

"No one can accuse me of discourtesy, friend or foe Such officers of the Company sircar who called on me in the course of their official duties and conferred with me, were treated with utmost courtesy. They will bear testimony if they are asked to do so. If one among them was murdered in Panjalakurichi by an assassin, I should not be held responsible for the crime.

"I resented Lushington durai's order asking me to come over to Tirunelveli and wait on him at his office; I was not a personal servant of the durai.

"Some of my brother poligars including that of Sivagiri sought my assistance to quell the uprising in their poliems. Of their ryots and tenants; I went to their help on their invitation; the Company sircar never bothered about them; nor did they help the poligars.

"I admit that what my manager Danapati Pillai did at Srivaikundam was wrong; he had no business to loot the Company's grain stores there but there was a big drought in, that village; the rains had failed; there was no grain available to anyone; so he appears to have forced open the grain store and allowed the people to take away the grain; he had asked my pardon for having done this without my permission and sought my protection for fear of being punished by the Company. I gave him protection. Getti Bomma Naik could not betray a man who had sought his protection. Subsequently, I offered to pay a handsome price for the grain that was said to have been

looated. But this offer was not accepted by the Company's Servants.

"It was you, great durais of the Company, who first laid siege to my beloved Panjalakurichi. What do you expect a man of my calibre and self-respect to do? Surrender and accept your terms? No.

"Later, while my dear fortress lay under your siege with your field pieces directed against its walls. I escaped by a secret passage with some of my loyal and faithful attendants and took the road to Trichinopoly to personally acquaint the Company's authority there, of the developments. You spread a vile rumour that I had fled after leaving my people to their fate. You set a price on my head for my being captured alive. That allurement was enough to the Tondaiman at Puducottah, the poligars at Ettayapuram] and others to help in my being betrayed and captured. Meanwhile, you great durais, robbed Panjala kurichi of everything you and your minions could lay their hands on. Again, you durais, were at the head of the forces who indulged in this looting and now, you great durais are my accusers. You want me to plead my case. What is there to plead? This is my fate. I accept it. Deal with me as you please".

— Capt. R. L. Rau (Retd)
"Court Martial of a Poligar Chief"
Imprint, June, 1981. PP. 19—22

## பின்னிணைப்பு — 4

# கயத்தாற்று விசாரணையின் போது கட்ட பொம்மு நடவடிக்கை குறித்து மேஜர் பானர்மேன் சென்னைக்கு எழுதிய கடிதம்

"It may not be amiss here to observe, that the manner and behaviour of the Polegar, during the whole time of his being before those who were assembled yester day at the examination which took place, was undaunted and supercilious.

He frequently eyed the Etteapuram Polegar who had been so active in attempting to secure his person, and the polegar of Sivagiri with an appearance of indignant scorn; and when he went out to be executed he walked with a firm and daring air and cast looks of sullen contempt on the Polegars to his right and left as he passed.

It was reported to me, that on his way to the place of execution he expressed some anxiety for his dumb brother alone: and said, when he reached the foot of the tree, on which he was hanged, that he then regretted having left his fort, in the defence of which it would have been better for him to have died:

Camp at Kytar.

17th Oct. 1799. (Signed) JOHN BANNERMAN.

## பின்னிணைப்பு - 5

### கட்டபொம்மு செப்பேடு

(தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டியல் துறை இணைப் பேராசிரியர், புலவர், திரு. செ. இராசு அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள 70 செப்பேடுகளைப் படியெடுத்து ஆய்வு செய்தபோது அவற்றில் பாஞ்சாலங்குறிச்சியாரின் செப்பேடு ஒன்றும் இருப்பதைக் கண்டுபிடித்தார். இந்த ஆய்விற்காக திரு. இராசு தந்துதவிய செப்பேட்டுப்படியின் உள்ளடக்கம், செப்பேட்டில் உள்ளவாறே திருத்தம் செய்யாமல் கொடுக்கப்பட்டுள்ளது.

கி. பி. 1779 ஆம் ஆண்டு தைமாதம் 28ஆம் தேதி இந்தச் செப்பேடு கட்டபொம்மனின் தந்தையாரால் கொடுக்கப் பட்டுள்ளது.)

### பட்டயச்செய்தி

உ சுவத்திரி சாலிவசகன சகாற்றம் 1700க்கு மே
ல்ச் செல்லாநின்ற கொல்லம் 954 ஷ விளம்பி ஷ
உத்தராயணமான 28 தேதி குருவாரமும் பூறுவபட்
சத்துத் துவாதெசியும் மாகேந்திரநாம யோகம் பால
வாகறணமும் சுபயோக சுபகரணமும் பெத்த மிருகசீ
ருச நட்செத்திரத்தில் நாள்ச் செய்த தான சாதனப்
பட்டயமாவது குடநாட்டுத் திருச்செந்தூரான் தி
ரிபுவன மகாதேவி சதுர்வேதமங்கலம் நா
யனாரிளைய நாயினாரான திருட்டித் திதி சங்க
ராத்திகோ பாவனுக்கிரக பஞ்ச சுத்த
வலிய வீரமயில் வாகன குக்குடத் துவஜ
சுரான சுராயிப சகல சத்தியாதமக சுருப
வல்லி தேவநாயகி சமேத சுப்பிறமணிய
சுவாமி சன்னிய்தானத்தில்த் திருப்ப
ணிக்கு ஆச்சந்திராக்கம் ஆகத் தான
சாதனப் பட்டையமாவது பாஞ்சை
நகராதிபன் சக்கதேவி அனுகூலன்
துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலன் கெ
ச மன்னியர் கோளரி மனு மன்னியர்

V211:51547 N92

சற்ப்ப கெருடன் ரணமுக சுத்த வீரன்
அருண நயமுக சந்திரோதய னியலிசை
நாடக முத்தமிழாதிபன் கவி சாருவ பூம
ன் பச்சைக்குடை பூச்சங்கிறவாளக்கு
டைக் கதிபன் தண்டுவார் முண்கின் தென்
னாட்டு ராயன் சேவல்க் கொடி ரிசபக் கொடி அனு
மக்கொடிக் கெருடக் கொடி கதிபன்ஜ் செந்
தினிலுகந்த சிவகந்தனடி மறவாத அடியே
ன் செகவீர ராமச் செகவீர பாண்டியக் கட்ட
பொம்ம நாயக்கரோம் தான சாதனமாகத்
தாம்புர சாதனப் பட்டைய மெளுதிக்
கொடுத்தபடி தான சாதமாகத் தாம்
புர சாதனப் பட்டையமாவது யென்னு
டைய ஆதிக்கத்தில் சேர்ந்தக் கிறாமம்
உண்பளக் கிறாமஞ் சீவிதக் கிறாமஞ் சிறு
பாட்டுக் கிறாமம் அமரக் கிறாமம் முதல் ஆகிய
நத்துக்கும் சகல சாதிக்கும் கவிள்த்திக்
கட்டின கிரக ஒன்றுக்கு வருசாசலங் குறு
னித் தான்னிய வீதம் கோவில்த் தலத்தா
ர் மனுசர் வசம் யீரம் பதர் தூத்தி
அளந்து கொடுத்து வருவோமாக
வும் யிந்தத் தர்மம் ஆச்சந்திராக்க
ம் சந்ததிப் பிரதி வசம் ஆதிக்கத்தில்ப்
பரிபாலனம் பண்ணிக் கொண்டு வருவோ
மாகவும் யிந்தத் தற்மத்துக்கு வாக்குச்ச
காயம் சரீர சகாயம் அற்த்த சகாயம்
பண்ணின பேர் சாலோக சாமீப சாரூப
சாயுச்ச பதம் பெறுவாராகவும் யிப்படி
க்குச் சம்மதித்துத் தான சாதனமாக யி
ந்தத் தாம்பர சாதன பட்டையம் சுவாமி
சுப்பிறமணிய சாமி சன்னிய தானத்
தில்த் திருப்பணிக்குத் தாம்புர சாதன
ப் பட்டைய மெளுதித் தானம் பண்ணி
க் கொடுத்தேன் செகவீர ராம செ
க வீர பாண்டியக் கட்ட பொம்ம நா
யக்கரோம் உ யிந்தப் பட்டையமெளு
தினேன ராயசங் குமாரசுவாமியா
பிள்ளை குமாரன் சிவசுப்பிறமணின்ய உ

ஆவணக்காப்பக ... சென்னை-600 008. 18243